# அருள்மிகு
# ஸ்ரீ கடலாட்சியம்மன் ஆலய
# வரலாறு



நூல் ஆசிரியர்

திருமதி. சுந்தரமதி வேதநாயகம்

**தலைப்பு :**
அருள்மிகு ஸ்ரீ கடலாட்சி அம்மன் ஆலய வரலாறு

**ஆசிரியர் :**
திருமதி. சுந்தரமதி வேதநாயகம்

**பதிப்பு :**
21.06.2010

**அச்சுப் பதிப்பு :**
**ஆதவன் அச்சகம்,**
அரசடி, மட்டக்களப்பு.
தொலைபேசி : 065-2222076

**வெளியீடு :**
ஸ்ரீ கடலாட்சி அம்மன் ஆலய பரிபாலன சபை,
நாவலடி, மட்டக்களப்பு.

**விலை :**
ரூபா : 195/=

# சமர்ப்பணம்

**இன்னருள் புரிந்த**

**அன்னைக்கும்,**

**ஈன்றெடுத்த பாசமிகு**

**பெற்றோருக்கும்,**

**இறைபதம் அடைந்த**

**நாவலடி மக்களுக்கும்**

**மலர்**

**சமர்ப்பணம்**



## ஆசியுரை



ஈழத்திருநாட்டின் கிழக்கு கரையோரமாக அமைந்துள்ள மட்டக்களப்பு மாவட்டம் சக்தி வழிபாட்டிற்குப் பெயர்பெற்ற திருநிலப்பரப்பாகும். இப்பிரதேசத்தில் மாரியம்மன், பேச்சியம்மன், காளியம்மன், கடலாட்சியம்மன் போன்ற பல நாமங்களிலும், ரூபங்களிலும் அன்னை பராசக்தி போற்றி வணங்கப்படுவது கண்கூடு.

பெரும்பாலும் இவ்வாலயங்களில் நடைபெறும் பூசைகள், திருவிழாக்கள், சடங்குகள், ஆகமமுறையோ அல்லது சக்தி வழிபாடுக்குரிய தந்திரமுறையோ பின்பற்றப்படாமல், பரம்பரைபரம்பரையாக முன்னோர்களால் பின்பற்றப்பட்டுவந்த பத்ததிமுறையே பின்பற்றப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடலும் கடல்சார்ந்த நெய்தல் நிலப்பிரதேசத்தில் வாழும் பெருங்குடி மக்களின் காக்கும் தெய்வம் கடலாட்சி அம்மன். கடலை ஆளுகின்ற (ஆட்சி செய்கின்ற) இந்த அம்மன் கடலையும், அதனை வாழ்வாதாரமாகக் கொண்டு தொழில்புரிவோரையும் கண் போலகாத்து ஆளுகின்ற தெய்வமாகப் போற்றப்படுகின்றது.

பகவான் ஸ்ரீ ராமகிருஸ்ணர் கூறுவர் **"வழிபாட்டு முறை எதுவாக இருந்தாலும், செய்யப்படும் வழிபாடு இறைவனை நோக்கியதாக இருந்தால் அத்தகைய வழிபாட்டில் பங்குபற்றுவதைத் தவறவிடாதே"** என்று.

இந்த நூலின் ஆசிரியர் கடலாட்சியம்மன் ஆலய வரலாறு,

அம்பிகையின் வரலாறு, வழிபாட்டு முறைகள், சடங்குகள் போன்று பல்வேறு அம்சங்களில் சிறப்பாக ஆராயந்து எழுதியிருக்கிறார். அவரது முயற்சி பாராட்டத்தக்கது.

அவர் மேலும் மேலும் இத்தகைய முயற்சிகளிலே ஈடுபட்டு இந்த மாவட்டத்தில் இலைமறைக்காயாக காணப்படும் பல ஆலயங்களின் வரலாறுகளையும் வெளியிட்டால் அவரது சேவை மேலும் மேலும் பாராட்டத்தக்கதாகும்.

பகவான் ஸ்ரீ ராமகிருஸ்ணர், புனித அன்னை ஸ்ரீ சாரதாதேவி ஆகியோரினது நல்லாசிகள் என்றும் கிடைக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

**இறைபணியில்**

சுவாமி அஜராத்மானந்தா

**சுவாமி அஜராத்மானந்தா**

**SWAMI AJARATMANANDA**

SWAMI-IN CHARGE

RAMAKRISHNA MISSION

RAMAKRISHNAPURAM, BATTICALOA,

SRI LANKA

හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
Department of Hindu Religious and Cultural Affairs

| | | | | | |
|---|---|---|---|---|---|
| අධ්‍යක්ෂ பணிப்பாளர் Director | 2552643 | ෆැක්ස් தொலைநகல் Fax | 2552825 | විද්‍යුත් තැපෑල மின் அஞ்சல் E-Mail | hindudir@yahoo.com |
| සාමාන්‍ය பொது General | 2552641 | | | වෙබ් අඩවිය இணையதளம் Web site | www.hindudept.gov.lk |
| මගේ අංකය எனது இல. My No. | HA/05/BT/[illegible] | ඔබේ අංකය உமது இல. Your No. | | දිනය திகதி Date | 09 - 06 - 2010 |


## வாழ்த்துச் செய்தி

இந்து சமயத்தில் சக்தியானவள் இறைவனின் அருளாக வைத்துப் போற்றப்படுபவள், இவ்வருட் சத்தியானவள் உயிர்களின் பொருட்டு பெண் வடிவங் கொண்டு விளங்குகிறாள். அச்சக்தியின் வடிவங்களில் ஒன்றாக கடலாட்சி அம்மனும் மக்களால் போற்றி வழிபடப்படுகின்றாள். அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் நாவலடிப் பிரதேசத்தில் அமைந்துள்ள கடலாட்சி அம்மன் ஆலயம் சிறப்புப் பெற்ற விளங்குகின்றது. இவ்வாலயமானது பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இத்தகைய சிறப்புடைய இவ்வாலய வரலாற்றைத் தொகுத்து நூலாக வெளியிடுவது பாராட்டிற்குரியதாகும்.

திருத்தல வரலாறு என்பது ஒரு தலத்தின் மூர்த்தி, தீர்த்தம் என்பவற்றின் பெருமைகளைக் கூறுவதோடு அவ்வூர் மக்களின் வரலாற்றுப் பெருமை வாழ்க்கைச் சிறப்பு போன்றவற்றைக் கூறுவதாகவும் அமைகின்றது. இதன் மூலம் அத்தலத்தை வழிபடுவோர் மனதில் பக்தி பெருகி அவர்களின் மனம் ஒன்றி வழிபடுவதற்கு உறுதுணையாக இருக்கும். அந்த வகையில் நாவலடி கடலாட்சி அம்மன் ஆலய வரலாற்றைப் படிப்போர் மனதில் பக்தி பெருகுவதுடன் தமிழரின் வரலாற்றைப் பாரம்பரியமும் நிலைநாட்டப் பெறுகின்றது.

இன்றைய காலகட்டத்தில் இலங்கைத் தமிழர் மற்றும் இந்துக்களைப் பொறுத்தவரையில் வரலாற்றாதாரங்களை ஆவணப்படுத்தி வைத்தல் மிக அவசியமான தேவையாக உள்ளது. இவையே இலங்கைத் தமிழரின் பாரம்பரியம் மற்றும் பக்தி பாராம்பரியம் என்பற்றின் மேன்மையை கால ஓட்டத்தில் நிருபிக்கத்தக்கனவாக அமையும் இத்தகைய செயற்பாடுகள்

மேற்கொள்ளப்படாவிடின் எமது முன்னோர் ஆற்றிய அற்புதமான கைங்கரியங்களின் உயர்வை நாமும் நமது இளைய சந்ததியும் அறிய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுவிடுவோம்.

அந்த வகையில் இந்நூலின் ஆசிரியரது பணி பாராட்டத்தக்கதாகும். இது போன்ற அரிய முயற்சிகளில் அவர் மேலும் ஈடுபட்டு சிறந்த பல நூல்களை வெளியிட வேண்டுமென மனமார வாழ்த்துகின்றோம்.

**சாந்தி நாவுக்கரசன்**
**பணிப்பாளர்.**

சாந்தி நாவுக்கரசன்
பணிப்பாளர்
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
இல. 248-1/1, காலி வீதி, கொழும்பு-04.



## வாழ்த்துரை

மட்டக்களப்பில் மிகப் பிரபல்யம் வாய்ந்த அம்மன் ஆலயத்தில் ஒன்றான கடலாட்சியம்மன் ஆலய வரலாறு பற்றி கூறும் இம்மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

நாவலடி கடற்கரையோரத்தில் கம்பீரமாக காட்சியளிக்கும் கடலாட்சியம்மன் ஆலயமானது சுனாமியின் பின்னர் புதுப்பொலிவு பெற்று வீற்றிருக்கிறது. இவ் ஆலய வரலாற்றினை கூறும் இந்நூலானது தற்போது இதுபற்றி அறியாத மக்களுக்கும், இனிவரும் சந்ததியினருக்கும் இவ்வாலயத்தின் வரலாறு, சிறப்பு, அதிசயங்கள் பற்றி அறிய வாய்ப்பிருக்கின்றது. அதிலும் அம்மன் ஆலய சடங்கு முறைகள் பற்றி எந்தவொரு இந்து மக்களும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். எனவே இவ் அரிய முயற்சியை பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

திருமதி.சுந்தரமதி வேதநாயகம் கலைத்துறையில் ஆற்றிய பணி பல உள்ளன. அதிலும் இலக்கியத்துறை, கவிதை, சிறுகதை, நாடகம் என பலதுறைகளில் ஈடுபாடு கொண்டவர்.

எனவே அவரின் இவ் அரிய முயற்சியின் பயனாக கடலாட்சியம்மனின் வரலாறு எனும் இந்நூல் வெளியாவதையிட்டு அவரை பாராட்டுவதோடு அவருடைய சேவை மென்மேலும் விரிவடைய வேண்டும் எனவும் வாழ்த்துகின்றேன்.

**திருமதி.கலாமதி பத்மராஜா,**
**பிரதேச செயலாளர்,**
**மண்முனை வடக்கு,**
**பிரதேச செயலகம்.**



## அணிந்துரை



மட்டக்களப்பு தமிழகத்தின் உயிர்த் துடிப்பான சக்தி வழி பாட்டின் மரபின் ஒரு தெய்வீக வரலாற்று செழுந்தேன் அமுதினை படிக்கும் பாக்கியம் கிடைத்தன. திருமதி.சுந்தரமதி வேதநாயகம் எனும் ஒரு பக்தையின் தெய்வீகப் பாடையலாகப் அன்னை கடலாட்சி அம்மனுக்கு பாணக்கம், துள்ளுமா, சக்கரைப் பொங்கல் கலந்த படையில் போல் இப்புனிதமான சிந்தை நிறைந்த சிந்தனைப் படையல் தித்தித்தது.

பதினெட்டுத் தலைப்புகளில் சுருக்கமாக ஆழ்ந்த உருக்கமாக அறிவின் பெருக்கமாக அன்பின் நெருக்கமாக இன் நூலாசிரியையின் நுன்மான் நுழை புலம் ஆழத் தெரிந்தது. வியப்புற்றேன்.

மட்டக்களப்புத் தமிழகம் ஒரு சக்திய பூமி தெய்வீக அலைகளின் ஆர்ப்பரிப்பின கானத்தில் உயிர்ப்புக் கொள்ளும். புனித பூமி இலங்கைத் திருநாட்டில் பண்டைய மானிடத்தின் பண்பாட்டுக் கோலத்தை பூரணமாக மரபுவழி தளராது கட்டிக் காக்கும் தனிப் பெரும் தமிழகம் மட்டக்களப்புத் தமிழகம் மூன்று சுயம்பு லிங்கப் பதிகளையும், ஆறுபடை வீடுகளையும் தன்னகத்தே கொண்டிருந்தாலும் மிகப் பெரும் சக்தி தலங்களை அற்புதமாகக் கொண்ட நன்னாடு இத்தேன்நாடு. மாரியம்பாள், காளியம்பாள், பேச்சியம்பாள், எனும் முப் பெருந் தேவிகளை முறையே வாலை, திரிபுரை, புவனை என்ற மந்திர வழக்காற்றில் வழிபாடு செய்வதோடு ஆகமத்திற்கு உட்படாத கடலாட்சி துரோபதை, கண்ணகை, ஆகிய அம்மன் கலைகளையும் குலதெய்வமாக வழிபடும் மரபும் இம் மண்ணிலே உயிர்ப்புக் கொள்கின்றது.

இவ்வகையில் இன் நூலாசிரியையின் இவ்வரலாற்று நூல் மட்டக்களப்பு நாவலடி கடலாட்சி அம்மனைப் பற்றிய வரலாற்று வழிபாட்டு நெறியாகிய தெய்வீக நூல்.

இன்நூலிலே அவர்காட்டுகின்ற பல விடயங்கள் சிந்தைக்கு விருந்தாய் சிந்தனைக்குத் தூண்டுதலாய் அமைகின்றன. அவ்வகையில் கடலாட்சி அம்மன் இலங்கையில் வேறு இடங்களில் அமையாத வழிபாட்டு

மரபு ஒன்று இம் மட்டக்களப்பு மண்ணிலே இருப்புக் கொள்கின்றது. கடலாட்சி அம்மன் கடல் சார்ந்த தெய்வமாகக் கருதப்படுகின்றது. "வருணன்மேய பெருமணல் உலகமும்" என்ற தொல்காப்பியத்தின் கூற்றுக்கு ஒப்ப பெருமணல் உலகமாகிய நெய்தல் நிலமாகிய கடல் சார்ந்த பூமிக்கு வருணனே தெய்வமாக்கப்பட்டான். ஆனால் இதற்கு முன்னமே தாய்த் தெய்வ வழிபாட்டின் தொன்மம் இயற்கை முதல் அனைத்தையும் தெய்வமாக மதிப்பிடு செய்து பூமி, ஆகாசம், நீர் நிலைகள் ஆகியவற்றைப் பெண்ணாகவே கண்டனர். அதில் வடமொழியில் கங்காதேவி என்ற பதமே தமிழில் நீர்நங்கை, ஆழிமங்கை, கங்கையாள் சமுத்திரா தேவி, கடல் அரசி, என்ற சொற்பதங்கள் நீருக்கும் பெண் வழிபாட்டிற்குமான தொடர்பினை கோடிட்டுக் காட்டுகின்றது, இவ் வகையில் இன் நூலின் கண் காணப்படும் கடலாட்சியம்மன் நாவலடி, பெரிய கல்லாறு, ஆகிய இரண்டு இடங்களிலும் கோயில் அமைத்து வழிபடும் சிறப்பு மிக்கவளாக காணப்படுகின்றாள். ஆனால் வெருகல் தொடக்கம் பொத்துவில் ஈறாக கடல் சார்ந்த தொழில் நிலை மக்கள் ஆண்டுக்கு ஒரு முறை கடற்கரையில் தாங்கள் சார்ந்த குடும்பங்கள் ஊடாக இப் பூசையை செய்து வருகின்றனர். அக்கரைப்பற்று கோளாவில் வடக்கில் மாரியம்மனின் பள்ளயம் முடிந்த பின் கடலாட்சி அம்மனுக்கு சடங்கு செய்யும் மரபு இன்றுவரை பேணப்பட்டு வருகின்றது. இக் கடலாட்சியம்மனை திரைசேர் மடந்தை என்றே பத்ததிகள் அழைக்கின்றன. கடலாடசியம்மன் சடங்கு தனித்துவமானது மாரியம்மன், காளியம்மன், பேச்சியம்மன் சடங்குகளை விட கடலாட்சியம்மன் சடங்கு சிறப்ப மிக்க கிரியைகளை தன்னகத்தே கொண்டது. இதனூடான பல விடயங்களை இன் நூலிலே நாம் அவதானிக்கலாம். நாவலடி கடலாட்சியம்மன் ஆலய வரலாற்றின்படி மாரியம்மனும், கடலாடசியம்மனும் கலந்த ஓர் வழிபாட்டு மரபாக தனித்திருக்கின்றது. இவ்விரண்டு வழிபாட்டு சென்நெறி ஒழுங்கினை இன் நூலாசிரியர் கவனமாக அணுகி இருக்கின்றார். ஏனெனில் மட்டக்களப்பு சடங்கு முறை ஆலயங்களில் நரசிங்க வைரவர் எனும் தெய்வம் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அப்படியொரு தெய்வம் வரலாறு ரீதியாக இல்லை. நரசிம்ம அவதாரம் விஷ்ணு பகவானுடையது. வைரவர் அவதாரம் சிவனுடைய உருவத் திருமேனிகளில் ஒன்று. விஷ்ணு புராணம் சிவபுராணங்களில்நரசிங்க வைரவரைப் பற்றியோ அல்லது நரசிங்க வைரவ அவதார செயற்கை பற்றிக் குறிப்பிடப்படவில்லை. விஷ்ணு புராணத்தில் வைரவருக்கும் விஷ்ணுக்கும் நடந்தயுத்தம் பற்றி பேசப்படுகின்றது. ஆனால்

மட்டக்களப்பில் இரண்டு தெய்வங்களையும் ஒரு இடத்தில் வைத்து வழிபட்டதின் காரணமாய் நரசிங்க வைரவர் என்ற சொற்பதம் பிழையாகப் பேணப்பட்டதோடு ஒரு பாடலில் "நரசிங்க ரூபம் தரித்த வைரவா" "நாய் வாகனத்தில் ஏறிய வைரவா" என்று முரண்பாடான செய்தி இப்பாடலில் குறிக்கப்பட்டுள்ளது. இதை வருங்கால தலைமுறையினர் ஆராய்வின்றி ஏற்றுக் கொள்ளும் பொது நரசிங்கவைரவர் என்றே ஏற்றுக் கொள்வர். இதே போலத்தான் நாவலடி கடலாட்சியம்மனையும் மாரி கடலாட்சி என்று ஏற்றுக் கொள்ளும் சூழ்நிலை ஏற்படும். இதை இன் நூலாசிரியை மிகக் கவனமாக மாரியமமன் வேறு, கடலாட்சியம்மன் வேறு என்று வரலாற்றின் ஊடாக சுட்டுகின்றார். அடியேனும் பல ஆண்டுகளுக்கு முன்பு இவ்வாலயத்தில் சொற்பொழிவு செய்வதற்காக சென்றிருந்த வேளையில் இச் சடங்கினை அவதானித்துள்ளேன். மிகச் சிறப்பான பக்தி பூர்வமான சடங்காக இருந்ததையும் இம் அம்மனின் மேல் நாவலடி மக்கள் கொண்ட பக்தி ஈடுபாட்டையும் கண்டு மகிழ்ந்திருக்கின்றேன். அந்த மகிழ்வின் நெகிழ்வே இன் நூலிற்கான எனது மகிழ்வுரையாகும். இன் நூலாசிரியை சுந்தரமதி வேத நாயகம் பல வகையான ஆற்றல்களில் திறன் கொண்ட தெளிவுடைய வராக மிளிர்கின்றார். அவரின் ஆற்றலின் வெளிப்பாடுகள் பல விடயாகள் வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளது. உண்மையில் மட்டக்களப்பில் இத்தகு வரலாற்று நூல்களும் வழிபாட்டு மரபுகளும் உதிப்பு பெற்றால் இம் மண்ணின் உண்மைத்துவம் புத்துயிர்ப்புப் பெறும். அதற்கு இன் நூல் ஓர் சான்று. இன் நூலாசிரியையின் பக்தியின் உருக்கமும், கடலாட்சி அம்மனின் கருணையும் அன்பின் ஈர்ப்பும் முதற் படைப்பாக இவ் ஆக்கத்தை இத்தாயின் மலரடியில் படைக்கின்றாள். நான் முன்னமே கூறியது போல் பாணக்கம், துள்ளுமா, சக்கரைப் பொங்கல் போல் இன் நூலில் உள்ள விடயங்கள் கலந்து கனித்து இனிக்கின்றன. இவ் இனிப்பு மென் மேலும், தித்திக்க அன்னையின் அருள் இன் நூலாசிரியருக்கு சித்திக்கட்டும். இவரின் புகழ் எத்திக்கும் முகிழ்ந்து மணம் பரவட்டும். என மனதார வாழ்த்தி இவரின் பணியை தலையார வணங்குகின்றேன்.

**இவ்வன்னம்**

**விஸ்வப் பிரம்மம் வை.இ.எஸ்.காந்தன் குருக்கள்.**

**ஸ்ரீ காளி புரம்**
**பெரிய போரதீவு**
**04.06.2010**



## சிறப்புரை

**"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே"**

எனும் பொய்யா மொழிப் புலவரின் கூற்றிற்கமைவாக தமக்கு வாய்த்த தாய், தந்தையின் நல் வழிகாட்டலினால், தம் கிராமத்தின் பெருமையை வெளிக்கொணரும் கடமையை மூலதனமாகக் கொண்டு தமக்கு அருளினை வழங்கி வழிகாட்டும் குல தெய்வமாகிய கடலாச்சி அம்மையின் சரித்திர அற்புதங்களையும், ஆற்றல்களையும் ஊராரும், உலகத்தோரும், வருக்காலத்தவரும் அறியும் வண்ணம் வெளியிடும் திருமதி.சுந்தரமதி-வேதநாயகம் அவர்களின் முயற்சி போற்றுதலுக்குரியதாகும். எமது அழிந்துபோகின்ற கலை, கலாசாரப் பண்பாட்டுப் பாரம்பரிய சமயச் சடங்குகள் மூத்தோரின் இந்த வழிபாட்டுப் பாரம்பரியங்களை ஞாபகப்படுத்துகின்றன.

காலம் காலமாக ஏற்படும் பிரளயங்களினால் எம்மக்களின் பூர்வீகத் தன்மைகள் பலவும் மறைந்து போன வேளையில், நாமெல்லோரும் அறியக் கூடியதாக 2004ம் ஆண்டில் ஏற்பட்ட சுனாமியானது மேலும் பல ஆவணங்களையும், பெற்றோரையும் கூடக் கவர்ந்த போதும்

**"அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும் பெருமை முயற்சி தரும்"**

என்னும் வள்ளுவன் வாக்கிற்கமைவாக, இப் பெருமை தரும் முயற்சியில் மனம் தளராது முயன்றுள்ளார். இவரது முறச்சிக்குக் கடலாச்சி அம்மையும் கனவின் மூலம் உள்ளுணர்வு மூலமும் ஊக்கமளித்தமையும் அற்புதமேயாம்.

**"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்."** என ஔவையார் வாக்கிருக்க கோவிலில்லா ஊரிலிருந்து வருபவர்களிற்கு சடங்கு எதற்கு? என அமிர்தகழி அடியார்களைக் கொண்டு கேட்க வைத்து, நாவலடி மக்களிற்கு உணர்வூட்டித் தமக்கான ஆலயத்தை அமைத்துக் கொண்ட அன்னையானவள் இயற்கையால் ஏற்பட்ட மாற்றங்களின்பின்னர் தமது அடியவர்களின் பங்களிப்புடன் புதுப்பொலிவு கண்டிருக்கின்றாள்.

ஆலயத்தில் திருவிழா என்றால் அது ஊர் எங்கும் பெருவிழாவாக அமைவதற்கிணங்க இவ்வூர் மக்களும் திருவிழாவைப் பெரு விழாவாகக் கொண்டாடும் மனப்பாங்குடன் பக்தி மயமாகத் தெரு வீதிகளெங்கும் மாவிலைத் தோரணங்கள், அலாங்கார வளைவுகள், பூரண கும்பங்கள் வைப்பதுடன், அயற் கிராமங்களிலிருந்தும், வெளியூர்களிலிருந்தும் வரும் பக்தர்களை வரவேற்று உபசரிப்பதிலும் காட்டும் ஆர்வத்தினை எனது கண் கூடாகவே கண்டு வியந்துள்ளேன்.

நான் இவ்வாலயத்திற்குச் சொற்பொழிவுகளிற்காக வரும் சந்தர்ப்பங்களில் இந்நூலாசிரியரின் பெற்றோராகிய சோமசுந்தரம், பூரணமதி தம்பதியினரின் இல்லத்தில் தங்கியிருக்க வாய்த்த சந்தர்ப்பங்களில் அவர்களின் இறை பக்தியையும், திறமைகளையும், நற் பண்புகளையும், பெருமைகளையும் அவதானிக்க முடிந்தது. திருமதி. பூரணமதி அவர்களை இக்கிராம மக்கள் அனைவரும் "**பெரிய ரீச்சர்**" என அழைப்பதன் மூலமும் திரு.சோமசுந்தரம் அவர்களை சின்னையா என அழைக்கப்படுவதன் மூலமும் அவர்களைக் கௌரவிட்பதைக் கண்டு மகிழ்ந்துள்ளேன்.

அவர்களின் பாரம்பரியப் பண்புகளும், கடலாச்சி அம்பாளின் அருட்கடாட்சமும், இந்நூலாசிரியரை மூன்றாவது வயதிலேயே கண்ணன் நடனத்திற்கானபரிசாக தங்க மோதிரம் பெற்றது தொடக்கம் மட்டக்களப்பு மாவட்டத்தின் கலை இலக்கியப் பணிகளில் பெரும் பங்காற்ற வாய்த்துள்ளது.

**"பெருமை உடையவர் ஆற்றுவர் ஆற்றின்**
**அருமை யுடைய செயல்"**

என்பது போல இவரது இவ்வெளியீட்டினால் பலரும் பயன்பெற வாழ்த்துகின்றோம். மேலும் உலகில் முதலில் தோன்றி உருவான ஆணும், பெண்ணும் குழந்தையைப் பெற்றனர். அந்த ஆணோ,தன்னைப்போல ஒரு குழந்தையைப் பெற்றுத் தந்த மனைவியைத் தெய்வமாக மதித்தார். அப்பிள்ளையும் தன்னை, அன்பு, கருணை, பக்தி, அடக்கம், ஒழுக்கம் மூலம் வளர்ந்த பெற்ற தாயைத் தெய்வமாகக் கருதியதனால் இந்துக்கள் மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற படிகளில் முதலில் பெற்ற தாயைக் கடவுளாக, அன்பின் இருப்பிடாக கண்டதன் மூலம் தாய்த் தெய்வ வழிபாடு ஆரம்பமானது. நன்றிக்கடன் செலுத்துபவர்கள் என்ற வகையில் இன்னருள் புரிந்த

அன்னைக்கும், பெற்றோருக்கும், சுனாமியினால் இறைபதமடைந்த நாவலடி மக்களுக்கும் இம்மலர் சமர்ப்பணமாவதனால் அவர்கள் ஆத்மா சந்தி பெறும் என்ற ஆசிரியரின் எழுச்சி போற்றற்கரியது.

நன்றி

**இல. 16, சின்லெப்பை வீதி,**

**மட்டக்களப்பு.**

**065-2223234**

**சு.சிவப்பிரகாசம்**

**"சித்தாந்த வித்தகர்"**

**"சிந்தனைச் செம்மல்"**

**"சைவநெறிக் காவலர்"**

**"சிவநெறிச் செம்மல்"**

**"மட்டக்களப்பு சைவத் திருநெறிமன்ற உப தலைவர்"**

**"உலகத் தமிழர் பண்பாட்டுப் பேரவை உள்துறை உறுப்பினர்"**



மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட

**இந்து ஆலயங்களின் ஒன்றியம்**

**FEDERATION OF HINDU TEMPLES**

FOR BATTICALOA AND AMPARAI DISTRICTS



## சிறப்புரை

**"மேன்மை கொள் வைச நீதி விளங்குக உலகமெல்லாம்"**

**"அவனருளாலே அவன்தாழ் வணங்கி"**

## மட்டக்களப்பு நாவலடி கடலாட்சியம்மன் ஆலய வரலாறு வெளியீடு பற்றி ஒரு துளி

மட்டக்களப்பு தமிழகத்தில் வைச மக்களிடையே கிராமியத் தெய்வங்கள் அல்லது சிறு தெய்வங்கள் வழிபாடு மிகவும் அழகாக வேரூன்றியுள்ளது. தாய்த் தெய்வ வழிபாடு என்ற அடிப்படையில் கண்ணகியம்மன், காளியமமன், பேச்சியம்மன், மாரியம்மன் கடலாட்சியம்மன் என பல வடிவங்களில் இத் தெய்வ வழிபாடு நடைபெறுகின்றது.

இதே தாய் தெய்வ வழிபாடு தமிழகத்தில் காஞ்சி காமாட்சி, காசி விசாலாட்சி, மதுரை மீனாட்சி என பல வடிவங்களில் வழிபாடு செய்யப்படுகின்றது. தமிழகத்தில் ஆகம முறைப்படி வழிபாடு செய்யப்படும் அதே சமயத்தில் கிழக்கிலங்கையில் பத்ததி முறையில் வழிபாடு நடைபெறுகின்றது.

இவ் வழிபாடுகளில் பெண்கள் மிகுந்த பயபக்தியுடன் ஈடுபடும் அதேவேளை ஆண்கள் ஆலய நிருவாகத்திலும், பூசை நிர்வாகத்திலும் ஈடுபடுவதை காண முடிகின்றது. எவ்வாறாயினும் இத் தாய் தெய்வ வழபாடு ஊர்மக்களை அப்படியே ஆட்கொண்டிருப்பதை நாம் அறிவோம்.

இந்த அம்மன் வழிபாட்டு முறையில் நாவலடி கடலாட்சியம்மன் அலய வழிபாடு விஷேடமாக குறிப்பிடப்பட வேண்டிய தொன்றாகும். கிழக்கிலங்கையிலே கிழக்கு கரையோரம் ஆத்மீக அலைகள் செறிந்து விளங்குகின்றது. என்பதை உகந்தை முதல் வெருகல் வரை உள்ள கடற்கரைத் தளங்களைக் கொண்டு நாம் மட்டிடலாம். மட்டக்களப்பைப் பொறுத்தவரை, நாவலடி கடலாட்சியம்மன், திருச்செந்தூர், முருகன், நாவலடி சப்தரிஷி காயத்திரியம்மன் ஆலயங்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

கடலாட்சியம்மன் போன்ற அம்மன் ஆலயங்களில் ஆண்டுக்கொரு முறை திருக்கதவு திறந்து சடங்குகள் நடாத்தி உற்சவம் நடைபெறுகின்றது.

இன் நூலின் ஆசிரியர் திருமதி. சுந்தரமதி வேதநாயகம் இன் நூலினை வரலாற்றுப் பின்னணியுடன் எழுதப்பட்டிருப்பது மனங்கொள்ளத்தக்கது. ஆலய அமைவிடம் பற்றி கூறுமிடத்து அதனோடிணைந்த ஆலயங்களைப் பற்றியும் நூலாசிரியர் கூறிப்பிடுகின்றார்.

தொடர்ந்து புன்னையடி நவசக்தி விநயாகர் ஆலயத்தை கடந்து சென்றால் பச்சை பவள மேனியில் பதக்கம் தரித்த மாலையுடன் பட்டாடை உடுத்தி பரவசப்படுத்தும் முகப்பச் சிலையுடன் கூடிய அருள் மிக கடலாட்சி அம்மன் ஆலயம்அமைந்துள்ளது என நூலாசிரியர் குறிப்பிடுகின்றார்.

கவிதை நடையில் அமைந்த இவ்வசனங்கள் நூலாசிரியரின் மொழிச் சிறப்புக்கும் உதாரணம் ஆகின்றன. மேலும் மட்டக்ளப்பு மாவட்டத்திலுள்ள ஏனைய கடலாட்சியம்மன் ஆலயங்கள் பற்றியும் குறிப்பிடுகின்றார்.

அவையாவன பெரிய கல்லாறு - கடல் நாச்சியம்மன் ஆலயம், வெல்லாவெளி கடலாட்சியம்மன் ஆலயம், நாவலடி கடலாட்சியம்மன் ஆலயம் என்பனவாகும். இருப்பினும் மட்டக்களப்பு நாவலடி கடலாட்சியம்மன் ஆலயமே பிரசித்தி பெற்ற ஆலயமாகும்.

பொதுவாக இவ்வாலயம் கடற்றொழில் செய்வோரைக் காக்கும் தெய்வமாகக் கொள்ளப்பட்டாலும், கிழக்கிலங்கை கிராமங்கள் அனைத்திற்கும்காவல் தெய்வமாகவே கருதப்படுகின்றது.

இன் நூலின் இறுதியில் கடலாட்சியம்மன் காவியம் இணைக்கப்பட்டிருப்பது மேலும் சிறப்பானதாகும். இன் நூலாசிரியர் திருமதி. சுந்தரமதி வேதநாயகம் மறைந்து செல்லும் சைவ வரலாற்றுக்கு ஆக்கம் கொடுத்த இம்மலரினை வெளியிடுவது காலத்தின் அவசிய தேவையாகும்.

திருமதி. சுந்தரமதி வேதநாயகம் அவர்களுடைய பணி பாராட்டப்பட வேண்டிது இதே போன்று மேலும் பல சைவாலயங்களின் வரலாற்றை ஆவணமாக்கி வெளியிட வேண்டும் என மனதார வாழ்த்துகின்றோம்.

**“இந்துவாக வாழ்வோம் இந்து தர்மம் காப்போம்”**

**S.PUSPALINGAM J.P**
General Secretary
Federation of Hindu Temples
Kallady, Batticaloa.

**இந்து ஆலயங்களின் தலைமை**
**ஒன்றியத்தின் சார்பாக.**

## அறிமுகவுரை



ஸ்ரீ கடலாச்சியம்மன் ஆலய வரலாற்று நூலின் ஆசிரியை திருமதி. சுந்தரமதி வேதநாயகம் (நிலா) அவர்கள் **"கருவிலே திரு"** என்பதற்கு ஏற்ப கலை இலக்கியத்துறைக்குப் புதியவரல்ல.

இவர் தனது குழந்தைப் பருவத்தில் இருந்தே, இயற்கையாக இயல்பாக கலை ஆர்வத்தினாலே ஈடுபாடு கொண்டு இயங்கி வருகிறார். என்பதனை இவரது எண்ணத்தினாலும், செயலாலும் மேலும் இவர் தந்த தகவல்களினாலும் அறிய முடிகிறது. அது மட்டுமின்றி நான் அறிந்தவரையில் 1999 காலப் பகுதியில் கடும் போர்க்கால சூழலிலும், எமது மட்டக்களப்பு மாவட்ட தமிழ் எழுத்தாளர் பேரவையில் இணைந்துகொண்டார். ஒரு உறுப்பினராக இணைந்து கொண்ட தங்கை சுந்தரமதி-வேதநாயகம் அவர்கள் நிர்வாக உறுப்பினராக இருந்து இன்று அப்பேரவையின் செயலாளராக எல்லோரினதும் மனப்பூர்வமான விருப்பத்தின்பேரில் தெரிவு செய்யப்பட்டு இயங்கி வருகிறார். என்றால் இது தங்கையின் இலக்கிய ஆர்வத்தினதும் ஈடுபாட்டினதும் சிறந்ததோர் எடுத்துக் காட்டு என்றுதான் கூறவேண்டும்.

எந்த ஒரு மனிதனிடத்திலும் அறிவாற்றல் உண்டோ, இல்லையோ ஆனால் தான் விரும்பிச் செயல்பட எண்ணும் துறையில் இறங்குவதற்கும், ஈடுபடுவதற்கும் முன் தற்துணிவும், தன்னம்பிக்கையும் இருக்க வேண்டும். அதுவும் எந்தவித உள் நோக்கமுமில்லாமல் திறந்த, சிறந்த நோக்கோடு ஈடுபட எண்ணினால் அந்த நோக்கம் நிட்சயம் நிறைவேறியேயாகும். இதைத்தான் வள்ளுவப் பெருந்தகை அவர்களும்;

**"எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்**
**திண்ணியராகப் பெறின்"**

என்கிறார்கள். மேற்கூறியப தங்கை திருமதி. சுந்தரமதி வேதநாயகம் அவர்களிடம் தற்துணிவும், தன்னால் எதையும் சாதிக்க முடியும் என்ற தன்நம்பிக்கையும், பலமாகவும், நயமாகவும் உண்டு. என்பதன் வெளிப்பாடுதான் இந்நூல்.

ஆம் எடுத்த எடுப்பிலே கடலாச்சியம்மன் ஆலய வரலாற்றினைத் தேடி ஆய்ந்து ஆவணப்படுத்தி நூல் வடிவில் கொண்டுவருவதென்பது சாதாரண விடயமல்ல. எல்லோருக்கும் இந்த தற்துணிவும், தன்னம்பிக்கையும் வருவதுமல்ல, சுயமாகச் சிந்திப்பதிலும் அதனை மனதில் வைத்து அஞ்சி அஞ்சி இருக்காது துணிந்து சுதந்திரமாகச் சொல்வதிலும், சொன்னதைச் செய்துமுடிப்பதிலும் வல்லவர் என்றுதான் சொல்ல வேண்டும்.

இத்தனைக்கும் தங்கையின் துணைவர் திரு.ம.தேவநாயகம் அவர்களும், தங்கையின் பிள்ளைச் செல்வங்களும் அமைந்து இருப்பதுபோல் எல்லோருக்கும் அமையாது! ஆம்! இது வெறும் புகழுரை அல்ல. நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம் என்று கூறிய அறிஞர்களின் கூற்றுக்கு ஒப்ப அவரின் கள்ளம் கபடமற்ற வெள்ளையுள்ளம் போலவே வாய்த்த குடும்பமும் தான் எல்லா வெற்றிக்கும் காரணமெனலாம்.

எனவே தங்கை திருமதி.சுந்தரமதி வேதநாயகம் அவர்கள் இந்நூல் வெளிவருவதோடு நிறுத்தி விடாமல் மேலும் பல நூல்களைத் தேடிப் படித்தும் பல ஆய்வுகளாக, கவிதை, சிறுவர் இலக்கியம் சிறுகதை, நாவல்களாக எழுதி சமுதாயத்துக்கு உருப்படியான நற்பணியாற்ற வேண்டும் என வேண்டியும் வாழ்த்தியும் விடைபெறும்.

**என்றும் பணிவுள்ள**
**ஆ.மு.சி. வேலழகன்**
**05-06-2010**

**கலைமகள் வீதி**
**தாமரைக்குளம்**
**தாழங்குடா - 02**
**ஆரையம்பதி**



# என்னுரை



சமயம், கலை, கலாசாரம், பண்பாடு போன்ற மேன்மைகளை அறிந்து கொள்வதற்கு அச்சமூகம் சார்ந்த வரலாற்றுத் தரவுகளை அறிந்து கொள்வது மிகவும் அவசியமானதும் பயனுள்ளதுமானதாகும். மீன்பாடும் தேன் நாட்டின் கிழக்கே எழில் வளங்கள் நிறைந்த நாவலடிக் கிராமத்தில் அருள் மிகு ஸ்ரீகடலாச்சி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது. நாவலடிக் கிராமத்திற்கு பெருமை சேர்த்த விடயங்களுள் ஒன்று காவல் தெய்வமான அம்மனின் ஆலயமும், மற்றையது மக்களுக்கு வாழ்வாதாரம் அளித்த வங்கக்கடலுமாகும்.

**2004ம் ஆண்டு நாவலடி வாழ் மக்களின் வாழ்வில் மறக்க முடியாத ஓர் ஆண்டாக அமைந்தது.** 2004ம் ஆண்டு ஆர்ப்பரிக்கும் வங்கக் கடலை மிஞ்சிய வண்ணம் ஆரவாரித்தது. மக்களின் கூட்டம் கருணைமிகு கடலாச்சியம்மன் ஆலய புனருத்தாரண வேலைகள் முடிவுற்றது மகா கும்பாபிஷேக சாந்திவிழாவும், அதனைத் தொடர்ந்துநடைபெற்ற ஆனி பௌர்ணமி உற்சவ விழாவும் சேர்ந்ததால் ஊரே விழாக்கோலம் பூண்டு களைகட்டி களிப்புடன் காணப்பட்டது. மக்கள் மனதிலே பெருமிதம் கலந்த ஆனந்தம். இரவு பகல் பாராது இன்முகம் காட்டி அன்புத் தொண்டாற்றிய நிருவாகத்தினரும், ஊர்மக்களும் செய்த தியாகங்களும் சேவைகளும் வார்த்தையால் இயம்ப முடியாதவையாகும். அன்னையின் ஆலயம் புதுப்பொலிவுடன் பூரித்து நின்றது.

இவை அனைத்தும் சில நிமிடமே வந்து சென்ற சுனாமி அரக்கனினால் சின்னாபின்னப்பட்டுப்போயின. கிராமமே சுடுகாடாய்க் காட்சியளித்தது. ஐயோ! ஒரு கிராமமே அழிந்து விட்டதே, என்ற உணர்வையே அந்நேரத்தில் ஏற்படுத்தியது. கருவறையில் அமர்ந்திருந்த அன்னையை அழிக்க முடியாததால், காவல் தெய்வங்களாக இருந்த பரிவார பந்தல்களையும் முகப்புச் சிலையையும் கீழே தள்ளி விட்டுச் சென்று விட்டது சுனாமி.

இந் நூலை எழுத நேர்ந்த சூழலை எண்ணிப்பார்க்கிறேன். கனவில் கண்ட, அன்னையின் விஸ்வருபக் காட்சியும் நெஞ்சில் சிம்மாசனம் போட்டு அமர்ந்த அந்தவரிகளும், "என்னைப் பற்றி எப்போது சொல்லப் போகிறாய்? எழுது.... என்னைப் பற்றி எழுது" என்ற அந்த வரிகளும்.

சுனாமியில் அழிந்த கிராமமும் ஆலயமும் கண் முன்னே வந்ததுடன். துன்பம் நிறைந்த அந்த நாட்கள் அன்பான பெற்றோரின் இழப்பும், சகோதரனின் குழந்தைகளின் இழப்பும், சக ஆசிரியை, சொந்தபந்தங்கள், உறவுகள், 15 வருடங்களாக மகளீர் சங்கம், மாதர் சங்கங்களினூடாக எல்லோரும் ஒரு தாய் பிள்ளைகளாக மிகவும் ஒற்றுமையுடன் வாழ்வின் முன்னேற்றத்திற்காக செய்த செயற்திட்டங்கள், பலரின் அர்ப்பணிப்புக்கள், பால் மணம் மாறாத பச்சிளம் பாலகர்களாக படித்த குழந்தைகளின் மறைவு எஞ்சியோரைக் காணும்போது அழுகையுடன் கூறும் துயர் நிறைந்த சோகக்கதைகள் மிகுந்த வேதனையான நினைவுடனே அன்று பாடசாலை சென்றேன். அன்று பிற்பகல் ஆலய பரிபாலன சபையில் இருக்கும் திரு.சி. குணசீலன் வந்திருந்தார். "நாளை அன்னையின் முகப்பு சிலையை தூக்கி வைக்கும் நிகழ்வுடன் நாகதம்பிரான் ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டும் வைபவமும் நடைபெறவுள்ளது. நாளை கடலாச்சியம்மன் ஆலயத்திற்கு கட்டாயம் வாருங்கள்" என்று அழைப்பு விடுத்தார். மறு நாள் ஆலயத்திற்கு சென்ற போது, அம்மனின் முகப்பு சிலை மீண்டும் பல நாட்களின் பின் முகப்பில் அமர்த்தப்பட்டது, மனதில் நிறைவைத் தந்தது. முதல் நாள் அதிகாலை கண்ட கனவு நினைவில் வர அம்மனையே பார்த்த வண்ணம் நின்றிருந்தேன்.

கனவில் கூறிய வார்த்தைகள் மீண்டும் மீண்டும் என்னுள் ஒலிப்பதை உணர்ந்தேன். என்ன எழுதுவது? எப்படி எழுதுவது? என்று எதுவுமே புரியாதபோதும் ஒரு முடிவிற்கு வந்தேன். அடுத்த உற்சவத்திற்கிடையில் வரலாற்றை எழுதி முடிப்பது என் கடமையும் தெய்வத்தின் ஆணையுமாகும் என்று ஏற்று, என் எண்ணத்தை ஆலய பரிபாலன சபையினரிடம் கூறிய போது, "எங்களாலான உதவிகளைச் செய்கின்றோம்." காலத்தின்

தேவைகருதி அம்மனின் வரலாறு வெளிவர வேண்டிய அவசியத்தைக்கூறியதுடன் மிகவிரைவில் செய்து முடியுங்கள் என்ற ஊக்கத்தையும் தந்தனர். அடுத்த உற்சவத்துக்கிடையில் முடித்துத் தாருங்கள் என்ற அவர்களின் எண்ணமும் என் எண்ணமும் ஒன்றாக இருந்ததால் அன்றே அதற்கான வேலைகளை ஆரம்பித்தேன். ஆவணங்கள் அழிவுற்றதால் பல நூல்களை தேடியபோது வித்துவான் வீ.சி. கந்தையா அவர்களின் கட்டுரை ஒன்று கிடைத்தது. "வாய் மொழி மரபுகள் வரலாற்று மூலகங்களாக" என்ற ஆய்வுக் கட்டுரை நூல் ஒன்றை திருமதி. அம்மன்கிளி முருகதாஸ் அவர்கள் தந்துதவினார். அதில் அவரே எழுதிய கடலாச்சியம்மன் ஆலயம் பற்றிய ஆய்வுக்கட்டுரை எனக்கு மிகவும் உதவியாக இருந்தது. சுனாமியால் சகல ஆவணங்கள் அழிந்தும், தகவல் அறிந்திருந்த பெரியவர்கள் பலரும் இறந்தும், இடம்பெயர்வுகளும் இடம்பெற்ற காரணத்தால் ஆலய வரலாற்றை எழுதுவது அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை. பல ஊர்களில் பலரைச் சந்திக்க வேண்டியிருந்தது. சில தகவல்கள் முரண்பட்டதாகவும் இருந்தன. அன்னையின் பூரண அருளினால் இந்நூலை இந்தளவு எழுதி முடிப்பதற்கு பலர் பலவழிகளில் உதவியாக இருந்தனர். அவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் கூற கடமைப்பட்டுள்ளேன். அந்த வகையில் இந்த முயற்சிக்கு பக்கபலமாக நின்றுதவிய ஆலய தலைவருக்கும், ஆலய நிருவாகத்தினருக்கும், ஊர் மக்கள், ஆலய பிரதம பூசகர் திரு.சோ.லிங்கேஸ்வரன், திரு.ம.அரசரெட்ணம், திரு.ச. தங்கவேல், அம்மன்காவிய ஏட்டுப்பிரதியைத் தந்துதவிய திரு.செ. உருத்திரகுமார், புகைப்படமும், தகவல்களையும் தந்துதவிய திரு.ந.கணபதிப்பிள்ளை குடும்பத்தினர், பொதுநூலக நூலகர்கள், திரு.வ.வைரமுத்து அவர்களுக்கும், இந்நூலை செய்து முடிப்பதற்கு ஆக்கமும், ஊக்கமும் வழங்கிய எழுத்தாளர் திரு.ஆ.மு.சி. வேலழகன் அவர்களுக்கும், ஆலயம் சம்பந்தமான இறுவெட்டுக்களைத் தந்துவிய திரு.சி. குணசீலனுக்கும், கிச்சா அவர்களுக்கும் மற்றும் அம்மனின் திருப்பாடல்களைத் தந்துதவிய திரு. நல்லலிங்கம் ஆசிரியர் அவர்கட்கும், மனம் கோணாமல் செல்ல வேண்டிய இடங்களுக்கு அழைத்துச் சென்றதுடன், தேவையான

போதெல்லாம் பண உதவி வழங்கிய திரு.ம.வேதநாயகம் அவர்களுக்கும், திரு,வே.அமல்ராஜ், அவரின் நண்பர்களுக்கும் திரு.அ.பாஸ்கரன், திரு.அ.அகிலன், திரு.சி.காந்தரூபன் ஆகியோர்களுக்கும், குறிப்பிட மறந்திருப்பின் அந்த நல் உள்ளங்களுக்கும், நன்றியைத் தெரிவித்துக் கொள்வது என் கடமையாகும். அன்னையின் ஆலயப் பெயர் “கடல் நாச்சியம்மன் வரலாறா?” “கடலாச்சியம்மன் வரலாறா?” என்ற குழப்பம் இருந்தது, மக்கள் உள்ளங்களிலும் அதிகாரமளிக்கபட்ட யாப்பிலும் ஸ்ரீ கடலாச்சியம்மன் ஆலயம் என்றே குறிக்கப்பட்டுள்ளதால் இப் பெயரையே நானும் ஏற்றுக் கொண்டேன்.

2007ஆம் ஆண்டு எளிமையான முறையில் நடைபெற்ற கும்பாபிஷேக சாந்திவிழாவின் பின் படிப்படியாக மக்கள் ஆலயத்திற்கு வருகைதரத் தொடங்கினர். 2008ம், 2009ம் ஆண்டில் உற்சவவிழா சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்பட்டது, சகவாழ்வுமன்றம், இந்துகலாச்சார அமைச்சின் நிதி ஒதுக்கீடு, ஊர்மக்களின் ஒத்துழைப்பு, பக்தர், நலன் விரும்பிகளின் ஒத்துழைப்பு அனைத்தும் ஒன்றாகச் சேர்ந்து, உயிர் பெற்றெழுந்தது அன்னையின் ஆலயம். வரலாறு காணமுடியாத அளவிற்கு மேலும் வளர்ச்சியுறும் என்பதும் திண்ணமாகும்.

இந்நூல் முழுமையான வரலாறாக அமையாவிட்டாலும் 1932ம் ஆண்டு அன்னையின் ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து 2010ம் ஆண்டுவரை நடந்துவந்த நிகழ்வுகளின் பதிவுகளின் தடங்களாக அமைந்துள்ளதால், இதன் தொடர்ச்சியாக வரப்போகும் எதிர்கால வரலாற்றிற்கு ஒரு துரும்பாக இருந்து உதவும் என்ற நம்பிக்கையுடனும், வளர்ந்து வரும் இளந்தலைமுறையினருக்கும் வரலாற்றை அறிந்து கொள்ள உதவியாக இருக்கும் என்ற மனத்திருப்தியுடனும் அருள்மிகு கடலாச்சியம்மன் வரலாற்றை உங்கள் கரங்களில் சமர்ப்பிக்கின்றேன்.

பல வேலைப்பளுக்களுக்கும் மத்தியில் இந்நூலை வாசித்து ஆசியுரை, சிறப்புரை, அறிமுகவுரை, வாழ்த்துரை, அணிந்துரை வழங்கிய கற்றுணர்ந்த

ஆலயத்தில் திருவிழா என்றால் அது ஊர் எங்கும் பெருவிழாவாக அமைவதற்கிணங்க இவ்வூர் மக்களும் திருவிழாவைப் பெரு விழாவாகக் கொண்டாடும் மனப்பாங்குடன் பக்தி மயமாகத் தெரு வீதிகளெங்கும் மாவிலைத் தோரணங்கள், அலாங்கார வளைவுகள், பூரண கும்பங்கள் வைப்பதுடன், அயற் கிராமங்களிலிருந்தும், வெளியூர்களிலிருந்தும் வரும் பக்தர்களை வரவேற்று உபசரிப்பதிலும் காட்டும் ஆர்வத்திணை எனது கண் கூடாகவே கண்டு வியந்துள்ளேன்.

நான் இவ்வாலயத்திற்குச் சொற்பொழிவுகளிற்காக வரும் சந்தர்ப்பங்களில் இந்நூலாசிரியரின் பெற்றோராகிய சோமசுந்தரம், பூரணமதி தம்பதியினரின் இல்லத்தில் தங்கியிருக்க வாய்த்த சந்தர்ப்பங்களில் அவர்களின் இறை பக்தியையும், திறமைகளையும், நற் பண்புகளையும், பெருமைகளையும் அவதானிக்க முடிந்தது. திருமதி. பூரணமதி அவர்களை இக்கிராம மக்கள் அனைவரும் "**பெரிய ரீச்சர்**" என அழைப்பதன் மூலமும் திரு.சோமசுந்தரம் அவர்களை சின்னைய்யா என அழைக்கப்படுவதன் மூலமும் அவர்களைக் கௌரவிட்பதைக் கண்டு மகிழ்ந்துள்ளேன்.

அவர்களின் பாரம்பரியப் பண்புகளும், கடலாச்சி அம்பாளின் அருட்கடாட்சமும், இந்நூலாசிரியரை மூன்றாவது வயதிலேயே கண்ணன் நடனத்திற்கானபரிசாக தங்க மோதிரம் பெற்றது தொடக்கம் மட்டக்களப்பு மாவட்டத்தின் கலை இலக்கியப் பணிகளில் பெரும் பங்காற்ற வாய்த்துள்ளது.

**"பெருமை உடையவர் ஆற்றுவர் ஆற்றின்**
**அருமை யுடைய செயல்"**

என்பது போல இவரது இவ்வெளியீட்டினால் பலரும் பயன்பெற வாழ்த்துகின்றோம். மேலும் உலகில் முதலில் தோன்றி உருவான ஆணும், பெண்ணும் குழந்தையைப் பெற்றனர். அந்த ஆணோ,தன்னைப்போல ஒரு குழந்தையைப் பெற்றுத் தந்த மனைவியைத் தெய்வமாக மதித்தார். அப்பிள்ளையும் தன்னை, அன்பு, கருணை, பக்தி, அடக்கம், ஒழுக்கம் மூலம் வளர்ந்த பெற்ற தாயைத் தெய்வமாகக் கருதியதனால் இந்துக்கள் மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற படிகளில் முதலில் பெற்ற தாயைக் கடவுளாக, அன்பின் இருப்பிடாக கண்டதன் மூலம் தாய்த் தெய்வ வழிபாடு ஆரம்பமானது. நன்றிக்கடன் செலுத்துபவர்கள் என்ற வகையில் இன்னருள் புரிந்த

ஓம் சக்தி

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

## வெளியீட்டுரை

ஸ்ரீ கடாச்சியம்மன் ஆலய வரலாறு கூறும் ஒரு நூல் இன்று எம்கையில் இருப்தபற்கு அன்னையின் அருட்கடாச்சத்துடன் உருவாக்கித்தந்த திருமதி. சுந்தரமதி வேதநாயகம் அவர்களின் நற்பணியை எண்ணி ஸ்ரீமாரி கடலாச்சியம்மன் ஆலய பரிபாலன சபையினர் பூரிப்படைவதுடன் எமது ஆலயத்தில் இந்நூலை வெளியிடும் உரிமையை எமக்களித்த நூலாசிரியர் அவர்களுக்கு மனப்பூர்வமான நன்றியை உள்ளன்போடு தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது கிராமத்தில் பதினைந்து வருடங்களுக்கு மேலாக வசித்து ஆசிரியராக இருந்து பல சமூக அபிவிருத்திச் சேவைகளையும், கலை இலக்கியப் பணிகளையும், இறை பணிகளையும் நூலாசிரியை செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆழிப்பேரலை தாக்கத்தினால் பல ஆவணங்கள் அழிவுற்ற நிலையில் பலநாள் தேடல்களின் பின் இன்றைய காலகட்டதிற்கு மிகவும் அவசியமான, தேவையான இறைபணியைச் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்கும் உரியதாகும்.

நூலாசிரியை அவர்கட்கும் அவரின் குடும்பத்தினருக்கும் அன்னை என்றும் அருள் பாலிக்க வேண்டுமென வேண்டி எமது ஆலய பரிபாலன சபையினர் சார்பில் மனமார்ந்த வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

**ஸ்ரீமாரி கடலாச்சியம்மன் ஆலய பரிபாலன சபையினர்.**

பிரதேச செயலகம் - மண்முனை வடக்கு, மட்டக்களப்பு.
ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය - මන්මුනේ උතුර මඩකලපුව
Divisional Secretariat – Manmunai North, Batticaloa.

எனது இலக்கம் / මගේ අංකය / My No : DS/MN/Gen
உமது இல / ඔබේ අංකය / Your No
திகதி / දිනය / Date : 14.06.2010

## வாழ்த்துச் செய்தி

மட்டக்களப்பின் மிகப் பிரபல்யம் வாய்ந்த அம்மன் ஆலயத்தில் ஒன்றான ஸ்ரீ கடலாச்சியம்மன் ஆலய வரலாறு பற்றி கூறும் இம்மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

நாவலடி கடற்கரையோரத்தல் கம்பீரமாக காட்சியளிக்கும் கடலாச்சியம்மன் ஆலயமானது சுனாமியின் பின்னர் புதுப்பொலிவு பெற்று வீற்றிருக்கிறது. இவ் ஆலய வரலாற்றினை கூறும் இந்நூலானது தற்போது இதுபற்றி அறியாத மக்களுக்கும், இனிவரும் சந்ததியினருக்கும் இவ்வாலயத்தின் வரலாறு, சிறப்பு, அதிசயங்கள் பற்றி அறிய வாய்ப்பிருக்கின்றது. அதிலும் அம்மன ஆலய சடங்கு முறைகள் பற்றி எந்தவொரு இந்து மக்களும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். எனவே இவ் அரிய முயற்சியை பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

திருமதி. சுந்தரமதி வேதநாயகம் கலைத்துறையில் ஆற்றிய பணி பல உள்ளன. அதிலும் இலக்கியத்துறை, கவிதை, சிறுகதை, நாடகம் என பலதுறைகளில் ஈடுபாடு கொண்டவர். மண்முனை வடக்கு கலாசாரபேரவையின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே அவரின் இவ் அரிய முயற்சியின் பயனாக கடலாச்சியம்மனின் வரலாறு எனும் இந்நூல் வெளியாவதையிட்டு அவரை பாராட்டுவதோடு அவருடைய சேவை மென்மேலும் விரிவடைய வேண்டும் எனவும் வாழ்த்துகின்றேன்.

**திருமதி. கலாமதி பத்மராஜா,**
பிரதேச செயலாளர்,
மண்முனைவடக்கு,
பிரதேச செயலகம்.

Mrs. K. PATHMARAJAH
DIVISIONAL SECRETARY
MANMUNAI NORTH
BATTICALOA

## கடவுள் வாழ்த்து

ஓங்காரத்துட் பொருளானாய் உலகாளும் கணபதியே
சங்கரனன்பின் புதல்வனாய் சங்கடம்போக்கும் விநாயகனே
மங்காப்புகழ் ஓங்கும் மகிமையுறுமால்மருகனே
தாங்கும்நிலமதாய் தாயவள் வரலாறுரைக்க நீ காப்பு.

### சிவன்

மறை ஆகமங்களின் மூத்த முதல்வனே!
கறை மிடற்றண்ணல் கையிலை நாதனே!
நிறை சக்தீஷ்வரியை நிழலாயுடைய நிமலனே!
குறையற்றே என்பணிக்கு குன்றாய் அருள்வாயே!

### சக்தி

மீன்பாடும் தேன்நாட்டின் மங்களத்து சமுத்திரநாயகியே!
மண்ணில்மானிடர் துயர்போக்க மாரிகடலாச்சியாய் மிளிர்ந்தவளே!
அன்னைதிரை சேர்மடந்தையாய் அன்பாய் அருள் பாலித்தவளே!
இன்னல் அகற்றியே இன்பமளித்த இனியவளே தாயேபோற்றி!

### முருகன்

மங்கள ரூபனே மதியொளி முருகனே
மச்சமாய் வந்தவனே மயூர எழில் வாகனனே
மாங்கனி வேண்டியே மலைமேல் அமர்ந்தவனே
மஞ்சள் மேனியனே மலரும் மலரின் துணையானவனே

போற்றி.. போற்றி...

## அறிமுகவுரை



ஸ்ரீ கடலாச்சியம்மன் ஆலய வரலாற்று நூலின் ஆசிரியை திருமதி. சுந்தரமதி வேதநாயகம் (நிலா) அவர்கள் **"கருவிலே திரு"** என்பதற்கு ஏற்ப கலை இலக்கியத்துறைக்குப் புதியவரல்ல.

இவர் தனது குழந்தைப் பருவத்தில் இருந்தே, இயற்கையாக இயல்பாக கலை ஆர்வத்தினாலே ஈடுபாடு கொண்டு இயங்கி வருகிறார். என்பதனை இவரது எண்ணத்தினாலும், செயலாலும் மேலும் இவர் தந்த தகவல்களினாலும் அறிய முடிகிறது. அது மட்டுமின்றி நான் அறிந்தவரையில் 1999 காலப் பகுதியில் கடும் போர்க்கால சூழலிலும், எமது மட்டக்களப்பு மாவட்ட தமிழ் எழுத்தாளர் பேரவையில் இணைந்துகொண்டார். ஒரு உறுப்பினராக இணைந்து கொண்ட தங்கை சுந்தரமதி-வேதநாயகம் அவர்கள் நிர்வாக உறுப்பினராக இருந்து இன்று அப்பேரவையின் செயலாளராக எல்லோரினதும் மனப்பூர்வமான விருப்பத்தின்பேரில் தெரிவு செய்யப்பட்டு இயங்கி வருகிறார். என்றால் இது தங்கையின் இலக்கிய ஆர்வத்தினதும் ஈடுபாட்டினதும் சிறந்ததோர் எடுத்துக் காட்டு என்றுதான் கூறவேண்டும்.

எந்த ஒரு மனிதனிடத்திலும் அறிவாற்றல் உண்டோ, இல்லையோ ஆனால் தான் விரும்பிச் செயல்பட எண்ணும் துறையில் இறங்குவதற்கும், ஈடுபடுவதற்கும் முன் தற்துணிவும், தன்னம்பிக்கையும் இருக்க வேண்டும். அதுவும் எந்தவித உள் நோக்கமுமில்லாமல் திறந்த, சிறந்த நோக்கோடு ஈடுபட எண்ணினால் அந்த நோக்கம் நிட்சயம் நிறைவேறியேயாகும். இதைத்தான் வள்ளுவப் பெருந்தகை அவர்களும்;

**"எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்**
**திண்ணியராகப் பெறின்"**

என்கிறார்கள். மேற்கூறியப தங்கை திருமதி. சுந்தரமதி வேதநாயகம் அவர்களிடம் தற்துணிவும், தன்னால் எதையும் சாதிக்க முடியும் என்ற தன்நம்பிக்கையும், பலமாகவும், நயமாகவும் உண்டு. என்பதன் வெளிப்பாடுதான் இந்நூல்.

ஆம் எடுத்த எடுப்பிலே கடலாச்சியம்மன் ஆலய வரலாற்றினைத் தேடி ஆய்ந்து ஆவணப்படுத்தி நூல் வடிவில் கொண்டுவருவதென்பது சாதாரண விடயமல்ல. எல்லோருக்கும் இந்த தற்துணிவும், தன்னம்பிக்கையும் வருவதுமல்ல, சுயமாகச் சிந்திப்பதிலும் அதனை மனதில் வைத்து அஞ்சி அஞ்சி இருக்காது துணிந்து சுதந்திரமாகச் சொல்வதிலும், சொன்னதைச் செய்துமுடிப்பதிலும் வல்லவர் என்றுதான் சொல்ல வேண்டும்.

இத்தனைக்கும் தங்கையின் துணைவர் திரு.ம.தேவநாயகம் அவர்களும், தங்கையின் பிள்ளைச் செல்வங்களும் அமைந்து இருப்பதுபோல் எல்லோருக்கும் அமையாது! ஆம்! இது வெறும் புகழுரை அல்ல. நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம் என்று கூறிய அறிஞர்களின் கூற்றுக்கு ஒப்ப அவரின் கள்ளம் கபடமற்ற வெள்ளையுள்ளம் போலவே வாய்த்த குடும்பமும் தான் எல்லா வெற்றிக்கும் காரணமெனலாம்.

எனவே தங்கை திருமதி.சுந்தரமதி வேதநாயகம் அவர்கள் இந்நூல் வெளிவருவதோடு நிறுத்தி விடாமல் மேலும் பல நூல்களைத் தேடிப் படித்தும் பல ஆய்வுகளாக, கவிதை, சிறுவர் இலக்கியம் சிறுகதை, நாவல்களாக எழுதி சமுதாயத்துக்கு உருப்படியான நற்பணியாற்ற வேண்டும் என வேண்டியும் வாழ்த்தியும் விடைபெறும்.

**கலைமகள் வீதி**
**தாமரைக்குளம்**
**தாழங்குடா - 02**
**ஆரையம்பதி**

**என்றும் பணிவுள்ள**
**ஆ.மு.சி. வேலழகன்**
**05-06-2010**



## என்னுரை



சமயம், கலை, கலாசாரம், பண்பாடு போன்ற மேன்மைகளை அறிந்து கொள்வதற்கு அச்சமூகம் சார்ந்த வரலாற்றுத் தரவுகளை அறிந்து கொள்வது மிகவும் அவசியமானதும் பயனுள்ளதுமானதாகும். மீன்பாடும் தேன் நாட்டின் கிழக்கே எழில் வளங்கள் நிறைந்த நாவலடிக் கிராமத்தில் அருள் மிகு ஸ்ரீகடலாச்சி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது. நாவலடிக் கிராமத்திற்கு பெருமை சேர்த்த விடயங்களுள் ஒன்று காவல் தெய்வமான அம்மனின் ஆலயமும், மற்றையது மக்களுக்கு வாழ்வாதாரம் அளித்த வங்கக்கடலுமாகும்.

**2004ம் ஆண்டு நாவலடி வாழ் மக்களின் வாழ்வில் மறக்க முடியாத ஓர் ஆண்டாக அமைந்தது.** 2004ம் ஆண்டு ஆர்ப்பரிக்கும் வங்கக் கடலை மிஞ்சிய வண்ணம் ஆரவாரித்தது. மக்களின் கூட்டம் கருணைமிகு கடலாச்சியம்மன் ஆலய புனருத்தாரண வேலைகள் முடிவுற்றது மகா கும்பாபிஷேக சாந்திவிழாவும், அதனைத் தொடர்ந்துநடைபெற்ற ஆனி பௌர்ணமி உற்சவ விழாவும் சேர்ந்ததால் ஊரே விழாக்கோலம் பூண்டு களைகட்டி களிப்புடன் காணப்பட்டது. மக்கள் மனதிலே பெருமிதம் கலந்த ஆனந்தம். இரவு பகல் பாராது இன்முகம் காட்டி அன்புத் தொண்டாற்றிய நிருவாகத்தினரும், ஊர்மக்களும் செய்த தியாகங்களும் சேவைகளும் வார்த்தையால் இயம்ப முடியாதவையாகும். அன்னையின் ஆலயம் புதுப்பொலிவுடன் பூரித்து நின்றது.

இவை அனைத்தும் சில நிமிடமே வந்து சென்ற சுனாமி அரக்கனினால் சின்னாபின்னப்பட்டுப்போயின. கிராமமே சுடுகாடாய்க் காட்சியளித்தது. ஐயோ! ஒரு கிராமமே அழிந்து விட்டதே, என்ற உணர்வையே அந்நேரத்தில் ஏற்படுத்தியது. கருவறையில் அமர்ந்திருந்த அன்னையை அழிக்க முடியாததால், காவல் தெய்வங்களாக இருந்த பரிவார பந்தல்களையும் முகப்புச் சிலையையும் கீழே தள்ளி விட்டுச் சென்று விட்டது சுனாமி.

இந் நூலை எழுத நேர்ந்த சூழலை எண்ணிப்பார்க்கிறேன். கனவில் கண்ட, அன்னையின் விஸ்வரூபக் காட்சியும் நெஞ்சில் சிம்மாசனம் போட்டு அமர்ந்த அந்தவரிகளும், "என்னைப் பற்றி எப்போது சொல்லப் போகிறாய்? எழுது.... என்னைப் பற்றி எழுது" என்ற அந்த வரிகளும்.

சுனாமியில் அழிந்த கிராமமும் ஆலயமும் கண் முன்னே வந்ததுடன். துன்பம் நிறைந்த அந்த நாட்கள் அன்பான பெற்றோரின் இழப்பும், சகோதரனின் குழந்தைகளின் இழப்பும், சக ஆசிரியை, சொந்தபந்தங்கள், உறவுகள், 15 வருடங்களாக மகளீர் சங்கம், மாதர் சங்கங்களினூடாக எல்லோரும் ஒரு தாய் பிள்ளைகளாக மிகவும் ஒற்றுமையுடன் வாழ்வின் முன்னேற்றத்திற்காக செய்த செயற்திட்டங்கள், பலரின் அர்ப்பணிப்புக்கள், பால் மணம் மாறாத பச்சிளம் பாலகர்களாக படித்த குழந்தைகளின் மறைவு எஞ்சியோரைக் காணும்போது அழுகையுடன் கூறும் துயர் நிறைந்த சோகக்கதைகள் மிகுந்த வேதனையான நினைவுடனே அன்று பாடசாலை சென்றேன். அன்று பிற்பகல் ஆலய பரிபாலன சபையில் இருக்கும் திரு.சி. குணசீலன் வந்திருந்தார். "நாளை அன்னையின் முகப்பு சிலையை தூக்கி வைக்கும் நிகழ்வுடன் நாகதம்பிரான் ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டும் வைபவமும் நடைபெறவுள்ளது. நாளை கடலாச்சியம்மன் ஆலயத்திற்கு கட்டாயம் வாருங்கள்" என்று அழைப்பு விடுத்தார். மறு நாள் ஆலயத்திற்கு சென்ற போது, அம்மனின் முகப்பு சிலை மீண்டும் பல நாட்களின் பின் முகப்பில் அமர்த்தப்பட்டது, மனதில் நிறைவைத் தந்தது. முதல் நாள் அதிகாலை கண்ட கனவு நினைவில் வர அம்மனையே பார்த்த வண்ணம் நின்றிருந்தேன்.

கனவில் கூறிய வார்த்தைகள் மீண்டும் மீண்டும் என்னுள் ஒலிப்பதை உணர்ந்தேன். என்ன எழுதுவது? எப்படி எழுதுவது? என்று எதுவுமே புரியாதபோதும் ஒரு முடிவிற்கு வந்தேன். அடுத்த உற்சவத்திற்கிடையில் வரலாற்றை எழுதி முடிப்பது என் கடமையும் தெய்வத்தின் ஆணையுமாகும் என்று ஏற்று, என் எண்ணத்தை ஆலய பரிபாலன சபையினரிடம் கூறிய போது, "எங்களாலான உதவிகளைச் செய்கின்றோம்." காலத்தின்

தேவைகருதி அம்மனின் வரலாறு வெளிவர வேண்டிய அவசியத்தைக்கூறியதுடன் மிகவிரைவில் செய்து முடியுங்கள் என்ற ஊக்கத்தையும் தந்தனர். அடுத்த உற்சவத்துக்கிடையில் முடித்துத் தாருங்கள் என்ற அவர்களின் எண்ணமும் என் எண்ணமும் ஒன்றாக இருந்ததால் அன்றே அதற்கான வேலைகளை ஆரம்பித்தேன். ஆவணங்கள் அழிவுற்றதால் பல நூல்களை தேடியபோது வித்துவான் வீ.சி. கந்தையா அவர்களின் கட்டுரை ஒன்று கிடைத்தது. "வாய் மொழி மரபுகள் வரலாற்று மூலகங்களாக" என்ற ஆய்வுக் கட்டுரை நூல் ஒன்றை திருமதி. அம்மன்கிளி முருகதாஸ் அவர்கள் தந்துதவினார். அதில் அவரே எழுதிய கடலாச்சியம்மன் ஆலயம் பற்றிய ஆய்வுக்கட்டுரை எனக்கு மிகவும் உதவியாக இருந்தது, சுனாமியால் சகல ஆவணங்கள் அழிந்தும், தகவல் அறிந்திருந்த பெரியவர்கள் பலரும் இறந்தும், இடம்பெயர்வுகளும் இடம்பெற்ற காரணத்தால் ஆலய வரலாற்றை எழுதுவது அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை. பல ஊர்களில் பலரைச் சந்திக்க வேண்டியிருந்தது. சில தகவல்கள் முரண்பட்டதாகவும் இருந்தன. அன்னையின் பூரண அருளினால் இந்நூலை இந்தளவு எழுதி முடிப்பதற்கு பலர் பலவழிகளில் உதவியாக இருந்தனர். அவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் கூற கடமைப்பட்டுள்ளேன். அந்த வகையில் இந்த முயற்சிக்கு பக்கபலமாக நின்றுதவிய ஆலய தலைவருக்கும், ஆலய நிருவாகத்தினருக்கும், ஊர் மக்கள், ஆலய பிரதம பூசகர் திரு.சோ.லிங்கேஸ்வரன், திரு.ம.அரசரெட்ணம், திரு.ச. தங்கவேல், அம்மன்காவிய ஏட்டுப்பிரதியைத் தந்துதவிய திரு.செ. உருத்திரகுமார், புகைப்படமும், தகவல்களையும் தந்துதவிய திரு.ந.கணபதிப்பிள்ளை குடும்பத்தினர், பொதுநூலக நூலகர்கள், திரு.வ.வைரமுத்து அவர்களுக்கும், இந்நூலை செய்து முடிப்பதற்கு ஆக்கமும், ஊக்கமும் வழங்கிய எழுத்தாளர் திரு.ஆ.மு.சி. வேலழகன் அவர்களுக்கும், ஆலயம் சம்பந்தமான இறுவெட்டுக்களைத் தந்துவிய திரு.சி. குணசீலனுக்கும், கிச்சா அவர்களுக்கும் மற்றும் அம்மனின் திருப்பாடல்களைத் தந்துதவிய திரு. நல்லலிங்கம் ஆசிரியர் அவர்கட்கும், மனம் கோணாமல் செல்ல வேண்டிய இடங்களுக்கு அழைத்துச் சென்றதுடன், தேவையான

போதெல்லாம் பண உதவி வழங்கிய திரு.ம.வேதநாயகம் அவர்களுக்கும், திரு,வே.அமல்ராஜ், அவரின் நண்பர்களுக்கும் திரு.அ.பாஸ்கரன், திரு.அ.அகிலன், திரு.சி.காந்தரூபன் ஆகியோர்களுக்கும், குறிப்பிட மறந்திருப்பின் அந்த நல் உள்ளங்களுக்கும், நன்றியைத் தெரிவித்துக் கொள்வது என் கடமையாகும். அன்னையின் ஆலயப் பெயர் "கடல் நாச்சியம்மன் வரலாறா?" "கடலாச்சியம்மன் வரலாறா?" என்ற குழப்பம் இருந்தது, மக்கள் உள்ளங்களிலும் அதிகாரமளிக்கபட்ட யாப்பிலும் ஸ்ரீ கடலாச்சியம்மன் ஆலயம் என்றே குறிக்கப்பட்டுள்ளதால் இப் பெயரையே நானும் ஏற்றுக் கொண்டேன்.

2007ஆம் ஆண்டு எளிமையான முறையில் நடைபெற்ற கும்பாபிஷேக சாந்திவிழாவின் பின் படிப்படியாக மக்கள் ஆலயத்திற்கு வருகைதரத் தொடங்கினர். 2008ம், 2009ம் ஆண்டில் உற்சவவிழா சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்பட்டது, சகவாழ்வுமன்றம், இந்துகலாச்சார அமைச்சின் நிதி ஒதுக்கீடு, ஊர்மக்களின் ஒத்துழைப்பு, பக்தர், நலன் விரும்பிகளின் ஒத்துழைப்பு அனைத்தும் ஒன்றாகச் சேர்ந்து, உயிர் பெற்றெழுந்தது அன்னையின் ஆலயம். வரலாறு காணமுடியாத அளவிற்கு மேலும் வளர்ச்சியுறும் என்பதும் திண்ணமாகும்.

இந்நூல் முழுமையான வரலாறாக அமையாவிட்டாலும் 1932ம் ஆண்டு அன்னையின் ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து 2010ம் ஆண்டுவரை நடந்துவந்த நிகழ்வுகளின் பதிவுகளின் தடங்களாக அமைந்துள்ளதால், இதன் தொடர்ச்சியாக வரப்போகும் எதிர்கால வரலாற்றிற்கு ஒரு துரும்பாக இருந்து உதவும் என்ற நம்பிக்கையுடனும், வளர்ந்து வரும் இளந்தலைமுறையினருக்கும் வரலாற்றை அறிந்து கொள்ள உதவியாக இருக்கும் என்ற மனத்திருப்தியுடனும் அருள்மிகு கடலாச்சியம்மன் வரலாற்றை உங்கள் கரங்களில் சமர்ப்பிக்கின்றேன்.

பல வேலைப்பளுக்களுக்கும் மத்தியில் இந்நூலை வாசித்து ஆசியுரை, சிறப்புரை, அறிமுகவுரை, வாழ்த்துரை, அணிந்துரை வழங்கிய கற்றுணர்ந்த

பெரியோர்களுக்கும் என் பணிவான நன்றியை தாழ்பணிந்து தெரிவித்துக் கொள்கின்றேன். கையெழுத்துப் பிரதியை ஒப்புநோக்கியும், அச்சுப்பிழைகளைத் திருத்தியும் தந்துவிய திரு.ம.வேதநாயகம், திருமதி. கலாமதி சாந்தலிங்கம், செல்வி.வ.யோகேஸ்வரி, திருமதி.சி.தமிழ்செல்வன் ஆகிய சகோதரிகளுக்கும், இந்நூலை அச்சிட்டு அழகுபடுத்திக் கொடுத்த மட்டக்களப்பு ஆதவன் அச்சகத்தினருக்கும் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். வெளியீட்டு நிகழ்வை நிகழ்த்திய ஆலயபரிபாலன சபையினருக்கும் மனப்பூர்வமான நன்றிகள் பல.

என் பணிக்கு என்றும் உறுதுணையாய் இருந்து வழிகாட்டிய அன்னை ஸ்ரீ கடலாச்சியம்மனின் பாதங்களை மானசீகமாக வணங்கி இந்நூலைப் பெற்று கற்றின்புறுவோருக்கு அன்னை அருள் பாலிக்க வேண்டுமென மனமாரப் பிரார்த்திக்கிறேன்.

**12/8, திருமகள் வீதி,** **திருமதி. சுந்தரமதி வேதநாயகம்**
**நொச்சிமுனை,**
**மட்டக்களப்பு.**

## கன்னிப்படைப்பான இம்மலரை

கற்றுணர்வார் குறை நீக்கி குணம்
கொள்ள வேண்டி நிற்கிறேன்.

அகிலத்தைப் படைத்துக் காக்கும்
அன்னையே சத்தியாவாள்
இறைவனின் துணையாய் நின்று
இயற்கையை இயங்கவைப்பாள்
அன்பு, அறிவு, அருளினோடு
அனைத்துமாய் அவளே நிற்பாள்
எல்லையில்லா ஆற்றல் ஆனதாயே!
அல்லல் களைபவளே கடலாச்சி அன்னையே!
மக்களை காப்பவளே மலர்ப்பாதம் சரணம் அம்மா!

ஓம் சக்தி

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

## வெளியீட்டுரை

ஸ்ரீ கடாச்சியம்மன் ஆலய வரலாறு கூறும் ஒரு நூல் இன்று எம்கையில் இருப்தபற்கு அன்னையின் அருட்கடாச்சத்துடன் உருவாக்கித்தந்த திருமதி. சுந்தரமதி வேதநாயகம் அவர்களின் நற்பணியை எண்ணி ஸ்ரீமாரி கடலாச்சியம்மன் ஆலய பரிபாலன சபையினர் பூரிப்படைவதுடன் எமது ஆலயத்தில் இந்நூலை வெளியிடும் உரிமையை எமக்களித்த நூலாசிரியர் அவர்களுக்கு மனப்பூர்வமான நன்றியை உள்ளன்போடு தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது கிராமத்தில் பதினைந்து வருடங்களுக்கு மேலாக வசித்து ஆசிரியராக இருந்து பல சமூக அபிவிருத்திச் சேவைகளையும், கலை இலக்கியப் பணிகளையும், இறை பணிகளையும் நூலாசிரியை செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆழிப்பேரலை தாக்கத்தினால் பல ஆவணங்கள் அழிவுற்ற நிலையில் பலநாள் தேடல்களின் பின் இன்றைய காலகட்டதிற்கு மிகவும் அவசியமான, தேவையான இறைபணியைச் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்கும் உரியதாகும்.

நூலாசிரியை அவர்கட்கும் அவரின் குடும்பத்தினருக்கும் அன்னை என்றும் அருள் பாலிக்க வேண்டுமென வேண்டி எமது ஆலய பரிபாலன சபையினர் சார்பில் மனமார்ந்த வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

**ஸ்ரீமாரி கடலாச்சியம்மன் ஆலய பரிபாலன சபையினர்.**

பிரதேச செயலகம் - மண்முனை வடக்கு, மட்டக்களப்பு.
ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය - මණ්මුනේ උතුර මඩකලපුව
**Divisional Secretariat – Manmunai North, Batticaloa.**

எனது இலக்கம் / මගේ අංකය / My No : DS/MN/Gen
உமது இல / ඔබේ අංකය / Your No
திகதி / දිනය / Date : 14.06.2010

## வாழ்த்துச் செய்தி

மட்டக்களப்பின் மிகப் பிரபல்யம் வாய்ந்த அம்மன் ஆலயத்தில் ஒன்றான ஸ்ரீ கடலாச்சியம்மன் ஆலய வரலாறு பற்றி கூறும் இம்மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

நாவலடி கடற்கரையோரத்தல் கம்பீரமாக காட்சியளிக்கும் கடலாச்சியம்மன் ஆலயமானது சுனாமியின் பின்னர் புதுப்பொலிவு பெற்று வீற்றிருக்கிறது. இவ் ஆலய வரலாற்றினை கூறும் இந்நூலானது தற்போது இதுபற்றி அறியாத மக்களுக்கும், இனிவரும் சந்ததியினருக்கும் இவ்வாலயத்தின் வரலாறு, சிறப்பு, அதிசயங்கள் பற்றி அறிய வாய்ப்பிருக்கின்றது. அதிலும் அம்மன ஆலய சடங்கு முறைகள் பற்றி எந்தவொரு இந்து மக்களும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். எனவே இவ் அரிய முயற்சியை பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

திருமதி. சுந்தரமதி வேதநாயகம் கலைத்துறையில் ஆற்றிய பணி பல உள்ளன. அதிலும் இலக்கியத்துறை, கவிதை, சிறுகதை, நாடகம் என பலதுறைகளில் ஈடுபாடு கொண்டவர். மண்முனை வடக்கு கலாசாரபேரவையின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே அவரின் இவ் அரிய முயற்சியின் பயனாக கடலாச்சியம்மனின் வரலாறு எனும் இந்நூல் வெளியாவதையிட்டு அவரை பாராட்டுவதோடு அவருடைய சேவை மென்மேலும் விரிவடைய வேண்டும் எனவும் வாழ்த்துகின்றேன்.

**திருமதி. கலாமதி பத்மராஜா,**
பிரதேச செயலாளர்,
மண்முனைவடக்கு,
பிரதேச செயலகம்.

Mrs. K. PATHMARAJAH
DIVISIONAL SECRETARY
MANMUNAI NORTH
BATTICALOA

## கடவுள் வாழ்த்து

ஓங்காரத்துட் பொருளானாய் உலகாளும் கணபதியே
சங்கரனன்பின் புதல்வனாய் சங்கடம்போக்கும் விநாயகனே
மங்காப்புகழ் ஓங்கும் மகிமையுறுமால்மருகனே
தாங்கும்நிலமதாய் தாயவள் வரலாறுரைக்க நீ காப்பு.

### சிவன்

மறை ஆகமங்களின் மூத்த முதல்வனே!
கறை மிடற்றண்ணல் கையிலை நாதனே!
நிறை சக்தீஷ்வரியை நிழலாயுடைய நிமலனே!
குறையற்றே என்பணிக்கு குன்றாய் அருள்வாயே!

### சக்தி

மீன்பாடும் தேன்நாட்டின் மங்களத்து சமுத்திரநாயகியே!
மண்ணில்மானிடர் துயர்போக்க மாரிகடலாச்சியாய் மிளிர்ந்தவளே!
அன்னைதிரை சேர்மடந்தையாய் அன்பாய் அருள் பாலித்தவளே!
இன்னல் அகற்றியே இன்பமளித்த இனியவளே தாயேபோற்றி!

### முருகன்

மங்கள ரூபனே மதியொளி முருகனே
மச்சமாய் வந்தவனே மயூர எழில் வாகனனே
மாங்கனி வேண்டியே மலைமேல் அமர்ந்தவனே
மஞ்சள் மேனியனே மலரும் மலரின் துணையானவனே

போற்றி.. போற்றி...





# பொருளடக்கம்

ஆசியுரை - சுவாமி அஜராத்மானந்தா ---------------------- IV

வாழ்த்துரை - சாந்தி நாவுக்கரசன் ---------------------------- VI

வாழ்த்துரை - திருமதி.கலாமதி பத்மராஜா் -------------------- VIII

அணிந்துரை - வை.இ.எஸ்.காந்தன் குருக்கள் ------------------ IX

சிறப்புரை - சு.சிவப்பிரகாசம் ------------------------------------ XII

சிறப்புரை - இந்து ஆலயங்களின் தலைமை ஒன்றியத்தின் ---- XV

அறிமுகவுரை- ஆ.மு.சி. வேலழகன் ---------------------------- XVII

என்னுரை ---------------------------------------------------------- XIX

வெளியீட்டுரை - திருமதி. கலாமதி பத்மராஜா, --------------- XXIV

கடவுள் வாழ்த்து ------------------------------------------------ XXVI

1. தாய்த் தெய்வ வழிபாடு ........................................................ 01
2. கிழக்கில் அம்மன் வழிபாடு ................................................. 03
3. ஆலய அமைவிடத்திற்கான வரைபடம் ................................... 05
4. ஆலய அமைவிடம் ............................................................. 07
5. கடல் நாச்சியம்மன் ஆலயங்கள் ............................................ 09
6. கிராம சமூகங்களின் பண்பாட்டு பின்புலத் தொடர்பு. .............. 10
7. நாவலடி கடலாச்சியம்மன் ஆலய தோற்றமும் வளர்ச்சியும் .. 13
8. கடலாச்சியம்மன் நாமம், .................................................... 18
9. திவ்வியகரணி கூறும் காவிய வரலாறு ஒரு பார்வை ............. 21
10. சடங்கு, சடங்குமுறைமை, வழிபாடு. .................................... 26
11. கோயில் நிருவாக முறைமை ............................................... 38

12. கும்பாபிஷேகம் ........................................................................ 42

13. இயற்கை அனர்த்தமும், சமூக நிலையும். ...................................... 54

14. அற்புதங்கள் ........................................................................ 60

15. ஆலயத்தொண்டன் ................................................................. 67

16. மூக்குத்தி ஒளி ..................................................................... 69

17. ஆலயவளர்ச்சிக்கு உதவியோர் ..................................................... 77

18. கடலாட்சியம்மன் பேரில் பாடப்பெற்ற காவடிப்பாடல்கள் ........ 78

19. சிறப்பித்துப் பாடப்பட்ட பாடல்கள் ............................................. 82

20. குளித்திப்பாடல்கள் ................................................................ 89

21. கடலாச்சியம்மன் கும்மி ............................................................ 90

22. கடலாச்சியம்மன் காவியம் .......................................................... 93

23. ஆலயம் சம்பந்தப்பட்ட படங்களும் விளக்கமும் ........................ 98

24. சுனாமிக்குப் பின்னரான ஆலயத்தின் தோற்றம் ........................ 105

25. உஷாத்துணை நூல்கள் .......................................................... 107

# தாய்த்தெய்வ வழிபாடு



பெண் தெய்வங்கள் யாவும் ஏகசக்தியாகிய ஆதிபராசக்தியின் வெவ்வேறு அம்சங்களே என்பதை மாரிமம்மன் அகவற்பாவிலே மிகவும் அழகாக இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"ஆதி பராபரியே அரனுடைய தங்கையே
நாதமற்றொய்காரி நற் பொருளானாய்

ஒன்பது கோடிசக்தி ஒன்றாகவே நீயுணர்ந்து
சக்தி ஒரு முகமாம் சமயம் பதினாறாம்
பத்தினியாள் நீ உனக்கு பல முகமாய்த்தான் பிறந்தாள்

கும்பத்து மாரியென்றும் கோவிந்தன் தங்கையென்றும்
ஏழுபேரென்றுமம்மை ஏகபராசக்தி யென்றும்
ஆழிமால் தங்கையென்றும் ஆச்சி காமாட்சியென்றும்
மதுரை மீனாட்சியென்றும் வல்லபத்திரகாளியென்றும்
துர்க்கை அபிராமியென்றும் சொல்லரிய பேச்சியென்றும்
கண்மணியில் வந்துதித்த கண்ணகையம்மனென்றும்
பரமனருளால் பாருலகில் உதித்தாள்"

இத்தகைய பெருமைக்குரிய ஆதிபராசக்தி வழிபாட்டினை நோக்குமிடத்து

சைவசமயம் எவ்வாறு ஆதி அந்தமற்றதோ அதுபோன்றே தாய்த் தெய்வ வழிபாடும் மிகவும் தொன்மை வாய்ந்ததாகும். கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் 25,000 ஆண்டுகளுக்குரியதான பழைய கற்காலத்திலும் கி.மு. 7,000 ஆண்டிற்குரிய புதிய கற்காலத்திலும் பெண் தெய்வ வழிபாடு உலகெங்கும் காணப்பட்டமைக்கான சான்றுகள் தொல் பொருளியலாளர்களினால் கொண்டு வரப்பட்டுள்ளன.

மானிடவியலளாளர்களான யேம்ஸ்பிளேயர், மாக்றெற்மீற், போன்றோர் பெண்ணை முதன்மைப்படுத்தியே கிரியைகளும் சமய நம்பிக்கைகளும் தோன்றியன வென எடுத்துக் காட்டியுள்ளார்கள். முக்கியமாக மக்கட்பேறு பெண்ணினத்திற்கேயுரிய இயற்கைவளமென மனிதர் கருதினர். தன் இனத்தை, சந்ததியை பெண் இனத்தாலேதான் காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கையும் அவர்களிடமிருந்தது அதன் அடிப்படையில் தன் சக்திக்கு மேற்பட்ட தெய்வத்தைப் பெண்ணாகவே வழிபடத் தொடங்கியதும் அவ்வழிபாடு தாய்த்தெய்வ வழிபாடானது. வல்லமை, ஆற்றல், முயற்சியென சக்திக்குப் பொருள் கொள்ளப்படுகின்றது. மிகத்தொன்மையான வழிபாட்டு முறையுடன் தொடர்புபட்டதாக சாங்கிய நெறி காணப்படுகின்றது.

மட்டக்களப்பு வழிபாட்டு முறையில் கும்பப்பத்ததியின்படி கருவறையில் அம்மன் இருக்கும் மூலஸ்தானத்தில் கும்பத்தில் முகக்களையை நிறுத்துவார்கள். இவை முறையே வாலை, திரிபுரை, புவனை எனக் குறிக்கப்படும். இவ்வாலயம் மாரியம்மனாக இருந்தால் நடுவில் வாலைக்கும்பமும், காளியம்மனாக இருந்தால் நடுவில் திரிபுரைக் கும்பமும், பேச்சியம்மனாக இருந்தால் நடுவில் புவனைக் கும்பமும் வரும். இங்கே குறிப்பிடப்பட்டுள்ள ஆலயத்தில் வாலைக்கும்பம் நடுவிலும் திரியுரை, புவனைக் கும்பங்கள் இரு மருங்கிலும் வைக்கப்பட்டுள்ளது.

# கிழக்கில் அம்மன் வழிபாடு




கிழக்கிலங்கையில் இப்பிரதேச மக்களின் வாழ்க்கை முறை. சமூக அமைப்பு, பண்பாடு, வரலாறு என்பன தனித்துவமானவை. காலமாற்றத்திற்கேற்ப காலத்திற்குக் காலம் இங்கு ஏற்பட்ட அந்நியர் ஆட்சிமுறை, அரசியல் மாற்றங்கள், குடியேற்றங்கள் என்பவற்றிற்கமைய இப்பகுதியில் இந்துப் பண்பாடு மாற்றம் அடைந்ததாயினும் பின்வரும் இருவகையான வழிபாட்டு முறைகளில்

1. ஆகமம் சார்ந்த முறையிலும்
2. ஆகமம் சாராத பத்ததி முறையிலும்

பிரதான வழிபாட்டுமுறை காணப்படுகின்றது, கிழக்கிலங்கையில் பல்வேறுபட்ட நாமங்களையுடைய அம்மன் ஆலயங்கள் காணப்படுகின்றன. அன்னை ஆதிபராசக்தியின் வடிவங்களாக மாரியம்மன், கண்ணகையம்மன், பேச்சியம்மன், கடலாட்சியம்மன் குல தெய்வமாகவும், திரௌபதையம்மன், காளியம்மன் சிறு தெய்வ வழிபாட்டு மரபிலும் அன்னை வழிபடப்படுகின்றாள். மட்/கடலாச்சியம்மன் ஆலயத்தில் இவற்றின் பரிவாரத் தெய்வங்களான களுவரசன், மளுவரசன், வீரபத்திரர், வைரவர், ஆஞ்சநேயர் திரைசேர்மடந்தை, ஐயனார், நாகதம்பிரான் போன்ற தெய்வங்களும் வழிபடப்படுகின்றன. கிராமியத் தெய்வ வழிபாட்டு முறையே மட்டக்களப்புப் பிரதேசத்தில் வழிபாட்டிற்குரியதாகக் காணப்படுகிறது. இங்கே சக்தி வழிபாடு அம்மன் வழிபாடென்றே அழைக்கப்படுகிறது. இத்தகைய தெய்வங்கள் பலவித வளங்களை வழங்கி மக்களை இடர்களிலிருந்து காக்கின்றன என்பது இம் மக்களின் நம்பிக்கையாக உள்ளது.

அன்னை பராசக்தியின் வடிவங்களாக மேலே குறிப்பிட்ட அம்மன் ஆலயங்களைவிட ஸ்ரீ நாகபூசணியம்மன் ஆலயம், நாககன்னிகோயில், ஸ்ரீ மதுரமீனாட்சியம்மன் (பலாச்சேனை கதிரவெளி) ஸ்ரீ காமாட்சியம்மன் (மயிலம்பாவெளி) சிவசக்தி திருநீற்றுக் கேணியம்மன் கோயில் தெய்வானையம்மன் கோயில், வள்ளியம்மன் கோயில் செம்பக நாட்சியம்மன் ஈசலம்பற்று கதிரவெளி, சகலகலையம்மன் தம்புலுவில் என்பன சக்தி வழிபாட்டிற்குரிய ஆலயங்களாக அமைந்துள்ளதைக் காணலாம். இவை ஆகமம் சார்ந்த முறையிலும், ஆகமம் சாராத முறையிலும் வழிபடப்படுகின்றன. இறுதியில் இவை அனைத்தும் பராசக்தியின் வெவ்வேறு மூர்த்த வடிவங்களாகவே வழிபடப்படுகின்றன.

# கடலாச்சியம்மன் ஆலய அமைவிடத்திற்கான வரைபடம்



# கடலாச்சியம்மன் ஆலய படம்



# ஆலய அமைவிடம்



நாவலடி கடலாச்சியம்மன் ஆலயம் மட்டக்களப்பு நகரிலிருந்து சுமார் 6 கிலோமீற்றர் தொலைவில் கடற்கரை ஓரமாக நாவலடிக் கிராமத்தில் அமைந்துள்ளது. கிழக்கெல்லையாகக் கடலும், மேற்கெல்லையாக வாவியும், வடக்கெல்லையாகக் கடலும், வாவியும் சங்கமிக்கும் முகத்துவாரமும் தெற்கெல்லையாக காயத்திரிபீடமும் புதுமுகத்துவாரமும் அமைந்துள்ளன. இவ்வாலயத்தைச் சென்றடைவதற்கு கல்லடிப் பாலத்தினூடாகக் கல்லடியை நோக்கிச் செல்லும்போது கிழக்கு வாவிக்கரையும் சவுக்கு மரங்களையடுத்துப் பரந்து விரிந்த கடற்பரப்பும் இயற்கை வனப்புடன் இணைந்ததாக ஒரு கட்டிடமும் காட்சியளிக்கும் இதுவே புதுமுகத்துவார கிராமமாகும். ஆலயத்தைச் சென்றடைவதற்குப் பாலத்தின் முடிவில் 1ம் குறுக்கு வீதியான டச்பார் வீதியினூடாகச் சென்று கடற்கரையை அண்மித்த திருச்செந்தூர் முருகன் கோயில் வீதியை அடையலாம். அல்லது 2ம் குறுக்கு சரவண வீதியூடாகக் கடற்கரையை நோக்கிச் சென்று திருச்செந்தூர் முருகன் ஆலய வீதியை அடைந்து வடக்கே நோக்கிச் செல்லும் போது டச்பார் கிராமமும் அதைத் தொடர்ந்து சென்றால் புதுமுகத்துவார கிராமத்தினூடாக காயத்திரி பீடத்தைக் கடந்து சென்றால் மூன்று பக்கங்களும் நீராலும் ஒரு பகுதி மட்டும் செல்லும் பாதையாகவும் அமைக்கப்பட்ட பிரதான வீதியூடாகச் சென்று நாவலடிக் கிராமத்தை அடையலாம். தொடர்ந்து புன்னையடி நவசக்திவிநாயகர் ஆலயத்தைக் கடந்து சென்றால் பச்சைப்பவள மேனியில் பதக்கம் தரித்த மாலையுடன் பட்டாடையுடுத்தி பரவசப்படுத்தும் முகப்புச் சிலையுடன் கூடிய அருள் மிகுகடலாச்சியம்மன் ஆலயம் அமைந்துள்ளது.

வாகனப் போக்குவரத்து சுனாமி அனர்த்தத்திற்கு முன் பேருந்து வசதி காணப்பட்டது. தற்போது துவிச்சக்கரவண்டி, முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் வண்டி, சிறியரக வாகனம், தோணி, என்பன பிரதான போக்குவரத்து சாதனங்களாக உள்ளன. திருவிழா நாட்களில் (உற்சவ நாட்களில்) மட்டும் ஆலயத்திற்கு வருகைதரும் மக்களின் நலன்கருதி பேருந்துச் சேவை வழங்கப்படுகின்றது.

நெய்தல் நிலத்திற்குரிய நிலப்பரப்பாகக் காணப்படுவதால் மீன்பிடித் தொழிலே அங்குவாழும் மக்களின் பிரதான வாழ்வாதாரத் தொழிலாக அமைந்துள்ளது. 2000ம் ஆண்டில் உள்ள கணக்கெடுப்பின்படி மீன்பிடிப்போர் - 329 அரசாங்க உத்தியோகத்தர் - 26 பேர், வியாபாரம் - 09 பேர், சிறுகைத்தொழில் - 03 பேர், ஓய்வூதியம் பெறுவோர் - 12 பேர்களுமாக இருந்தனர். நாவலடி மக்களின் மொத்தச் சனத்தொகை - 1508 அதில் தமிழர் - 1505 பேர், சிங்களவர் - 02, பறங்கியர் - 01 என்றவகையில் அமைந்துள்ளனர். சமய அடிப்படையில் இந்துக்கள் - 1490 பேர், கத்தோலிக்கர் - 18 பேர்களும் வசித்து வந்துள்ளனர்.
(வாய்மொழி மரபுகள் வரலாற்று மூலகங்களாக.. என்ற நூலின் கட்டுரை தரவு)

சுனாமியின் பின் 2010 5ம் மாதம் கணக்கெடுப்பின்படி
மொத்தச் சனத்தொகை - 312 பேர் குடும்பங்கள் 113
எகெட் வீடமைப்பு திட்ட வீடுகள் - 86
கவிட்டாட் வீடமைப்புத் திட்ட வீடுகள் - 54

சனத்தொகை நாளுக்கு நாள் மாற்றமடைந்து கூடிக்கொண்டு போவதாக கிராம அபிவிருத்தி சங்கத் தலைவரும், கிராம சேவையாளரும் கூறினார்கள்.

குறிப்பு : இயற்கை அனர்த்தம் என்ற பகுதியில் விரிவாக உள்ளது.

# கடல் நாச்சியம்மன் ஆலயங்கள்

"பிற கடல்நாச்சி/கடல்ஆச்சி அம்மன் ஆலயங்கள்" மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ் ஆலயங்கள் அமைந்துள்ள இடங்களை நோக்கின் பெரிய கல்லாற்று கடல்நாச்சியம்மன் ஆலயத்தில் ஒருநாள் உற்சவவிழா மிகவும் சிறப்பான முறையில் நடைபெறும்.

மட்டக்களப்பு மாவட்டம் ஸ்ரீ வெல்லாவெளி கடலாச்சியம்மன் கோயில் (அம்பளாந்துறை, குருக்கள்மடம்) பழமைவாய்ந்த கோயில் இங்கே விஷேட தினங்களில் வழிபாடுகள் நடைபெறும் என **"இலங்கைத் திருநாட்டின் இந்துக் கோயில்கள் என்ற நூலில் 1984-281)"** குறிப்பிடப்பட்டுள்ளது. மட்டக்களப்பு நாவலடி, இங்கே குறிப்பிடப்படும் **"கடலாச்சியம்மன்"** ஆலயத்தில் 7 நாள் உற்சவ விழா வெகுவிமர்சையாக நடைபெறும்.

**ஆலயமும் ஆலய சுற்றுப்புறமும்**



# கிராம சமூகங்களின் பண்பாட்டு பின்புலத் தொடர்பு

கிராம சமூகங்களின் பண்பாட்டு பின்புலத் தொடர்பு:- அந்த வகையில் அமிர்தகழி, பெரியகல்லாறு, கோட்டைக்கல்லாறு கிராமங்களுடன் நாவலடி கடலாச்சியம்மன் ஆலயம் தொடர்புபட்டுள்ளது. நாவலடி கடலாச்சியம்மன் ஆலயம் இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்பு 1932ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அவ் வேளை நாவலடியில் (10-15) குடும்பங்களே வசித்து வந்தார்கள். அவர்களது வழிபாட்டுத் தொடர்புகள் அமிர்தகழி மாரியம்மன் கோயிலிலே இருந்தது.

நாவலடி மக்கள் (1932 இற்கு முன்) அமிர்தகழி மாரியம்மன் கோயில் உற்சவகாலங்களில் எட்டு ஊர்களுக்கான சடங்கை நடத்தி வந்தனர். அதில் ஒரு சடங்கு நாவலடி ஊர் மக்களுக்கென வழங்கப்பட்டது.

1932ம் ஆண்டு அமிர்தகழி மாரியம்மன் கோயிலில் வண்ணக்குமார் தெரிவு நடந்தபின்னர் சடங்கு செய்யச் சென்ற போது கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டு "கோயில் இல்லாத ஊிலிருந்து வருவோருக்கு சடங்கு" எதற்கு என்று கூறியதாகவும் அக் காரணத்தால் தமது ஊரான நாவலடிக்கு ஒரு ஆலயம் அவசியம் என எண்ணி ஊர் மக்கள் அனைவரும் சேர்ந்து அவ்வருடமே திரைவளைந்து சடங்கு செய்யப்பட்டது என்று அறிய முடிகின்றது.

(தகவல் நாவலடி ஊர் மக்கள்)

அமிர்தகழி மாரியம்மன் கோயிலில் ஆரம்பத்தில் எட்டு ஊர்களைச் சேர்ந்தோர் சடங்குகளை இணைந்து செய்து வந்தார்கள். எட்டு ஊர்களாவன அமிர்தகழி, நாவலடி, ஊறணி, மட்டிக்களி, புன்னைச்சோலை, பாலமீன்மடு, உப்புக்கராச்சி, கருவேப்பங்கேணி என்பனவாகும். இக் கிராமங்களைச் சேர்ந்தவர்கள் காலப்போக்கில் (இக் கோயிலில் சடங்கு செய்வோரிடையே காணப்பட்ட திருப்தியீனம், கருத்து முரண்பாடுகள் காரணமாக) தங்கள் ஊருக்கென கோயில் அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து தங்கள் ஊர்களில் காணப்பட்ட சிறிய கோயில்களைப் பெருப்பித்தும் சில கோயில்களைப் புதிதாகவும் ஸ்தாபித்தனர். அவை மட்டிக்களி திரௌபதை அம்மன் கோயில், புன்னைச்சோலை காளிகோயில், நாவலடி மாரிகடலாச்சி அம்மன் கோயில், ஊறணி பேச்சியம்மன் கோயில், கருவேப்பங்கேணி கண்ணகி அம்மன் கோயில், உப்புக்கராச்சி குளக்கட்டு கண்ணகி அம்மன் கோயில் பாலமீன்மடு - முத்துமாரியம்மன் கோயில் என்பவையாகும். அவ்வூர்களில் அம்மன் கோயில்கள் ஸ்தாபிக்கப்பட்டதன்பின், குறிப்பிட்ட 8 ஊர்களுக்குமுரிய சடங்குகள் நிறுத்தப்பட்டு பின்னர் அமிர்தகழியைச் சேர்ந்தவர்களாலேயே இச் சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன. திருமணத் தொடர்புகளை இந்த ஊரவர்கள் அமிர்தகழியுடன் கொண்டுள்ளதாகக் கூறுகின்றனர்.

(வாய்மொழி மரபுகள் வரலாற்று மூலங்களாக)

நாவலடி ஸ்ரீ மாரியம்மன் எனக் குறிப்பிட்டதன் காரணம் அது மாரியம்மன் கோயிலில் இருந்து பிரிந்ததனாலாகும். மாரியும் கடல் நாச்சியும் இணைந்தமைக்கான காரணம் இங்கு கடல் தொழிலாளர்கள் அதிகம் வாழ்கின்றனர் அவர்கள் கடலன்னையை வணங்கிச் செல்ல வேண்டியுள்ளது எனக் கூறப்படுகின்றது.

### *பெரிய கல்லாற்று தொடர்பு*

ஆலயக் காணியைக் கொடுத்துதவி கோயிலைக் கட்டுவித்தவர் திரு. குஞ்சித்தம்பி தம்பியப்பா என்பவர். கல்லாற்றுடன் தொடர்புபட்டவர்.

கோட்டைக் கல்லாறு, பெரியகல்லாறு தொடர்புகள் காணப்படுகின்றன. உற்சவகால 1ம் உபயக்காரரான திரு. இராமக்குட்டி கதிரமலை வைத்தியர் குடும்பத்தினர் பெரிய கல்லாற்றைச் சேர்ந்தவர்கள். திரு. குஞ்சித்தம்பி தம்பியப்பாவின் மச்சான், திரு. தப்பியப்பா தப்பிப்பிள்ளை கோட்டைக் கல்லாற்றைச் சேர்ந்தவரின் தம்பியப்பாவின் மகனாவார். இவ்வாலயத்தில் ஆரம்பகாலங்களில் பூசை செய்த தலைமைப் பூசாரி கோட்டைக் கல்லாற்றைச் சேர்ந்த திரு. சித்திரக்கட்டாடி என்பவராகும். இவரது இறப்பின் பின்னர் இவரது சீடர்கள் பூசையை நடத்தி வந்துள்ளனர்.

கடலம்மன் இலக்கியத்திலுள்ள ஒரு பாடலில் இவ்வாறு அமைந்துள்ளது.

"கண்டந்தக் கன்னியர் கப்பலேறிக்
கல்லாறு மட்டக்களப்பிலிறங்கி
வந்தாள் கன்னியர் வந்தாள்
மழைமாரி பொழிந்திட வந்தாள் வந்தாள்.."

இந்த இலக்கியம் 250 வருடம் பழமை வாய்ந்தது எனத் தொல்காப்பிய ஆய்வாளர் திரு.நா.நவநாயக மூர்த்தி என்பவர் குறிப்பிடுகிறார். பண்டிதர் சீ.தம்பிராசா என்பவர் பெரியகல்லாற்று கடல்நாச்சியம்மன் கோயில் பற்றிக் குறிப்பிடும் போது இவ்வழிபாட்டுமுறை தமிழகத்திலிருந்து இலங்கை கிழக்கிற் கல்லாற்றில் முதன்முதல் காலூன்றி மற்றைய இடங்களுக்குப் பரவியிருந்ததாகவும் அறியக் கிடைக்கின்றது என்கிறார். இதன்படி அமிர்தகழி, கல்லாறு (பெரியகல்லாறு, கோட்டைக்கல்லாறு) நாவலடி முதலிய கிராம சமூகங்களின் சமூக பண்பாட்டுத் தொடர்புடனான பின் புலத்தை அறியக் கூடியதாக உள்ளது.

# நாவலடி கடலாச்சியம்மன் ஆலய தோற்றமும் வளர்ச்சியும்

மட்டக்களப்பினை எழுவான்கரை படுவான்கரை எனப் பிரித்து விளங்கிக் கொள்வர். கடல்சார்ந்த பிரதேசம் எழுவான்கரை என்றும் காடும், வயலும் சார்ந்த பிரதேசம் படுவான்கரை எனவும் அழைக்கப்படும். கல்லடிப்பாலத்தில் நின்று பார்க்கும்போது சங்ககால ஐவகை நிலங்கள் கண்முன்னே தோன்றும். இவை இரண்டின் நடுவே சலசலத்தோடும் 25 மைல் நீளமுடைய வாவி, இங்கு வாழும் மக்களின் வாழ்வுடன் பயனுள்ளவகையில் இணைந்து காணப்படுகிறது. நாவலடி கிராம மக்களின் தொழில், போக்குவரத்து, பொழுதுபோக்கு (குளித்தல், நீச்சல்போட்டி, படகோட்டப்போட்டி, வேறு ஊர்களில் இருந்து வருபவர்களை சுற்றிக் காட்டுதல் முக்கியமாக (வாவியும் கடலும் சங்கமிக்கும் முகத்துவாரம்) இந்த இடம் இயற்கை எழிலுடன் பல மக்களை கவர்ந்து கொள்ளை கொள்ளும் இடமாகக் காணப்படுகின்றது.

வாவிவங்கக்கடல் நடுவே நாவல் மரங்கள் நிறைந்து விளங்கிய நாவலடி என்னும் ஊரில் பக்தர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட மக்களைக் காத்து நோய்பல தீர்க்கும் **"ஸ்ரீ மாரிகடலாச்சியம்மன்"** ஆலயம் அமைந்துள்ளது.

ஆரம்பத்தில் மாரியம்மன் ஆலயமாகவே 1932 இல் இவ்வாலயம் ஸ்தாபிக்கப்பட்டதாக வரலாறு கூறுகிறது. நாவலடியில் வாழ்ந்த 10-15 குடும்பங்களும் இரத்த உறவுடன் கூடியவர்களாகவும் ஒருவருக்கொருவர் துணையாகவும் ஒற்றுமையாகவும் வாழ்ந்தார்கள். இதன் காரணமாக தங்களுக்கென ஒரு ஆலயம் வேண்டும் எனத் தீர்மானித்து பத்ததி

வழிபாட்டிற்கு ஆலய கட்டிடம் கட்டாயம் அவசியம் என்றில்லாதபடியால் தற்போதுள்ள தீர்த்தக் கிணற்றுக்கு முன்னால் திரைவளைந்து சடங்கு செய்யப்பட்டதாக அறியப்படுகிறது. அதன்பின் ஓலையால் வேயப்பட்ட சிறு கோயில் கட்டப்பட்டு சில வருடங்கள் வழிபாடு செய்யப்பட்டது. இக்கோயிலை திரு.குஞ்சித்தம்பி தம்பியப்பா என்பவர் கட்டிக் கொடுத்துள்ளார். 1941 ஆம் ஆண்டில் ஊர்மக்கள் உறவினர்களின் ஒத்தழைப்புடன் சிறிய மடாலய கற் கோயிலை திரு.குஞ்சித்தம்பி தம்பியப்பா என்பவரே கட்டுவித்து கும்பாபிஷேகம் செய்வித்துள்ளார். கும்பாபிஷேகம் 26.06.41ல் நடைபெற்றது. (ஆதாரம் காணி இல. 6527 - 12.03.35 கும்பாபிஷேக துண்டு பிரசுரம்) 15 நாட்கள் மண்டலாபிஷேக சடங்கு செய்யப்பட்டுள்ளது. ஊர் மக்கள், உறவினர் பொறுப்பெடுத்துச் செய்துள்ளனர். ஒருவரின் சடங்கை விட மற்றவர் சடங்கு சிறப்பாக அமைய வேண்டுமென போட்டிபோட்டுச் செய்யப்பட்டதாக (ஊரவர் தகவல் கூறினர்) மூன்று நாள் சடங்காக செய்யப்பட்டு வந்த சடங்கு 1941 ஆம் ஆண்டின் பின் 5 நாட்களாக செய்யப்பட்டுள்ளது. (சடங்கு பற்றிய பகுதியில் விரிவாகத் தரப்பட்டுள்ளது.)

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திரு.தா.சி.சின்னத்தம்பி என்பவர் ஆலயக் கிணற்றைக் கட்டுவித்துக் கொடுத்ததுடன் 1959 ல் மூலஸ்தானத்திற்கு அடுத்துள்ள அர்த்தமண்டபத்தையும் இவரே கட்டுவித்துள்ளார். பரிவாரத் தெய்வங்களுக்குரிய பந்தல்கள் அமைக்கப்பட்டன

| | |
|---|---|
| திரு.இராமக்குட்டி கதிரமலை குடும்பத்தினர் | நாகதம்பிரான் பந்தல், |
| திரு. நல்லதம்பி குடும்பத்தினர் | வைரவர் பந்தல் |
| திரு.வேல்முருகு குடும்பத்தினர் | காளிபந்தல் |
| திரு.கதிர்காமத்தம்பி குடும்பத்தினர் | ஐயனார் பந்தல் |
| திரு. விநாசித்தம்பி குடும்பம் | கழுமரப் பந்தல் |
| ஆலய நிருவாகம் | கம்பகாமாட்சி பந்தல் |
| ஆலய நிருவாகம் | வீரபத்திரர் பந்தல் |
| ஆலய நிருவாகம் | திரைசேர்மடந்தை பந்தல் |

திருதுரைராசா குடும்பத்தினர் வெளிப்பந்தல் ஆகிய குடும்பத்தினரால் அமைக்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

1976ம் ஆண்டு நிருவாக முறையில் மாற்றம் வேண்டும் என விரும்பியதால் வண்ணக்குமுறை மாற்றப்பட்டு பரிபாலன சபையாக்கப்பட்டுள்ளது. (நிருவாகமுறை தனிப் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது)

1978 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 23ம் திகதி வீசிய சூறாவளியாலும் கடற்பெருக்காலும் (சிறிய அளவில்) மூலஸ்தானம் தவிர்ந்த முன்மண்டபங்கள் சேதத்திற்குள்ளாயின.

அன்னையின் அருளினாலும், அரசாங்கத்தின் புனருத்தான நிதி ஒதுக்கீட்டினாலும், ஊரவரின் மனமுவந்த நன்கொடையாலும் புதிய நிருவாகத்தினரைக் கொண்ட ஆலய பரிபாலன சபையினரின் அயராத முயற்சியாலும் ஆலயம் முன்பிருந்ததைவிட உறுதியாகவும் அழகாகவும் அமைக்கப்பட்டது, சடங்குகள் 7 நாட்களாக அதிகரிக்கப்பட்டன. 1985 ஆம் ஆண்டு அழகிய கருணை பொங்கும் கம்பீரமான சிலை முகப்பில் வைக்கப்பட்டது. அச்சிலையை திரு.ந. கணபதிப்பிள்ளை குடும்பத்தினர் அமைப்பித்துக் கொடுத்துள்ளனர். இதனை வடிவமைத்தவர் புதூரைச் சேர்ந்த திரு.இராமநாதன் என்னும் சிற்பியாவர். இந்த சிலை சரியான பத்ததிமுறையில் (வாகடம்) அமைக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

மீண்டும் ஏற்பட்ட நிருவாக மாற்றத்தின் பின்னர் 2000ம் ஆண்டின்பின் ஊர்பொது மக்கள், பக்தர்கள், நலன்விரும்பிகள், பரிபாலன சபையினரது தொடர் முயற்சியாலும் ஆலயம் மகராஜ் தந்திரானந்தா சுவாமிஜீ அவர்களினால் அடிக்கல் நாட்டப்பட்டு மட்/முன்னாள் கல்விப்பணிப்பாளர் திரு.பவளகாந்தன் அவர்களால் கருவறை பிரமாணத்திற்கமைய ஏனைய மண்டபங்கள் காவல் தெய்வங்களுக்கான பந்தல்களும் வகுக்கப்பட்டு கொடுக்கப்பட்டது. புனருத்தாரன வேலைகள் துரிதகதியில் இடம்பெற்றது.

ஸ்ரீமாரிகடலாச்சியம்மன் கருவறை விமானம், அர்த்தமண்டபம் மிகவும் உறுதியான முறையில் பெரிதாக அமைக்கப்பட்டது. மகாமண்டபம் கட்டுப்பட்டு ஓட்டினால் வேயப்பட்டது. கட்டிட வேலைகள் பரிவாரத் தெய்வத்திற்கான பந்தல்கள் அமைக்கப்பட்டபின் 09.06.2004 - 23.06.2004 கும்பாபிஷேக பெரும்சாந்தி விழா கிரியாகால நிகழ்வுகளும் மண்டலாபிஷேகம் முறையில் கிரியைகள் செய்யப்பட்டது. எண்ணெய்சாத்துதல், பாற்குடபவனியும் பாலாபிஷேகமும், 108 சங்காபிஷேகம் செய்யப்பட்டு மகாகும்பாபிஷேக சாந்திவிழா செய்யப்பட்டது. அவ்வாண்டு பூக்குழி அமைக்கப்பட்டு தீப் பாய்தல் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

26.12.2004 இல் சுமத்திரா தீவுகளின் நில நடுக்கத்தினால் வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட கரையோர அலைகள் சுனாமித் தாக்கத்தில் பல நாடுகளின் கரையோரப் பகுதிகள் தாக்கப்பட்ட வேளை இலங்கையின் கரையோரப் பகுதிகள் பாரிய தாக்கத்திற்குள்ளாயின. அந்த வகையில் கடலரக்கன் சில நிமிடங்களே சீறி சினந்து ஆர்ப்பாட்டம் செய்து சென்றதனால் வங்கக்கடலோரம் அமைந்திருந்த நாவலடி கிராமமும் மிகவும் பாதிப்பிற்குள்ளாகியது. இவ் இயற்கை அனர்த்தத்தின் போது பலர் உயிரிழந்தனர். கட்டிடங்கள், குடியிருப்புக்கள் எல்லாம் அடித்து நொறுக்கப்பட்டன, கடலாச்சியம்மன் ஆலயத்தின் மூலஸ்தானம் அர்த்தமண்டபம் காப்பாற்றப்பட்டு மகாமண்டபம், பந்தல்கள், முகப்பு சிலை என்பன சேதமடைந்தன.

2007ம் ஆண்டு சக வாழ்வு மன்றத்தின் பெரும் நிதி ஒதுக்கீட்டினாலும், இந்து கலாசார அமைச்சின் சிறு நிதி ஒதுக்கீட்டினாலும், மக்களின் நன்கொடையாலும் மகாமண்டபம், பந்தல்கள் அமைக்கப்பட்டன. ஆலய நிருவாக சபையினரும், தனிப்பட்டவர்களும், ஊர் மக்களும் சேர்ந்து ஆலய புனருத்தாரணத்திற்கு உதவினர். கடலாச்சியம்மன் மகா கும்பாபிஷேக பெரும் சாந்தி விழா 2007ம் ஆண்டு ஆனிமாதம் 15ந் திகதி தொடக்கம் 22.06.2007 மீண்டும் நடைபெற்றது. பரிவாரத்

தெய்வங்களுக்கான பந்தல்களில் காளி பந்தலை ஆலயபரிபாலன சபையினருடன் இணைந்து திரு. வேல்முருகு குடும்பத்தினரும் கழுமரம் திரு.க. வினாசித்தம்பி குடும்பத்தினரும், கம்பகாமாட்சி பந்தல் திரு.பாக்கியராசா குடும்பம், ஐயனார் பந்தல் திரு. கதிர்காமத்தம்பி குடும்பம், ஆஞ்சநேயர் பந்தல் திரு. பத்தினிகுமார் (நளினி) குடும்பம் நாகதம்பிரான் பந்தல், காளி கோயில் பந்தல், மடப்பள்ளி, அன்னதான மடம் கோயிலுக்கு வந்த நிதி ஒதுக்கீட்டின் மூலம் பெறப்பட்ட நிதியைக் கொண்டும் பொது மக்களால் கட்டப்பட்டது,

2007 ல் புதிய யாப்பு விதிகள் ஆலய பரிபாலன சபை நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டன. ஆலயம் தனிப்பட்டவர்களுக்கா? அல்லது ஊர் மக்களுக்கா? சொந்தம் என்ற முரண்பாடு ஏற்பட்டு இறுதியில் நீதிமன்ற தீர்ப்பின்படி ஆலயமும், காணியும் பரிபாலண சபையினரிடமும், ஊரவர்களிடமும் ஒப்படைக்கப்பட்டது. 2008ம் ஆண்டு உற்சவம் சிறப்பாக நடைபெற்றது. 2009ம் ஆண்டில் திரு.ந.கணபதிப்பிள்ளை குடும்பத்தினரால் முகப்பு சிலை திருத்தி வடிவமைத்துக் கொடுக்கப்பட்டது. முதலில் இருந்த இடத்தைவிட சிறிது மேலே மேடையமைக்கப்பட்டு அதற்கான முகப்பு சிலை வைக்கப்பட்டது. திருவாசியை திரு.நா.சிசுபாலன் என்பவர் அமைத்துக் கொடுத்தார் முகப்பு சிலை வைக்கப்பட்ட அன்று நாகதம்பிரான் ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது (ஆலயபரிபாலன சபை).

2009ம் ஆண்டு உற்சவ விழாவிற்கு, ஆலயத்திற்கு கவலையுடன் வராமலிருந்த பலர் வந்தனர் மிகவும் சிறப்பாக நடைபெற்று முடிந்தது அம்மனின் விழா.

**குறிப்பு** : சடங்குமுறை, கும்பாபிஷேகம், நிருவாகமுறை, இயற்கை அனர்த்தம் என்பன ஆலய வளர்ச்சியில் முக்கிய ஆவணங்களாக இருப்பதால் பின் பகுதியில் விரிவாகத் தரப்பட்டுள்ளது.

# ஸ்ரீமாரி கடலாச்சியம்மன் ஆலயம் என நாமம் ஏற்பட்டதற்கான ஐதீகம்



ஸ்ரீமாரியம்மன் என்ற பெயர் ஏற்பட்டதற்கான காரணம் அமிர்தகழி மாரியம்மன் ஆலயத்திலிருந்து பிரிந்து வந்த வரலாறு மேலே கூறப்பட்டுள்ளது. கடலாச்சியம்மன் என்ற பெயர் இணைந்தமைக்கான காரணத்தை ஆராய்ந்த போது கடலம்மனை வணங்கி கடற்தொழில் செய்யச் செல்லும் நாவலடி ஊர்மக்களிடம் ஆதியில் ஒரு காணிக்கை உண்டியல் மாத்திரம் பிரதி நிதியாக இருந்தது. கடலுக்குத் தொழிலுக்குச் செல்வோர் தமக்கு எத்தகைய தீங்கும் நேரா வண்ணம் கடல் அம்மனை வேண்டி பணம் போட்டு வந்தார்கள். இப்பணம் ஆலய சடங்கின் போது பாவிக்கப்பட்டதாக ஐதீகம்.

இன்னொரு கதை கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற சிலர் புயல்காற்றின் காரணமாக கடலில் வழிதெரியாது தடுமாறி அலைந்தபோது கடலம்மன் தோன்றி காப்பாற்றி குறிப்பிட்ட இடத்தில் கோயில் கட்டுமாறு கேட்டுக் கொண்டதாகவும் கூறப்படுகின்றது.

ஆரம்பகாலங்களிலிருந்து கம்பகாமாட்சியாய் சந்நதம் கொண்டு ஆடிய திரு.க.தம்பிப்பிள்ளை (ஜர்மர்) என்பவர் சடங்கு நடைபெறும்போது அற்புதம் நிகழும் எனக் கூறியவாறு அற்புதம் நிகழ்ந்ததாகவும் (அபிராமிபட்டரின் கதையை நினைவு கூரவைக்கின்றது) அவர் கூறியவாறு சந்திர உதய நேரத்தில் கடலில் மூன்று சோதிப் பிழம்புகள் தோன்றி அற்புதம் நிகழ்ந்ததாகவும் அக்காட்சியைக் கண்டவர்கள் மெய்சிலிர்க்க கண்களில் நீர்சொரிய கடலம்மனை வாழ்த்தி வணங்கியபோது அன்று அவர்கூறிய

அருள்வாக்கில் மாரியே கடலாச்சியாய் முகம் மாறி வருவதாக கூறப்பட்ட வாக்கை மக்கள் ஏற்றுக் கொண்டனர். சடங்கின்போது "போலச் செய்தல்" நடைபெறுகின்றது அதாவது மாரியம்மன் கடலுக்குச் சென்று கன்னிமார் புடைசூழ முகம்மாறி கடலாச்சியம்மனாக ஆலயம் வந்ததும் திரைசேர்மடந்தைக்கான பூசைகள் நிகழ்த்தப்படுகின்றது.

(தகவல் - 1919ம் ஆண்டு பிறந்த திரு.ந.கணபதிப்பிள்ளை, திரு.ச.தங்கவேல், தலைமைபூசாரியாக கடமைபுரியும் திரு.சோ.லிங்கேஸ்வரன் உண்மையாக நடந்ததாக கூறினார்.) இவர்கள் ஆலயத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களாகும்.

எனவே, பஞ்சம், பட்டினி, நோய்களிலிருந்து காக்கும் மாரித்தாயாகவும் கடல்வளத்தைக் கொடுப்பவளாகவும், புயல்காற்று என்பவற்றிலிருந்து காப்பவளாகவும் கடல் அம்மனாக மக்கள் துயர்போக்கும் தாயாக கடலாச்சியம்மன் நாவலடியில் வீற்றிருந்து மக்களுக்கு அருள் புரிகின்றாள் **அன்னையின் நாமம்** 1935 ஆம் ஆண்டு எழுதப்பட்ட உறுதியில் ஸ்ரீ முத்து மாரியம்மன் கடனாச்சியம்மன் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

கடல் நாச்சி அம்மன், கடல் ஆச்சி அம்மன், கடலம்மன் என்ற பல நாமங்களில் அழைக்கப்படுகின்றது, நாவலடி ஆலயம் 2007ல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்ட யாப்பின்படி **"கடலாச்சியம்மன்"** என பெயர் பெறுகிறது. படுவான்கரையில் ஆச்சி என்பது - தாய் என்றும் நாச்சி என்பது அதிகாரமிக்க தாய் என்னும் கருத்தில் வழங்கப்படுகின்றது. நாவலடி ஆலய காணி உறுதியில் (உறுதி இல. 6527-1935 இல் எழுதப்பட்டதன்படி) ஸ்ரீ முத்துமரியம்மன் கடல் நாச்சியம்மன் எனவும் கும்பாபிஷேக துண்டுப்பிரசுரத்தில் 1941/6/26 ஸ்ரீ மாரியம்மன் கோயில் சம்புரோஷன கும்பாபிஷேக விஞ்ஞாபனம்) என்றும் 2004ம், 2007ம் ஆண்டுகள் நடைபெற்ற கும்பாபிஷேக துண்டுப் பிரசுரங்களில் மட்/நாவலடி ஸ்ரீ மாரி கடல்நாச்சி அம்பாள் கும்பாபிஷேக பெரும்சாந்தி விழா கிரியாகால நிகழ்வுகள் மண்டலாபிஷேகம் 09.06.2004 - 23.06.2004 வரை நிகழும் என கண்டுள்ளது. 2007இல் ஸ்ரீமாரி கடல்நாட்சி அம்பாள்

ஆலய மகாகும்பாபிஷேக சாந்திவிழா - 2007 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்பின் 05.06.2007 அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட யாப்பு விதியில் இந்த யாப்பு கடலாட்சி அம்மன் யாப்புவிதி எனப் பெயர் பெறும் என்றும் பெயர் - நாவலடி ஸ்ரீகடலாச்சி அம்மன் ஆலய பரிபாலனத்தை உள்ளடக்கும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பின் 2008ம், 2009ம் ஆண்டு வருடாந்த உற்சவ துண்டுப் பிரசுரத்தில் மட்/நாவலடி அருள்மிகு ஸ்ரீமாரி கடலாச்சி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நாவலடி மக்கள் பெற்றதாய்க்கும் மேலான இடத்தை இவ்வம்மனுக்குக் கொடுத்துள்ளதால் **"கடலாச்சி"** அம்மன் என்றே அழைக்கின்றனர்.

# மகா மாரியம்மன் திவ்வியகரணி

**கடனாச்சியம்மன் காவியம்**

"மகாமாரி யென்றுனை நினைப்பவர் தமக்கு
வாதமொடு பித்தஞ் சிலோற்பனங் கண்நோய்
வகை தோஷ மானதொரு நோய் கிரகதீவினைகள்
பாடுபட்டோடு முன்நாமங்கள் சொன்னால்
விளை செந்நெல் மழைபெய்து நீடுழிவாழி"

**கடனாச்சியம்மன் அவதாரத்தினை மகாமாரி திவ்விய கரணியில் கடலம்மன் காவியம் கூறும் வரலாற்றினை நோக்கின்**

"திருமருவுங் கைலயங்கிரி மீதிலே யன்று
........................................
காத்தருளியே இலங்காபுரியில் அன்று
கண்கண்ட தெய்வமென நம்பினோர்க்கு
நோய் தீர்த்தருளியே உலகமாதா எனத்தான்
தேவிதன் கலையில் வரும் தெய்வம் நீயன்றோ"
........................................

"மலரடி பணிந்தெனது மாதாவே நீரிங்கு
வந்த வாறேது வகையுரையுமென்ன
அதியரசனுக்கு மகளாகி நானிங்கு
வந்தேனிலங்கைக்கு வரவேணு மென்று
கணிதமுடனே பூசை அர்ச்சனைபுரிந்து
கன்னிமாரோடு கூடிக்கப்பலேறி
அனி மட்டக்களப்பாழிசேர் அணைந்து நின்றதுவே"

"வந்தனையவே தாரைதவில் கொம்புதாளம்
மத்தளமுடன் பெரிய எக்களம் ஊதச்
சந்தனமுடன் பூ கமலர் தாழை கதலி
சாந்து சவ்வாதுடன் பன்னீர் கரும்பு
முந்தவே பாவாடை மேற்தட்டியோடு
முன்னீடு பின்னீடு வெற்றிலை பரப்பி
சிந்தையுடனே காவியம் குரவைபோடத்
திரைசேர் மடந்தை சிவபூசை கொண்டனளே"

## காவிய வரலாறு (சுருக்கமான ஒரு பார்வை)

கயிலை மீதிலே சிவனுமுமையும் ஒன்றாகி அன்போடிருந்த வேளை பார்வதிக்குப் பரிவோடு குடிலைதனை ஓதிடவே எண்ணி யாரும் அறியாதவண்ணம் ஓதும்போது ஏதிதுவோ ரகசியம்? நான் அறிவேன் என்று இளமுருகன் வண்டு உருவாகி கேட்டார். கேட்டதை தன்மனதில் வைக்காது கெதியாக அதனை தேவர்கள், முனிவர்கள், பலருக்கும் கூறவே கந்தனால் ரகசியம் வெளியானதை அறிந்து ஆட்டுகிறேன் இதனை அனைவருக்கும் உரைத்த அம்மைமகனாரை என சிவனார் ஆத்திரமடைந்தார். அம்மையார் அதியரசன் மகளாக அவதரியுமென்றும் மயிலோனை மகரமாய்க் கடலில் சேரென்றும் தோத்திரம் செய்தெம்மை தொழுது வரும்வேளை துன்பமது தீருமெனக் கூறி விரைவில் கயிலை மலையை அடைந்தார். சிவனின் சாபத்தினால் கதிரேசன் கடல்மீது மகரமாகச் செல்ல எண்ணரிய துயருற்ற எழில்சேர்மடந்தை இவ்வுலகில் அதியரசன் மனைவி வண்ணவல்லிக்கு மகளாகப் பிறந்து மிகவும் அழகுள்ளவளாக எண்ணரிய மக்கள் துயர் தீர்க்கும் மடந்தையாய் இருந்தார். அதியரசனுடைய நாட்டில் வரும் கப்பல்களை எல்லாம் பெரிய மீனாய் அவதரித்தகந்தன் அடித்து உடைத்து வந்ததால், இன்னல் கண்டு மனம் ஏங்கியே வாடி பொங்குசினம் கொண்டு மகரம் பிடிப்போர்க்கு பூவையையும், பதியையும் தருவேன் என்றான். எல்லோருக்கும் இச்செய்தி அறிவிக்கப்படவே சிவனும் இதுதான் நல்ல தருணம் என எண்ணி அந்தணராக உருமாறி நந்தியொடு தேவகணத்தோரை அழைத்து சீக்கிரமாகவே வலைமுடியுமென்றார் இளநிலவு படகில் அதை ஏற்றி இழுகயிறாக சோடணை செய்து நின்றவர்கள் ஓடத்தில் ஏற்றி வலையால் நீள் மகரந்தன்னை தேடிவளைத்து (கரைவலை இதன்பின்புதான் உருவானது என்று வரலாறு அறிந்தோர் கூறுகின்றனர்.)

ஓவேலன் வாவேலவா என்று எண்திசையும் அசையவே இழுத்து எடுக்க இளமுருகன் மகரமாய்க் கரையை அடைந்தார். மகிழ்வுடனே சிலர் அதியரசனிடம் ஓடிச் சென்று சிகரமது போல கிடந்த மகரத்தைச் சீக்கரமே

தரை மீதிழுத்தோம் என்று கூற மகிழ்வோடு ஓடிவந்து மன்னன் பார்த்து மிகவிரைவில் அந்தணருக்கு தன்மகளைத் திருமணம் செய்து வைப்போமென்று மாளிகை அடைந்து மகளர்க்கு திருமணம் செய்திடவே விரைவாக மேளதாளங்களோடு பந்தலுக்கழைத்து வேதியனாய் வந்தவரை அங்கே அழைத்து நாளொடு திருமணம் செய்திட எண்ணி நங்கையொடு மனைவியையும் அங்கேயழைக்க ஊழ்வினையோ? இதுவென்று தாயும் மகளும் ஒன்றாகவே நஞ்சுண்டு உயிரை விட்டனர். உயிரிழந்தாரென்றறிந்த மன்னவனும் ஒன்றுமே செய்வதறியா தங்குவாடி நயமாக வேதியர்களித்த வாக்கை நான் நாதனே எப்படிச் செய்வேனென்றேங்க தைரியமாய் முன்வந்து வேதியருப்போ தரவேண்டும் திரைசேர்மடந்தை சவமென்று திருநீற்றை நந்தியிடம் வாங்கியே அவரும் திரைசேர் மடந்தை உடல்மீதெறிந்தார். மடந்தையும், தாயும் எழுந்திடவே அதனை அறிந்தவர்கள் சிவனாரின் அரிய செயலைக் கண்டு ஆதிசிவநாதரிவர் என்றேபணிந்து சிறந்த நற் திருமணம் திரைசேர் மடந்தைக்குச் செய்திடவே சிவனாரும் ஆசிகள் வழங்கி மறைந்தாரே மங்கையொடு கைலாயம் நாடி.

வானவர்கள், தேவர்கள் மன்றாடி நிற்க தேவலோகத்திலே கன்னிமார் புடைசூழ கடல்மீது (திரைமீது) சுற்றுலாச் சென்றிடவே எண்ணி வால புவனேஜ்வரி மணி நாவாய் (படகு) ஏறி மங்கையர்களோடு மகிழ்ந்து விளையாடி தூய நறுமர் சூடிநின்ற வேளை, துரிதமுடன் ஓந்தக்காரன் கந்தன் கப்பல் பாய்மரம் தெறித்தே நிற்க பலபேரும் கரைதனை பார்க்கின்றவேளை, தேவியொடு கன்னிமார் பலரங்கு நிற்பதைக் கண்டு மெய் நடுங்கி ஈஸ்வரியார் பாதம் பணிந்து மன்றாடி தார் சூடும் (பூச்சூடும்) மாதாவே குற்றம் பொறுத்து தயவுடனே எங்கள் பிழைதான் களையுமென்று தாயாரின் பாதமதில் வீழ்ந்து மன்றாடிய கந்தனோடு மற்றோரும் போற்றியே (வணங்கி) புஸ்பமொடு செங்கரும்பிளநீர், புனுகு சந்தனமொடு, சவ்வாது சாந்து ஏற்றமிகு சக்கரைப் பொங்கலுமிட்டு இனிய பால் தேன் கதலி பாணக்கம் சேர்த்து நாற்றிசையும் வலம்வந்து மன்றாடி நின்று தாயாரே எம் பூசை ஏற்றருளும் என்று பணிந்து மாதாவே நீரிங்கு வந்த வாறேது

வகையுரையுங்கள் எனக்கேட்க அதியரசன் மகளாக நானிங்கு வந்தேன் இலங்கைக்கு வரவேனுமென்று கணித்திருந்தபடி பூசை அர்ச்சனை பூசையினை கருணையுடன் ஏற்று கன்னிமாரோடு கூடிக்கப்பலேறி மட்டுநகர், ஆழிசேர்கரையருகிப் (கல்லாற்றுக்) கரைதனிலும் இறங்கியவர் இடு பூசை தன்னையும் ஏற்று பூசைதனிலே வந்து வல்லிமார் கன்னிமார் பொங்கலொடு பாலாமிர்தம் உண்டு உள்ளம் மகிழ்ந்து நேசமுடனே அடியவர்களின் மனத்துயர் தீர்த்து பாசவலை கொண்டு யமதூதர் வந்தாலும் பயமின்றியே எனது பெயரைக் கூற துன்பம் அகன்றிடுமே மாற்றிய வரங்களெல்லாம் மக்கட்களித்து வாரியிலே துயர்வரா வரமும் கொடுத்து தேசமெங்கும் காவல் கொண்டு திறைசேர் மடந்தை தெய்வமாதாவாகினார் வேற்றுருவாகியே கயிலையை அடைந்து சிவனார் பாகமதில் வீற்றிருந்தார்.

காவிய வரலாறு இவ்வாறுரைக்கின்றது.



# சடங்கு, சடங்குமுறை, வழிபாடு

இவ்வாலய உற்சவம் சடங்குகள் செய்யப்பட்டு ஆனிப் பூரணையன்று ஆலயத்திற்கு முன்னாலுள்ள சாகரத்தில் கும்பம் சொரிதலுடன் முடிவுறும் சமூக, பொருளாதார வசதிக்கேற்ப 1,3,5,7 நாட்களாக மாற்றப்பட்டுள்ளது. 1932ம் ஆண்டு ஊரவர்கள் சேர்ந்து திரைவளைந்து ஒரு நாள் சடங்கு செய்யப்பட்டுள்ளது.

1941 சிறிய கோயில் கட்டி கும்பாபிஷேகம் செய்யப்பட்டபின் 5 நாள் சடங்காக மாற்றப்பட்டுள்ளது.

1ம் நாள் சடங்கு உபயக்காரர் இராமக்குட்டி கதிரைமலை குடும்பம்
2ம் நாள் சடங்கு உபயக்காரர் கட்டாடி கோட்டைக்கல்லாறு
3ம் நாள் சடங்கு உபயக்காரர் குஞ்சித்தம்பி முத்துப்பிள்ளை குடும்பம்
4ம் நாள் சடங்கு உபயக்காரர் குஞ்சித்தம்பி தம்பியப்பா குடும்பம்
5ம் நாள் பள்ளயச் சடங்கு ஊர்மக்களால் செய்யப்பட்டுள்ளது.

**நிருவாக முறையில் மாற்றம் ஏற்பட்டது.**

வண்ணக்கு முறை மாற்றப்பட்டு பரிபாலனசபை ஆக்கப்பட்ட பின் 7 நாள் சடங்காக மாற்றப்பட்டுள்ளது. 2ம் நாள் சடங்கு கட்டாடி கோட்டைக்கல்லாற்றைச் சேர்ந்தவரினால் செய்யப்பட்டு வந்தது அவரின் இழப்பின் பின் கட்டாடி நாவலடியைச் சேர்ந்தவரினால் செய்யப்பட்டு கோல்ட்பீஸ் விளையாட்டு கழகத்திற்குப் -(நாவலடி) பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. சடங்கு 7 நாள் சடங்காக மாற்றப்பட்டுள்ளது.

1ம் நாள் சடங்கு அமர்கதிரமலை வைத்தியர் குடும்பம் (கோட்டைக்கல்லாறு)
2ம் நாள் சடங்கு கோல்ட்பிஸ் விளையாட்டுக் கழகம் (நாவலடி)

3ம் நாள் சடங்கு உபயகாரர் அமரர்.தம்பியப்பா மயில்வாகனம் குடும்பம் (நாவலடி)

4ம் நாள் சடங்கு அமரர்.சங்கரப்பிள்ளை குடும்பம் (நாவலடி)

5ம் நாள் சடங்கு அமரர்.பொன்னன் சீனித்தம்பி குடும்பம் (நாவலடி)


6ம் நாள் சடங்கு அமரா.தம்பியப்பா தம்பிராசா குடும்பம் (நாவலடி)

7ம் நாள் சடங்கு ஊர் பொது மக்கள்

8ம் நாள் சடங்கு பள்ளையச்சடங்கு

சடங்கு முறைகள் ஆரம்பத்திலிருந்து சில மாற்றங்களுக்குள்ளாயின அந்தவகையில் 2ம் நாள் சடங்கு ஆரம்பத்தில் கட்டாடியார் - கோட்டைக் கல்லாற்றைச் சேர்ந்தவராலும் பின் வந்த காலங்களில் 2ம் சடங்கு ஊர்ச் சடங்காக செய்யப்பட்டு பின் கட்டாடியார் - நாவலடியைச் சேர்ந்தவராலும் செய்யப்பட்டு கேர்ட்பீஸ் விளையாட்டுக் கழகத்தினருக்கு அந்தச் சடங்கு மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளது. இறுதியாக மேற்குறிப்பிட்ட வகையில் 7 நாள் சடங்குகள் செய்யப்பட்டு வந்துள்ளன.





# சடங்கு முறைமை

## நாவலடி கடலாச்சியம்மன் சடங்கின் சிறப்பு அம்சங்கள்

மாரி கடலாச்சியம்மன் ஆலயத்தின் சடங்குமுறையானது ஒருநாள், மூன்றுநாள், ஐந்துநாள், என நாட்கள் மாற்றப்பட்டு இறுதியாக உற்சவ சடங்கானது 7 நாள் சடங்காக செய்யப்பட்டது.

**1ம் நாள் சடங்கு**

ஆலய எல்லைகளின் நான்கு பக்கங்களும் காவல் தெய்வமான காளியம்மனை முன் நிறுத்தி காவல் பண்ணப்பட்ட பின் ஆலயத்தின் அருகேயுள்ள புன்னைக்கண்டு நவசக்தி விநாயகர் ஆலயத்திற்கு சென்று முறைப்படி வழிபாடு செய்யப்பட்டு அனுதி பெற்று ஆலய வாசலின்முன் வழிபாடு செய்யப்பட்டு அனுமதி பெற்று ஆலய வாசலின் முன் மூன்றுமடை வைத்து வாயில்காப்போனை கும்பிட்டு அனுமதி பெற்று பூமாதேவியிடமும் படிகடக்க அனுமதி கேட்டு மண்டபக் காவல் செய்து முடிந்ததும் திருக்கதவு திறக்கப்படும். குத்துவிளக்கில் லக்சுமிதேவியை அழைத்து கருவறையில் வெளிச்சம்வைத்தபின் மூலஸ்தானத்திலுள்ள மாரியம்மன், கடலாச்சியம்மன், பேச்சியம்மன் முகக்களைகளுக்கு அபிஷேகம் செய்யப்பட்டு கும்பங்களுடன் சேர்த்து அம்மன் உருவாக ஆக்கப்படுகிறது. முகக்களையின் கீழே கும்பம், மடை, வட்டாமடை என்பவற்றை மூடி அடுக்கு (சேலைகள்) சாத்துவதன் மூலம் சிங்காசனத்தில் முழு உருவமாக அம்மன் திருக்கோலம் அமைக்கப்படுகின்றது. இந்த நிலை பிரபஞ்ச கோலத்தை வெளிப்படுத்துவதாகும்.

பரிவாரத் தெய்வங்களுக்கு மடையும் அட்டதிக்குப்பாலர்களுக்கு சுற்றுமடையும் வைக்கப்பட்டபின் முதலில் விநாயகப் பெருமானுக்கும் பின் அம்மனுக்கும் பூசை செய்யப்படும். தீப ஆராதனையைத் தொடர்ந்து ஆலயத்தில் நீராடி வந்த சந்நதம் கொண்டு ஆடுவோருக்கு தலைமைப் பூசாரியால் குருவாக்கு அல்லது குரு உபதேசம் செய்யப்பட்டபின் தங்களுக்குரிய அடையாள ஆயுதங்களை கையிலேந்தி ஆலயத்தை

சுற்றி வணங்கிவலம் வந்து கைகளினாலும், நாவினாலும் கற்பூர ஆராதனை அம்மனுக்கு செய்யப்படும். தீபராதனை முடிந்ததும் தங்களுக்குரிய பரிவாரத் தெய்வத்திற்கான மேடை அல்லது பந்தலுக்குச் சென்று கற்பூர ஆராதனை செய்தபின் சன்னதக்காரர்களினால் பூசையை ஏற்று பக்தர்களுக்கு நல்வாக்கு கூறி முடிந்ததும் மலையேறுதல் இடம் பெறும். பூசை வேளையில் மேற்குறிப்பிடப்பட்ட செயல்கள் நடைபெறுவது வழக்கமாகும்.

அம்மன் சடங்கு முறைக்குரிய விஷேட நிவேதனமாக பாணக்கம் தயாரிக்கப்படுகிறது. முக்கனிகளுடன் அன்னாசிப்பழம், மாதுளம்பழம், கரும்புச் சாறு, சக்கரை, கற்கண்டு, சின்னவெங்காயம், இளநீர், பனங்குட்டான் முதலியவற்றின் சேர்க்கையால் தயாரிக்கப்படும். நிவேதனப் பொருட்களாக வெற்றிலை, பாக்கு, கரும்பு, கமுகம்பாளை, கமலம், பழவகை படைக்கப்படும். இறுதியில் மக்களுக்கு பகிர்ந்து கொடுக்கப்படும்.

பூசையின்போது அடையாளப் பொருட்களாக வெள்ளிப்பிரம்பு, சிலம்பு, வாள், சூலம், வைரவர்பொல்லு, அம்மானைக்காய், மஞ்சள், சாட்டைக்கயிறு பயன்படுத்தப்படும் மந்திர உச்சாடனத்துடன் உடுக்கு, தவில், ஊதுகுழல் உரியதாளத்துடன் இசைக்கப்படும் தெய்வ சந்நதம் கொண்டு ஆடும்போது சிலம்பு அம்மானைக்காய் என்பனவும் இசைக்கப்படும். அவ்வேளையிலே தெய்வவாக்கு கூறப்படும்.

பூசை நடைபெறும் போது தெய்வ உரு ஏறி ஆடுவோர், சந்நதம் கொண்டு ஆடுவோர் அம்மனின் காவல் தெய்வங்களான காளி, காமாட்சி, ஐயனார் திரைசேர்மடந்தை கடலரசகண்டன், காத்தவராயன், வீரபத்திரர். ஆஞ்சநேயர், நாகதம்பிரான் யோன்ற தெய்வங்கள் பத்தர்களுக்கு அருள்வாக்கு கூறுதல் சிறப்பம்சமாகும்.

வித்துவப் போட்டி காரணமாக ஒரு பூசாரி ஆட்டுவிக்கும் தெய்வத்தை இன்னொருவர் கட்டுவதும் படுகளம் இடுதல் அதனை மந்திரத்தால் கட்டுதல், வெட்டுதல், எழுப்புதல் சர்வசாதாரணமாக அம்மன் ஆலயங்களில் செய்யப்படும் செய்கைகளாகும்.

தாளமெட்டுடன் இசைக்கப்படும் தோத்திரப்பாடல்களான கும்மி காவியம், தாலாட்டு, அம்மானைபாடல், இறுதிநாளில் பாடப்படும் குளுர்த்திபாடல், தேரேற்று, மங்களம், வாழி என்பன உயர் சுருதியில் வேகமாக சொல்லப்படும். மந்திர உச்சாடனம் என்பன எம்மை அறியாமலே ஓர் பயத்தைப், பக்திப்பரவசத்தை ஏற்படுத்துவனவாக உள்ளன.

**ஊர் காவல் பண்ணுதல்**

ஆரம்ப காலத்தில் சடங்கு ஆரம்பித்த அன்று இரவே செய்யப்பட்டதாகவும் சில அசௌகரியம் காரணமாக 1ம் உபயக்காரரின் பகல் சடங்கின்போது அம்மன்கும்பத்துடன் (அந்த ஊரிலுள்ள ஒருவருடன் மாரி கும்பமும்) கொண்டு செல்லப்பட்டு ஊரின் எல்லைகளில் காவல் தெய்வங்களுக்கு பலியிட்டு ஊர்காவல் செய்யப்படுகின்றது. அவ்வேளை ஊர் மக்கள் தங்கள் மனையின் முன்னே நிறைகுடம் வைத்து வழிபடுவர். அவர்கள் வாழ்வில் அவர்களுக்குள்ள பிரச்சினையைக் கூறி ஆலயத்திற்கு வரவழைக்கப்படுவர். மக்கள் துயர் போக்க நல்வாக்கு கூறுதல், அம்மனிஎ மருந்து கொடுத்தல், தேங்காய் வெட்டுதல், நூல்போடுதல் போன்ற செயற்பாடுகள் ஆலயத்தில் நிகழும். இதன் நோக்கம் ஊரினை அம்மனும் காவல் தெய்வங்களும் காத்து நிற்கின்றன என்ற நம்பிக்கை காரணமாகும்

**கன்னிமார் சடங்கு**

2ம், 3ம், 4ம் நாள் சடங்கு பூசைகள் வழமைபோல் நடைபெறும். 5ம் நாள் சடங்கு கன்னிமார் சடங்கு.திரைசேர்மடந்தைக்கு 32 கன்னிமார்கள் தோழியாக வந்ததாக வரலாறு கூறுகிறது. இங்கே 7 கன்னிமார்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். அவர்களாவன செப்புக்கன்னி, செந்தாமரைக்கன்னி, அக்கினிகன்னி, அகோரக்கன்னி, வல்லுக்கன்னி, விசாலக்கன்னி, மஞ்சள் கன்னி என்பவர்களே அவர்களாகும். பூப்பெய்யாத சிறுமிகளை (10-12) வயதிற்குட்பட்டவர்களிலிருந்து தலைத் தெய்வம் மாரியம்மன் கன்னிமார்களைத் தெரிவு செய்து எடுப்பார். அவர்களில் ஒரு சலவை தொழிலாளியின் பிள்ளையும், நேர்த்திக்கடனுக்காக வந்தவர்களிலிருந்தும் ஊர் பிள்ளைகளிலிருந்தும் வெற்றிலை எறிந்து

தெரிவு செய்யப்படுவர். வயதில் மூத்த பெண்களில் இருவரை தெரிவு செய்து தேவ கன்னியர்களாக இச் சிறுமிகளை பராமரிப்பர். திரைவளைந்து வெளியார் பார்க்காதவாறு அதனுள் இருத்துவர். 5ம் நாள் இரவுப் பூசையின்போது தேவகன்னியர்கள் கடலில் இருந்து மாரியம்மனால் கூட்டிவரப்படும் போது முகம்மாறி திரைசேர் மடந்தையாக அதற்குரிய சன்னதகாரர் காவல் புரிந்துவர ஆலயத்துள் பிரவேசித்து ஆலயத்தை வலம் வந்ததும் பூசைகள் நடைபெறும். அம்மனுக்கு ஆலத்தி ஏந்தி மகிழ்விப்பர். இவர்களுக்கு ஆலயத்தில் அமுதூட்டி மகிழ்வூட்டுவதும் நடைபெறும் இவர்கள் குளிர்த்திபாடி கும்பஞ் சொரிந்து சுகம் கேட்டு வழியனுப்பி வைக்கும் வரை ஆலயத்திலிருந்து செல்ல முடியாது. வெள்ளை ஆடையே அணிந்திருப்பர். பின் ஒவ்வொரு நாள் பூசையின் போதும் கன்னியர் ஆலாத்தி எடுத்துவருவார்கள்.

**கும்பச்சடங்கு**

நவசக்தி கும்பங்களும் கும்பங்கள் (மாரியம்மன், பேச்சியம்மன், காளியம்மன்) நாவலடியில் அகோர கும்பம் என அழைப்பர் வைக்கப்பட்பின் அன்று பரிவாரத் தெய்வங்களுக்கான கும்பங்கள் வைக்கப்படும். அதன் பின் சடங்கு (பூசை) செய்யப்படும். கும்பச்சடங்கின் சிறப்பம்சமாகும்.

**7ம் நாள் சடங்கு - விநாயகப்பானை.**

மடிப்பிச்சை எடுத்து காலையில் அரிசி பணம் ஆலயத்திற்கு கொடுக்கப்படும். அன்று பகல் பூசையின் போது நெல்லுக்குற்றல் வைபவம் இடம் பெறும் மாரியம்மனால் கும்ப ஆட்கள் தெரிவு செய்யப்படுவார்கள். அதன் பின் அன்று இரவு 10.00 மணியளவில் ஆலய முன்றலில் அடுப்பு மூட்டி பானைக்கு நூல் சுற்றி விநாயகப்பானையை தலையில் ஏந்தி அம்மனாக தலைமை பூசாரி ஆலயத்தை வலம் வந்து அடுப்பில் வைத்து மந்திரபூர்வமாக அக்கினி மூட்டி பாற்பொங்க செய்யப்படும். பால் பொங்கியதும் பொங்கிய பால் அமிர்தம் அம்மனுக்கு நிவேதனம் செய்யப்படும். சந்நதக்காரர்கள் ஒவ்வொருவராக பாலமிர்தம் அள்ளி நிவேதனம் செய்தபின் அரிசி சேர்த்துப் பொங்கல் செய்யப்படும். அதன்பின்

நாகதம்பிரானுக்கு வெண் பொங்கலும் காளியம்மனுக்கு சக்கரைப் பொங்கலும் பொங்கப்படும் பின் பள்ளைய வேலைகள் ஆரம்பமாகும்.

**குளிர்ந்தருளல்**

ஊர் நன்மைக்காகவும், மக்கள் நன்மைக்காகவும் குளிர்ந்தருள் செய்யப்படும். அதிகாலை 4.30 மணியளவில் முறைப்படி குளிர்த்தி சட்டி அமைக்கப்பட்டதும், பாலமிர்தம் ஊற்றப்பட்டு அம்மனின் முகக்களை கொண்டு வரப்பட்டு குளிர்த்தி சட்டி அடியில் வைத்து அகோரம் தனிப்பதற்காக குளிர்த்தி பாடப்படும். மிகவும் மனமுருகி வேண்டிப்பாடப்படும் இந்தப்பாடல் திரு.ச.தங்கவேல் என்பவராலும், திரு.ம.அரசரெட்ணம் என்பவராலும் மிகவும் அருமையாகப் பாடப்படும் திரு.க.அருணன் என்பவராலும் பாடப்பட்டுள்ளது.

குளிர்த்தி பாடி முடிக்கப்பட்டதும் குளிர்ந்தருளல் செய்து அகோரம் தணிக்கப்படும். நீர் தெளித்து பாலமிர்தம் மக்களுக்கு பகிர்ந்து கொடுக்கப்படும். அதன் பின் ஒவ்வொரு சந்நதக் காரர்களும் அவரவர் பந்தலுக்குச் சென்று நல்வாக்குக்கூறி சாட்டைப்பலி, வைரவர் பொல்லுபலி காமாட்சிக்கு இரத்தப்பலி கொடுத்து மலையேறும்.

அகோரம் தணிந்த அம்மன் சாந்தமான குளிர்ந்த முகத்துடன் நிலபாவாடை விரித்து வலம் வரும்போது பாதங்களைக் தொட்டு, வணங்குவர் இதனால் பாவங்கள் தீர்ந்து நல் ஆசி பெற்றுக் கொள்வதாக நம்பிக்கை. அவ்வேளை வாசலின் முன் நிருவாகத்தினர் முழங்காலில் அமர்ந்து அன்னையின் திருப்பாதங்களைத் தொட்டு வணங்கி பரவச நிலையுடன் கண்ணீமல்க நல்வாக்குக் கேட்பார்கள். மாரியம்மன் நல்வாக்கு கூறும்.

**கும்பம் சொரிதல்**

கும்பஞ் சொரிதலுக்கான ஆயத்தங்கள் நடைபெறும். கடலம்மனுக்குப் பாற்குடமும் வாலை, திரிபுலை புவன கும்பங்கள், மஞ்சள் சோற்றுக்கும்பம்

நிவேதனப் பொருட்கள் - 2 ஓலைபெட்டிகளிலும் ஒரு நெல்லுப்பெட்டியுடன் கும்பஞ் சொரிதலுக்கான "**ஏகாவடம்**" என்னும் விஷேட ஆடை அணிந்து சந்நதக்காரர் அனைவரும் மஞ்சள் பூசி தெய்வ உருக்கொண்ட நிலையில் கடற்கரையை அடைந்து அடையாளம் சூலம் குற்றப்பட்ட இடத்தில் முக்கண்ணன் பலி, கடலரசன்பலி, அட்டகாளிகளுக்கும் பலி கொடுத்து கும்பஞ்சொரிதல் நடைபெறும். இதைத் தொடர்ந்து தெய்வ, சந்நதக்காரர் மலையேறுவர்.

பின் கன்னிமாருக்குக் கொடுக்க வேண்டிய நிவேதனம் முறையாகக் கொடுக்கப்பட்டு சுகம் கேட்டு திருப்தியுடன் வழி அனுப்பி வைக்கப்படும். அதைத் தொடர்ந்து பள்ளையச்சடங்கு நடைபெறும் வாழிபாடப்பட்டு கும்பத்திற்கு பூப்போடப்படும். பள்ளையம் பகிர்ந்தளிக்கப்படும் 3ம் நாள் அம்மனை பூவால் அலங்கரித்து சடங்கு பூச்சடங்கு (பூமடை) செய்யப்பட்டு நேர்த்திக் கடனுள்ளவர்கள் பொங்கல், வைரவருக்கான நிவேதனம் வைத்து வணங்குவர். பரிவாரத்தெய்வங்களுக்கு நிவேதனம் படைக்கப்பட்டு சடங்கு காலத்தில் ஏற்பட்ட தவறுக்கு பொறுத்தருளும்படி மன்றாடிக் கேட்கப்பட்டு திருக்கதவு மூடப்படும்.

சடங்கு காலத்தில் புன்னையடி நவசக்தி விநாயகர் ஆலயத்திலிருந்தும், ஸ்ரீமுருகன் ஆலயத்திலிருந்தும் பட்டு எடுத்து வரப்படும். விஷேடமாக 2ம் சடங்கின்போது பறவைக்காவடி, பால்க்காவடி, அங்கப்பிரதட்சனம், தீச்சட்டி ஏந்துதல் விஷேடமானது மற்றும் ஆலயத்தை காவல் காத்தல், மடைப்பெட்டி கொடுத்தல், குழந்தைகளை விற்று வாங்குதல் நேர்த்திக்கடன் கொடுத்தல் போன்ற வகையில் அம்மனுக்குரிய வேண்டுதல்களை நிறைவு செய்து அம்மனின் அருளைப்பெற்றேகுகின்றனர்.



## வழிபாடு

மந்திரபூர்வ பாரம்பரிய பத்ததிமுறை வழிபாடே மிக நீண்ட காலமாக ஆகமமுறை சாராத ஆலயங்களில் கிராமியத் தெய்வ வழிபாட்டு முறையில் பின்பற்றப்பட்டு வருகின்றது. ஸ்ரீமாரிகடலாச்சியம்மன் ஆலயத்தில் கும்பப்பத்ததி முறையிலே வழிபாடு செய்யப்படடு வருகின்றது. கடனாச்சியம்மன் பத்ததியானது இரண்டு வகைகளைச் சேர்ந்ததாக கூறப்படுகின்றது.

1. கும்பப்பத்ததி
2. திரைசேர் மடந்தைப்பத்ததி

நாவலடி ஸ்ரீமாரி கடலாச்சியம்மன் ஆலயத்தில் கும்பப் பத்ததி முறையிலும் கல்லாற்றுக் கடல்நாச்சியம்மன் ஆலயத்தில் திரைசேர் மடந்தை பத்ததி முறையிலும் வழிபாடு செய்யப்படுகின்றது. சில கிரியை முறைகள் கைபாகம் அனுபவரீதியாக சந்ததி சந்ததியாக செய்யப்படும் முறைகளும் மேற் கொள்ளப்படுகின்றன. ஒரு சில சடங்குகள் இருபத்ததிகள் இணைந்த முறையிலும் நாவலடியில் செய்யப்படுகின்றன.

பத்ததி முறை வழிபாட்டிற்கு நிரந்தரக் கட்டிடங்களாகமைந்த ஆலய அமைப்பு கட்டாயம் என்று இல்லாததால் இயற்கையான மரங்களிலோ அல்லது தற்காலிகமாக ஆக்கப்பட்ட பந்தல்களிலோ இப் பூசை நடத்தப்படுகின்றது, இவ்வாறு பந்தல்கள் அமைக்கும் போது கருவறை, பிரமாணத்திற்கமைய ஏனைய மண்டபங்கள் வகுக்கப்படுகின்றன. இது ஒரு மனிதனின் அமைப்பாக அமையும் கருவறையில் அமையும் மூலமூர்த்தம் ஒவ்வொன்றுக்கும் இன்ன இன்ன காவல் தெய்வங்கள் என வகுத்துக் கூறப்பட்டுள்ளது. இதன்படி நாவலடி ஸ்ரீமாரி கடலாச்சியம்மன் 1வது சடங்கு 1932ல் திரைவளைந்து செய்யப்பட்டதாக கூறப்படுகிறது. ஓலையால் வேயப்பட்ட சிறு கோயிலிலும் அதன்பின் 1941 இல் கற்கோயில் அமைக்கப்பட்டு பரிவாரத் தெய்வங்களுக்குரிய பந்தல்கள் அமைக்கப்பட்டு சடங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு பிரதேச அம்மன் வழிபாட்டு முறைகளிலே பெருமளவில் பத்ததி முறையிலான வழிபாட்டு முறையே காணப்படுகிறது. பத்ததி என்றும் பத்தாசி என்றும் அழைக்கப்படும் இது அம்மன் வழிபாட்டிற்குரிய பூசை விதி முறைகளையும், அதற்கான மந்திரங்களையும் தொகுத்துக் கூறும் நூலாகும். தந்திரங்களாகவும் பத்ததிகளாகவும் காணப்படுகிறது. இந்த பத்ததிகள் முனிவர்களாலாக்கப்பட்டு காலம் காலமாக சந்ததி வழியாக குருகுலமுறையில் போதிக்கப்பட்டு வந்துள்ளதை அறியக் கூடியதாக உள்ளது. இந்த சடங்கு அல்லது பூசைமுறையை கற்றவர்கள் கட்டாடி, பூசகர் கப்புவன், குருக்கள் எனப்பல்வேறு நாமங்களில் அழைக்கப்படுகின்றனர். இப் பூசை முறையைச் சரியாகக் கற்றவர்கள் கை தேர்ந்த மந்திரவாதியாவர். இவர்கள் பத்ததி முறையில் தமது அனுபவம், ஆற்றல், திறமை போன்றவற்றின் உதவியுடன் தமது மந்திர வலிமையாலும் கடவுளுக்குரிய வழிபாட்டை செய்வது வழக்கம்.

பத்ததியானது எந்தக் கடவுளுக்கு எவ்வாறு பூசை நிகழ்த்துவது என்பவற்றைக் கூறுவதுடன் அதனுடன் தொடர்புடைய மந்திரங்களை விதி முறையாக கூறுகின்ற அகவற்பாவினாலமைந்த நூல் அல்லது ஏடு எனப்படும். பத்ததி வழிபாட்டு முறையில் வழிபாட்டிடம் அமைக்கும் முறை மண்டபக் காவல் செய்யும் முறை, அம்மனுக்கு அடுக்குச் சாத்தும் முறை, அம்மனை சிங்காசனத்தில் வைத்தலும், மடைப்பிரிவுகளும், அம்மனுக்கு இணை துணை தெய்வம், பரிவாரத் தெய்வங்கள் நிறுத்துமிடம் அவை மடைப்பிரிவுகளும் மந்திர தந்திரங்களும் அம்மனை ஆதரிக்கும் முறை, பூசை செய்பவர்கள் கைக் கொள்ள வேண்டிய அனுட்டான விதிகளும், மந்திர முறைகளும், தடைகளை அறுப்பதற்கான மந்திர முறைகளும் யந்திரங்களும் ஒவ்வொரு சடங்கும் செய்யும்முறை (உ-ம) பொங்கற் சடங்கு, யாகசாலை அமைக்கும் முறை, தீக்குளிப்பு செய்யும்முறை என்பன அதற்கான அம்மன் பத்ததியில் மிகவும விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

நாவலடி ஸ்ரீமாரி கடலாச்சியமமன் ஆலயத்தில் 2004ம் ஆண்டு மட்டும் தீக்குளிப்பு (பூமிதித்தல்) நடைபெற்றது, குளுத்தி, பள்ளையம், திருக்கதவு திறப்பதிலிருந்து சடஙகு முடிக்கும் நிறைவு பூசை முறைவரை மிகவும் விளக்கமாக கூறப்பட்டுள்ளது. அதன்படி வழிபாடுகள் இங்கு நடைபெறுகின்றன. ஒவ்வொரு தெய்வத்திற்குமென தனிப்பட்ட பத்ததிகள் காணப்படுகின்றன. அவை மாரியம்மன் பத்ததி, கடலாச்சியம்மன் பத்ததி, அவை காளியம்மன் பத்ததி, பேச்சியம்மன் பத்ததி, கண்ணகி அம்மன் பத்ததி, திரௌபதை அம்மன் பத்ததி என்பனவாகும். கும்பப்பத்ததி மாரியம்மன், காளியம்மன், பேச்சியம்மன் ஆகிய மூன்று தெய்வங்களுக்கும் சடங்குகள் பொதுவானது.

கடலாச்சியம்மன் - திரைசேர்மடந்தைப் பத்ததி.
கண்ணகையம்மன் - கூனல் பலகை பத்ததி
துரோபதையம்மன் - தாதன் பத்ததி முறைகளில் சடங்கு செய்யப்படுகின்றன.

**தகவல். திரு, சோ. லிங்கேஸ்வரன்**
**துணை நூல் மட்டக்களப்பு தமிழகத்தின் இந்துப்பண்பாடு**

# கோயில் நிருவாக முறைமை



**கோயில் நிருவாகங்கள்**

ஆரம்பத்தில் வண்ணக்குமாராக திரு.அ.கணபதிப்பிள்ளை என்பவரும் திரு.செ.செல்வம் என்பவரும் இருந்து வந்தனர். திரு.அ.கணபதிப்பிள்ளை அவர்களின் இறப்பின் பின்னர் திரு.க. செல்லப்பா என்வரும் கங்காணிமார்களாக திரு.இ.மாணிக்கம், திரு.த.சண்முகம், திரு.க. வேல்முருகு, திரு.சீ.செல்லத்தம்பி திரு.த.மயில்வாகனம் திரு. க.கனகசிங்கம் ஆகியோர் நீண்டகாலமாக பரிபாலித்து வந்தார்கள். இம்முறையில் மாற்றம் ஏற்பட்டு 1976 ஆம் ஆண்டு பரிபாலன சபையாக்கப்பட்டது.

திரு.க. துரைச்சாமி - தலைவர்
திரு.ந. நல்லலிங்கம் (ஆசிரியர்) - செயலாளர்
திரு.எச்.எம். ரூபசிங்கம் - பொருளாளர்

1978ம் ஆண்டு சூறாவளியின் பின்னர் நிருவாக முறை மாற்றம் ஏற்பட்டு

திரு.எச்.எம். ரூபசிங்கம் - தலைவர்
திரு.நா.சிவலிங்கேஸ்வரன் - செயலாளர்.
திரு.த. தியாகராசா - பொருளாளர்

புதிய நிருவாகத்தைப் பொறுப்பேற்றனர்.

**மூன்றுவருட இறுதியில் - 1982ல்**

திரு.பொ. நடராசா (கிராமசேவையாளர்) - தலைவர்.
திரு.சா.சோமபால - செயலாளர்
திரு.க.கனகசிங்கம் - பொருளாளர்

கோயில் நிருவாகத்தை ஏற்று நடாத்தி வந்தனர். ஆலோசகர்களாக

திரு.த. தம்பியப்பா - கிராமசேவையாளர்.
திரு.த. செல்லத்தம்பி
ஆகிய சகோதரர்கள் இருந்து வந்தனர்.

2000ம் ஆண்டில் திரு. வேல்முருகு மாணிக்கம் (2 வருடம்) தலைவராக இருந்தார். திரு.சீ. மகாலிங்கம் அதன் பின் தலைவராக இருந்துள்ளார் இவர் இறப்பின் பின்

திரு.நா. முரளிதரன் - தலைவர்
திரு.செ.செல்வகுமார் - செயலாளர்
திரு. ரு. குமாரதாச - பொருளாளர்
போஷகராக திரு.த. உருத்திரமூர்த்தி இருந்து வந்தார்.

**சுனாமியின் பின் - 2008ல்**

திரு.வி. விஜயசூரிய - தலைவர்
திரு.சி. மணிவண்ணன் - செயலாளர்
திரு. சி. குணசீலன் - பொருளாளர்
ஆயுட்கால போஷகராக திரு.த. உருத்திரமூர்த்தி அவர்கள் இருந்து வருகிறார். போஷகராக திரு.ச.மகேஸ்வரன் அவர்கள் இருந்து வருகிறார்.

**பூசகர்கள்**

ஆரம்பத்தில் பிரதம பூசகராக கோட்டைக் கல்லாற்றைச் சேர்ந்த திரு.சித்திரக் கட்டாடி அவர்கள் பூசை செய்து வந்துள்ளார். இவரது சீடர்களான திரு.சீ. வேலுப்பிள்ளை அவர்களும் திரு.செ. சோமசுந்தரம் அவ்களும் பூசையைச் செய்து வந்தார்கள். திரு.சீ.வேலுப்பிள்ளை அவர்கள் சுகயீனமுற்றதால் திரு.செ.சோமசுந்தரம் அவர்களே நீண்ட காலமாக பூசை செய்து வந்துள்ளார். இவரது இறப்பின் பின் இவரது சீடரும் மகனுமான திரு.சோ. லிங்கேஸ்வரன் அவர்கள் பிரதம பூசகராக இருந்து இன்றுவரை (2010) உற்சவ பூசையை நடாத்தி வருகிறார்.

**உதவி பூசகர்களாக**

| | |
|---|---|
| திரு.சி. நாகராசா | திரு.ஏ. கந்தையா |
| திரு.சா. சோமபால | திரு.நா. நாகராசா |
| திரு.சி. கணேசன் | திரு.சி. சிவலிங்கம் |
| திரு.வே. அருள்நாதன் | திரு.க. தவநீதன் |
| திரு.சோ.அற்புதராஜன் | |

தொண்டர்களாக ஊரின் இளம் தலைமுறையினர் பலர் தொண்டாற்றியுள்ளனர்.

**சந்நத காரர்**

| | |
|---|---|
| திரு.க. தம்பிப்பிள்ளை | - கம்பகாமாட்சி |
| திரு.பொ. சீனித்தம்பி | - மாரி, கடலாச்சி |
| திரு.பொ.செல்லத்தம்பி | - காளி |
| திரு.அ ஏரம்பு | - மாரியம்மன் |
| திரு.த. செல்லத்தம்பி | - மாரியம்மன் |
| திரு. மாணிக்கம் | - ஐயனார், காத்தவராயன் - ஆஞ்சநேயர் |
| திரு. முருகன் | - காமாட்சி |
| திரு. சவுரிராசா | - வீரமாகாளி |
| திரு.சி. சாமிநாதன் | - காமாட்சி |
| திரு.வே. கணபதிப்பிள்ளை | - காத்தவராயன், ஐயனார் |
| திரு. பாலசுந்தரம் | - வீரமாகாளி |
| திரு.பொன்னுத்துரை | - வீரபத்திரன் |
| திரு.செ. கனகலிங்கம் | - காமாட்சி |
| திரு.மு.கனகராசா | - காளி |
| திரு.பொ.அரசரெட்ணம் | - காளி, ஆஞ்சநேயர் |
| திரு.க. பாபு | - ஆஞ்சநேயர் |
| திரு.ஜீ. இளங்கோ | - காளி ஆஞ்சநேயர் |
| திரு. செ. ரவீந்திரன் | - நாகதம்பிரான் |

திரு. சுரேஷ் - காளி, ஆஞ்சநேயர்
திரு. புஸ்பராசா - காமாட்சி
திரு.பா.யோகசந்திரன் - ஆஞ்சநேயர்.
திரு.கு. சுரேந்திரன் - காளி
திரு.வே.உதயகுமார் (ராசா) - மாரியம்மன்

**பெண் சன்னதக்காரர்**

திருமதி. ஞானி ஆச்சி -
திருமதி. க. மாரிமுத்து - காமாட்சி
திருமதி. சி. மாரிமுத்து - காமாட்சி
திருமதி. கா. இராசம்மா - நாககன்னி
திருமதி. செல்லப்பாக்கியம் - காமாட்சி
திருமதி. ஆ. பாக்கியம் - காளி
திருமதி. ரா. நல்லம்மா - காளி
திருமதி. ரெட்ணம் - வீரமாகாளி
திருமதி. ர. மஞ்சுளா - காளி
திருமதி. புஸ்பராணி - காளி
திருமதி. தீபன்சாளினி - மாரியம்மன்

இவர்களுடன் வெளியூர் உதவி பூசாரிமார் தெய்வ சந்நதகாரர்களும் உள்ளனர். ஆலய மேம்பாட்டிற்கு ஊர்மக்கள், சங்கங்கள், கழகங்கள் என்பன உறுதுணையாக இருந்தன. கோல்ட்பிஸ் கழகம் - 2ம் சடங்கை நடத்தினர். நாவலர் கழகம் சில வருடம் தண்ணீர்ப் பந்தல் அமைத்து தாகசாந்தி செய்தனர். அதன் பின் அன்னதானம் வழங்கி வந்தனர். மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் தண்ணீர் பந்தல் அமைத்து தாக சாந்தி செய்தனர், ஆலய உற்சவ காலங்களில் ஆலய வளவை கூட்டி, பெருக்கி சிரமதானம் செய்து கொடுத்துதவினர். சுனாமியின் முன் ஊர்ப் பெண்கள் மண்டலாபிஷேக பூசை ஒன்றை பொறுப்பேற்று நடத்தினர்.

**தகவல்**

**திரு. அரசரெட்ணம், பரிபாலனசபை**


**திரு.சோ. லிங்கேஸ்வரன், ஊர்ப் பெரியார்கள்**



# கும்பாபிஷேகம்

பிரபஞ்சமெங்கும் பரந்து விரிந்து நிற்கும் பேரருட் சக்தியை மந்திரம், பாவனை, கிரியைகள் மூலமாக அக்கினியிலும், கும்பத்திலும் ஆவாகனம் செய்து வழிபட்டு அங்குள்ள தெய்வீக உருவத்தில் சேர்த்து நிலை பெற்றிருத்தி ஆன்மபக்தகோடிகளுக்குத் தீவினை அகற்றி அருள் புரியுமாறு செய்யப்படுவதே இதன் முக்கிய நோக்கமாகும்.

**படம் - 1 யாக பூசை முறைப்படி நடாத்தப்படுதல்**



கடலாசசியம்மன் ஆலயத்தில் 1931ம் ஆண்டு, 2004ம் ஆண்டு, 2007ம் ஆண்டுகளில் கும்பாபிஷேகம் (குடநன்னீராட்டு, அல்லது குடமுழுக்கு) ஆவர்த்தனம், புனராவர்த்தனம் என்ற இரண்டு வகைகளைச் சேர்ந்த முறையில் செய்யப்பட்டுள்ளது. மண்டலாபிஷேக பட்சத்துக்கு நடைபெற்று பிரதிஷ்டை (நிலை நிறுத்தல்) செய்யப்பட்டது.

**1வது கும்பாபிஷேகம் 26.06.1941ம் ஆண்டு செய்யப்பட்டது.**

தேவிநம

## நாவலடி மாரியம்மன் கோயில்

## சம்புரோஷண் கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

***சிவனேசுச் செல்வர்களே!***

மட்டக்களப்பு, கல்லடி முகத்துவாரத்தைச் சேர்ந்த நாவலடி என்னும் குறிச்சியில் எனது சொந்தப் பொறுப்பில் கட்டுவிக்கப்பட்ட ஸ்ரீ மாரியம்மன் கோயிலில் நிகழும் விஷ்வருஷம் ஆனிமாதம் 13ம் திகதி 26.06.1941 தவியாழக்கிழமை உதயத்தில் மிதுனலக்கினத்தில் வரும் சுபமுகூர்த்தத்தில் சம்புரோஷண கும்பாபிஷேகம் செய்ய நிட்சயித்திருப்பதால் தாங்களும் வந்து அபிஷேக தரிசனம் செய்து அம்பாளின் பூரண கிருபாகடாச்சத்தைப் பெற்றேகுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**எழுவான்கரை**
**நாவலடி**
**13.06.1941**

**இங்ஙனம்**
**கு.தம்பியப்பா**

# 2வது கும்பாபிஷேகம் - 2004

## கும்பாபிஷேக பெருஞ் சாந்தி விழா
## கிரியா கால நிகழ்வுகள்
## 09.06.2004 (புதன்கிழமை)
## நடைபெறும்

குருமார்களாக


- மஹாராஜ் ஸ்ரீ இரத்தின பூர்ணசந்திரானந்த குருக்கள்
- பிரம்மஸ்ரீ வித்திய பிரியபால இந்திரசர்மா ஐயா
- சிவஸ்ரீ நந்தகோபால் ஐயா
- சிவஸ்ரீ பூரணசந்திர பிரணவசர்மா ஐயா ஆகியோரும்

ஆலய பிரதம பூசகர் சோமசுந்தரம் லிங்கேஸ்வரன் அவர்களின் ஒத்துழைப்புடன் சாந்தி விழா முறைப்படி நடைபெற்றது.

11.06.2004 எண்ணெய்க்காப்பு (தைலாப்பியங்கம்) அதிகாலை தொடங்கி நள்ளிரவு வரை விநாயகப் பெருமானுக்கு முதலில் சிவாச்சாரியார் என்ணைய்சாத்தியதை தொடர்ந்து கருவறை தெய்வத்திற்கு சாத்தியும் தொடர்ந்து வேலுக்கும் வைக்கப்படடபின் பக்த கோடிகளால் எண்ணெய்க் காப்பு சாத்தப்பட்டது. பல திக்குகளிலிருந்தும் வந்து கலந்து கொண்ட பக்தர்களின் பக்திப் பரவசத்துடன் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது.




எண்ணெய்க்காப்பு



## 12.06.2004 பாலாபிஷேகம் (பாற்குடபவனி)

கல்லடி மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அண்மையிலுள்ள வீரகத்திப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து மங்கள அருட்கடாச்சத்துடன் பாற்குடப்பவனி ஆரம்பமாகி முன்னாலுள்ள பிள்ளையார் கோயில் வீதியூடாகச் சென்று திருச்செந்தூர் முருகன் வீதி - டச்பார் வீதி - புதுமுகத்துவார வீதியினூடாக அருள்மிகு அன்னை கடலாச்சியம்மன் ஆலயத்தைச் சென்றடைந்து அம்மனுக்கு பாலாபிஷேகம் செய்யப்பட்டது. இதனால் ஆன்மாக்களுக்கு நீண்ட ஆயுளும், திருவருட்சக்தியும் கிடைக்கிறது.

படம் - 3 பாற்குடப்பவனி



படம் - 4 பாலாபிஷேகம்



13.06.2004 தாரண வருடம் வைகாசித்திங்கள் 31ம் நாள் ஞாயிற்றுக்கிழமை கலசநீராட்டு விழா நடைபெற்றது.



கும்பாபிஷேகம் மங்கள வாத்தியங்களுடன் வேதகோஷங்கள் முழங்க பிரதான கும்பங்களினால் மூலமூர்த்திக்கு அபிஷேகம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| 14.06.2004 | திங்கட்கிழமை | - 1வது உ.ப. | - நாவலடி பொதுமக்கள் |
| 15.06.2004 | செவ்வாய்க்கிழமை | - 2வது உ.ப. | - நாவலடி பெண்கள் |
| 16.06.2004 | புதன்கிழமை | - 3வது உ.ப. | - திரு.த.நாகேந்திரம் குடு. |
| 17.06.2004 | வியாழக்கிமை | - 4வது உ.ப. | - திரு.ரு.சிறிகாந்தன் குடு. |
| 18.06.2004 | வெள்ளிக்கிழமை | - 5வது உ.ப. | - தருக.சரவணமுத்து குடு. |
| 19.06.2004 | சனிக்கிழமை | - 6வது உ.ப. | - பூசாரி சந்நதக்கார்கள் |
| 20.06.2004 | ஞாயிற்றுக்கிழமை | - 7வது உ.ப. | - திருந. சங்கரப்பிள்ளை குடு. |
| 21.06.2004 | திங்கட்கிழமை | - 8வது உ.ப். | - திரு.மா.ஜெயராசா குடு. |
| 22.06.2004 | செவ்வாய்க்கிழமை | - 9வது உ.ப. | - திரு.ச. ஜெய்சங்கர் குடு. |
| 23.06.2004 | புதன்கிழமை | - 10வது உ.ப. | - திரு. க. இராஜன் குடு. |
| 24.06.2004 | வியாழக்கிழமை | - 11வது உ.ப. | - நிருவாகசபை |

108 சங்காபிஷேகமும் அன்னதானமும்



குளிர்த்திக்கான ஆயத்தம்

சங்காபிஷேகம் - இது வசதிக்கேற்ப 1008, 108 கொண்ட பரிசுத்த நீா் நிறைந்த சங்குகளினால் அபிஷேகம் செய்யப்படுவது. கடலாச்சியம்மன் ஆலயத்தில் 108 சங்குகளினால் அபிஷேகம் செய்யப்பட்டது. பிரதான கும்பத்திற்கு வலம்புரி சங்குகளும் ஏனையவற்றிற்கு இடம்புரிச் சங்குகளும் உபயோகிக்கப்பட்டது. தொடர்ந்து பூ மிதித்தல், குளிர்ந்தருளல், கும்பம் சொரிதல், பள்ளயம், 3ம் நாள் பூமடை சடங்கு, வைரவர் பூசையுடன் திருக்கதவடைப்புடன் இனிதே நிறைவுற்றது.

**படம் 7 தீமிதிப்பு (பூ மிதிப்பு)**



**படம் 8 கன்னிமார் சடங்கு**







கும்பஞ்சொரிதல்

படம் 9 நெல்லுக்குற்றல்






படம் 10 பள்ளையச் சடங்கு



பெரும்திரளான மக்கள் பல ஊர்களிலும் இருந்து வருகைதந்து நைமித்திய, மண்டலாபிஷேக கிரியைகளில் கலந்து கொண்டு ஆனி பௌர்ணமி உற்சவத்தைக் கண்குளிரக் கண்டுகளித்தனர்.

2007ம் ஆண்டு 3வது கும்பாபிஷேகம் நடைபெற்றது. ஆலயம் சுனாமியின் பின் புனருத்தாரணம் செய்யப்பட்டு மண்டலாபிஷேக கிரியைகள் நடைபெற்றன.

2007 மகா கும்பாபிஷேக துண்டுப் பிரசுரம்

# மட்டக்களப்பு - நாவலடி
# ஸ்ரீ மாரி கடல்நாட்சி அம்பாள் ஆலய
# மகா கும்பாபிஷேக பெரும் சாந்தி விழா - 2007

தனம் தரும் கல்வி தரும் ஒரு நாளும் தளர்வு அறியா
மனம் தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலால் அபிராமி கடைக் கண்களே.

அம்பாள் அடியார்களே!

மட்டக்களப்பு நகரின் அருகே ஆதவன் ஒளி பரப்பும் கடலும் கடல் சூழ்ந்த நாவலடி என்னும் ஊரின் அருள் ஆட்சி பண்ணி மக்கள் இன்னல் போக்கி அருள் பாலிக்கும் சமுத்திர நாயகியாம் ஸ்ரீ மாரி கடல்நாட்சி அம்பாளுக்கு நிகழும் சர்வசித்து வருடம் ஆனித்திங்கள் 03ம் நாள் (17.06.2007) ஞாயிற்றுக்கிழமை புனர்பூச நட்சத்திரமும்சித்தயோகமும் கூடிய உதயம் 5.59 மணி முதல் 6.48 மணி வரையுள்ள மிதுன லக்கின சுபமுகூர்த்தத்தில் கும்பாபிஷேகம்நடைபெற திருவருள்கூடியுள்ளது. அன்றும் அதற்கு முன்தினங்களில் நடைபெறும் கிரியைகளில் கலந்து அம்பாளின் அருள் பெற்றேகும்வண்ணம் வேண்டுகிறோம்.

## கிரியாகால நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| 15.06.2007 | வெள்ளிக்கிழமை | காலை 9.00 மணிக்கு கர்மாரம்பம். பூர்வாங்க கிரியை சாந்திகள் நடைபெறும். |
| 16.06.2007 | சனிக்கிழமை | காலை 9.00 மணிக்கு யாக பூஜை. ஸ்ரீ லட்சுமி நாராயண ஹோமம். ஸ்ரீ மாரி மால மந்திர ஹோமம். ஸ்ரீ சுக்க ஹோமம். தீபாராதனை, விபூதி பிரசாதம் வழங்கல். மாலை 6.00 மணிக்கு யாகபூஜை. புருஷ சூக்த தர்க்க சூக்த ஹோமம். ஸ்ரீ லலிதாட்டோத்தர பாராயணம். விசேச திரவ்விய கோமம். |
| 16.06.2007 | சனிக்கிழமை | காலை 8.00 மணிக்கு எண்ணைக்காப்பு ஆரம்பம் மாலை 6.00 மணி வரை |
| 17.06.2007 | ஞாயிற்றுக்கிழமை | யாகபூஜை. மகா பூர்ணாகுதி. தானாதிகள் காலை 5.59 மணி முதல் 6.48 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் தூபி அபிஷேகம். பிரதான மூலமூர்த்தி அபிஷேகம் நடைபெறும். அதனைத்தொடர்ந்துதசதாசனம். மகாபிஷேகம். ஆசியுரை ஆலய நிருவாகத்தின் நன்றியுரையுடன் பிரசாதம் வழங்கப்படும். |

### கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெறும்

அதனைத் தொடர்ந்து 23. 06. 2007 திருக்கதவு திறத்தலும், அதனைத் தொடர்ந்து (வருடாந்த உற்சவம்) சடங்கு நடைபெறும்.

### கும்பாபிஷேக குருமார்கள்

மகாராஜஸ்ரீ சுப்பிரமணிய கிரத்தின பூர்ண சந்திரானந்த சுவாமிகள் (மாமாங்கம் தேவஸ்தானம்)
பிரம்மஸ்ரீ வேதக்குட்டி பூர்ண சந்திர பிரணவஸ்ரீ (மாமாங்கம்)
ஆலய பூசகர் : திரு.சோமசுந்தரம் லிங்கேஸ்வரன் (நாவலடி)
பிரம்மஸ்ரீ ஓ.செல்வானந்த குருக்கள் (மாமாங்கம்)
சிவஸ்ரீ நந்தகோபால குருக்கள் (திருப்பெருந்துறை)

மங்கள வாத்தியம் : காளிதாசன் குழுவினர் (மாமாங்கம்)    ஆலய நிர்மாண ஸ்தபதி : திருதிருஞானமுத்து ஆனந்தராஜா (கல்லடி)

15. 06. 2007 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு ஸ்ரீ மாரி கடல்நாட்சி அம்பாள் மாமாங்கத்தில் இருந்து கிராம பிரதட்சணம் நடைபெற்று ஆலயத்தை சென்றடைவார்.

அம்மன் ஆலயத்தின் புனர் நிர்மாணப்பணிகள் தொடர்ந்து நடைபெறுவதால் அடியார்கள் தங்களால் இயன்ற உதவிகளை வாரி வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்

## அனைவரும் வருக! அம்பாள் அருள் பெறுக!!

நாவலடி - மட்டக்களப்பு

ஸ்ரீ மாரி கடல்நாட்சி அம்மா
சேவையில் ஆலய நிருவாகத்தினர்.

"ஓம் சக்தியே சர்வமயம் முக்தியே நித்தியமாகும்"





## மட்டக்களப்பு - நாவலடி.

## அருள்மிகு ஸ்ரீ மாரி கடலாட்சி அம்பாள் ஆலய

# வருடாந்த உற்சவம் - 2009

**ஆரம்பம்**
**2009.06.30**
செவ்வாய்க்கிழமை

சீர்பெருகு நாவலடி மீதிலுறை
மாரி கடலாட்சி! புகழ் பாடவரும் – பக்தருக்கு
கார்குழலாள் கேட்காத வரம்
கொடுத்தருளும் தேவியவள்
திருப்பாதம் போற்றி போற்றி

**நிறைவு**
**2009.07.07**
செவ்வாய்க்கிழமை

மெய்யடியார்களே!

நிகழும் விரோதி வருடம் ஆனிமாதம் 16ம் நாள் (30.06.2009) செவ்வாய்க்கிழமை நவமி திதியும் அத்த நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த தினத்தில் முன்னிரவு 7.00 மணிக்கு ஸ்ரீமாரி கடலாட்சி அம்மன் ஆலய திருக்கதவு திறக்கப்பட்டு, ஆனி 23ம் நாள் (07.07.2009) செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணிக்கு அம்பாளின் திருக்கும்பம் சொரியும் நிகழ்வும் இடம்பெற்று நிறைவுபெறும். இக்காலங்களில் அடியார்கள் ஆசார சீலர்களாக வருகை தந்து அம்பாளை வணங்கி அஷ்ட சித்திகளை பெற்றேகுமாறு வேண்டுகின்றோம்.

**உபயகாரர்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 30.06.2009 | செவ்வாய்க்கிழமை | 01ம் நாள் | உபயகாரர் : | அமரர்.கந்தையா வைத்தியர் குடும்பத்தினர், [illegible] |
| 01.07.2009 | புதன்கிழமை | 02ம் நாள் | உபயகாரர் : | கோல்ட்பிளவ் விளையாட்டுக்கழகம், நாவலடி, மட்டக்களப்பு. |
| 02.07.2009 | வியாழக்கிழமை | 03ம் நாள் | உபயகாரர் : | அமரர்.தம்பிராசா [illegible] குடும்பத்தினர், நாவலடி. |
| 03.07.2009 | வெள்ளிக்கிழமை | 04ம் நாள் | உபயகாரர் : | அமரர்.[illegible] சங்கரப்பிள்ளை குடும்பத்தினர் நாவலடி. |
| 04.07.2009 | சனிக்கிழமை | 05ம் நாள் | உபயகாரர் : | அமரர்.பொன்னர் சின்னத்தம்பி குடும்பத்தினர், நாவலடி. |
| 05.07.2009 | ஞாயிற்றுக்கிழமை | 06ம் நாள் | உபயகாரர் : | அமரர்.தம்பிப்பிள்ளை [illegible] குடும்பத்தினர், நாவலடி. |
| 06.07.2009 | திங்கட்கிழமை | 07ம் நாள் | உபயகாரர் : | நாவலடி வாழ்பொது மக்கள் |

குறிப்பு : அம்பாளின் மதிய பூசைகள் பகல் 12.30 மணிக்கும் இரவுப் பூசைகள் இரவு 7.30 மணிக்கும் நடைபெறும்.

ஆலய உற்சவ பூசைகள் அனைத்தும் ஆலய பிரதம பூசகர் திரு.சோமசுந்தரம் லிங்கேஸ்வரன் ஐயா தலைமையில் இடம்பெறும்.

அனைவரும் வருக! அம்பாளின் இன்னருள் பெறுக!!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நாவலடி, மட்டக்களப்பு.

இவ்வண்ணம்
அம்பாளின் சேவையிலுள்ள ஆலய பரிபாலன சபை.

ஆதவன் அச்சகம், அரசடி, மட்டக்களப்பு. T.P.2222076

# இயற்கை அனர்த்தமும் சமூக நிலையும்



1957ம் ஆண்டு பெருவெள்ளம்

1978ம் ஆண்டு கார்த்திகை மாதம் 23ம் திகதி வீசிய சூறாவளி

2004ம் ஆண்டு மார்கழி 26ம் திகதி சுனாமித் தாக்கம்

1957ம் ஆண்டு உன்னிச்சைக்குளம் உடைப்பெடுத்து பெருவெள்ளம் ஏற்பட்டபோது வாவிக்கு மறுகரையிலுள்ள சின்ன உப்போடை, பெரிய உப்போடை, அமிர்கதழி, பாலமீன்மடு, சீலாமுனை போன்ற பகுதிகளில் வசித்த மக்கள் பெரும் இன்னல்களுக்கு ஆளாகியதாகவும் அள்ளுண்டு வந்த வெள்ளத்துடன் அடித்துவரப்பட்ட கால்நடைகள் பல புதுமுகத்துவாரத்தினூடாக கடற்கரையில் வந்து ஒதுங்கி இறந்து கிடந்ததாகவும் கூறப்படுகின்றது. வாவிக்கரைமேடாகவும் கடற்கரை பகுதி பள்ளமாகவும் இருந்ததால் பெருகிவந்த வெள்ளம் ஊரினூடாகப் பாய்ந்து கடலைச் சென்று அடைந்தது. கடலாச்சியம்மன் ஆலயத்தின் இரு புறமும் பாய்ந்து சென்று கடலை அடைந்ததால் ஆயலத்திற்குச் சேதம் ஏற்பட வில்லை என்றும் மக்களின் வாழ்க்கையில்தான் சமூகபொருளாதார பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்ததாகக் கூறப்படுகிறது. அந்த நேரத்தில் நோய்த் தாக்கங்களும் கூடுதலாக இருந்ததாகக் கூறுகின்றனர்.

### சுழன்றடித்த சூறாவளி

1978ம் ஆண்டு கார்த்திகை மாதம் 23ம் திகதி கிழக்கிலங்கையில் சுழன்றடித்த சூறாவளியும், சிறிய கடல் பெருக்கும் மக்களை வெகுவாகப் பாதித்த இயற்கை அனர்த்தமாகும். பலரின் குடியிருப்புக்களைச் சுற்றி நிறைந்து நின்ற தென்னை, மா, பனை மரங்கள் முறிந்து வீழ்ந்தும்,

பிடுங்கியும் வீசப்பட்டதால் பாரியதாக்கத்தை ஏற்படுத்தியது. மக்கள் சிலரது வீடுகள் வீழ்ந்தும், குளிரேறியும் பாதிக்கப்பட்டனர். பலர் வீடுகள் சேதமாக்கப்பட்டன. வயது முதிர்ந்தோர் சிலர் இறந்தனர் அவ்வேளை நாவலடி கடலாச்சியம்மன் ஆலயத்தின் கருவறை தவிர்ந்த முன் மண்டபங்கள் தகர்ந்து தரைமட்டமாகியன.

அன்னையின் அருள் காரணமாக ஆலயம் மீண்டும் புதுப் பொலிவு பெற்றது. அரசாங்க புனருத்தான நன்கொடையாலும் ஊர்மக்களின் ஒத்துழைப்பாலும் பரிபாலன சபையினரின் அயராத உழைப்பாலும் புதிய பரிவாரத் தெய்வங்களுக்குரிய பந்தல்களுடன் மூலஸ்தானம், அர்த்தமண்டபம், மகா மண்டபம் புனரமைக்கப்பட்டன. இப்போது ஆலயம் முன்பிருந்ததைவிட உறுதியாகக் கட்டியமைக்கப்பட்டுள்ளது. ஆலயத்தின் நிருவாக, சடங்கு முறைகளில் மாற்றம் ஏற்பட்டது. விளையாட்டுக் கழகங்கள் தங்கள் பங்களிப்பை சுனாமியின் பின் பெருமளவில் ஆலயத்திற்கா. வழங்கின. அந்தவகையில் கோல்ட்பீஸ் விளையாட்டுக் கழகத்தினரால் 2ம் சடங்கு செய்யப்பட்டது. நாவலர் கழகம் தாகசாந்தி, அன்னதானம், ஆலய உற்சவ காலங்களில் செய்து உதவினர். ஆலய பரிபாலன சபையினருடன் இணைந்து ஆலய மேம்பாட்டிற்கு இளம் தலைமுறையினரின் மனமுவந்த பங்களிப்பும் குறிப்பிடத்தக்கதாக அமைந்தது. 7ம் நாள் சடங்கு ஊர்மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒற்றுமையுடன் நடத்தினர். உற்சவம் தொடங்கி விட்டால் ஊரே களைகட்டும் பெரும்திரளான மக்கள் கூட்டம் ஆனி பௌர்ணமிக்கு முதல் நாள் வருகை தருவார்கள் முழு நிலவின் ஒளியில் அன்னையின் ஆலய வளவில் அமைக்கப்பட்ட அரங்கத்தில் நடைபெறும் கலை நிகழ்ச்சிகள், கதாப்பிரசங்கங்கள், கரகாட்டம், கோலாட்டம், இன்னிசைக் கச்சேரி என்பவற்றை கேட்டும், கண்டும் களிப்பர். கடற்கரை அருகே நிரையாக வந்துள்ள கடைகள், அப்பக் கடைகளில் மக்கள் கூட்டத்தை காணலாம். கூட்டம் கூட்டமாக கதைபேசி மகிழும் இன பந்துக்கள், சிறுவர் முதல் வயோதிபர், இளைஞர், யுவதிகள் குதூகலமாக அன்றைய நாளைக் கழிப்பதைக் காணக் கூடியதாக இருக்கும். ஆலயமும் கடற்கரையும் வீதிகளும் மக்கள் கூட்டத்தினால் நிறைந்து காணப்படும்.

2004ம் ஆண்டு அழகாகவும், உறுதியாகவும் கட்டி முடிக்கப்பட்ட ஆலயம் கும்பாபிஷேகத்தின்போது எண்ணெய்க் காப்பு, பால்குடபவனி, தீ மிதிப்பு, சிறப்பான சடங்குகள் நாவலடி மக்களுக்கு ஒரு பொற்காலமாகத் திகழ்ந்தது. அந்தக் காலம் வெளிநாடு சென்றவர்களில் பலர் உற்சவத்திற்காக வருகை தந்திருந்தனர். சோழப் பேரரசின் பொற்காலம் எவ்வாறு அன்னியர் படையெடுப்பினால் சிதைந்து சின்னாபின்னப்பட்டதோ அதேபோன்று வாவிக்கும் கடலுக்கும் இடையேயிருந்த நாவலடிக்கிராமம் சுனாமியால் அழிவுற்றது. பல மக்களின் உயிர்களைக் காவு கொண்டது.

2004.12.26ந் திகதி எதிர்பாராத விதமாகப் பல அடி உயரத்திற்கு எழுந்து சீறிவந்த ஆழிப்பேரலையானது வீடுகளை அடித்து நொறுக்கி மக்களை அள்ளிக் கொண்டு அருகிலிருந்த வாவியில் தள்ளிது. நாவலடி மக்களில் 725 பேர் மரணமடைந்தனர். வாவியில் தள்ளப்பட்டு மறுகரையில் பிணமாகச் சிலர் ஒதுங்கினர் பலர் கல்லடிப் பாலத்தினூடாகவும் முகத்துவாரம் (ஆறும் கடலும் சங்கமிக்கும் இடம்) அடித்துச் செல்லப்பட்டனர். பலர் பிணங்களாக ஆற்றங்கரை கடற்கரை பகுதிகளில் குவிந்து கிடந்தனர். ஊரில் அந்நேரத்தில் இருந்து ஒரு சிலரே தப்பிப் பிழைத்தனர். அவர்களில் பலர் மிகவும் கஷ்டப்பட்டே தப்பியதாக கூறுகின்றனர். ஊரில் சிலரே திக்கற்றவர்களாக தப்பிப் பிழைத்தனர். பெண்களின் முடிகள் வேலியில் சிக்கியதால் பலர் மீட்கமுடியாமல் இறந்து கிடந்தனர். கர்ப்பிணிகள், குழந்தைகள் இறந்தனர் மிகவும் வேதனையானது இளம் பெண்களில் ஆடைகள் அற்று இருந்ததால் தாளம்பற்றைகளுக்குள் ஒழித்துக் கொண்டிருந்தனர் பாதுபாப்பு படையினர் உயிரோடிருப்பவர்களைக் காப்பாற்றிக் கொண்டுபோவதைக் கண்டும் வெளிவர வெட்கப்பட்டு குளிரேறியே இறந்து போயினர் சிலர். சிலரின் சடலங்கள் எங்கே போனது என்று கூட இற்றைவரை தெரியாத மர்மங்களும் உண்டு. கல்லடிப் பாலத்தால் அள்ளுண்டு சென்றவர்கள் வெவ்வேறு ஊர்களான கல்லடி, நாவற்குடா, பெரியகளம், கொக்கட்டிச்சோலை வரை சென்று தப்பியவர்களும் உண்டு, இறந்தவர்களும் உண்டு.

ஊரே சுடுகாடாய்க் காட்சியளித்தது. வைத்தியசாலைகளில் பிணங்கள் குவிக்கப்பட்டன. நாட்கணக்கில் பெற்றோர் குழந்தைகளையும், குழந்தைகள் பெற்றோரையும் உறவுகளையும் தேடி அலைந்தனர். சிலர் கிடைத்தனர், சிலர் கிடைக்கவில்லை. எஞ்சியோர் வெளியே அகதி முகாம்களிலும் பாடசாலைகளிலும் ஆலயங்களிலும் தஞ்சமடைந்தனர். பின் நாவலடி டச்பார் திருச்செந்தூர் முருகன் ஆலய பகுதியிலுள்ள மக்களுக்கெனத் தனிப்பட்ட அகதி முகாம்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. திராய்மடுவில் வீடமைப்புத் திட்டங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. சிலர் வாவிக்கு அப்பாலுள்ள அமிர்தகழி, பாலமீன்மடு, முக்துவாரம், மற்றும் கல்லடி, மட்டக்களப்பு நகரப்பகுதிகளில் வசித்து வருகின்றனர். தொழில்நிமித்தம் நாவலடிக்குச் சென்று திரும்புவோரே அதிகமாக உள்ளனர். போக்குவரத்து, உணவு, உறையுள் போன்ற வசதிகள் இன்றி இவர்கள் சிரமத்திற்குள்ளாவதால் படிப்படியாக மீண்டும் குடியேறும் நிலை காணப்படுகின்றது. நாவலடிக் கிராமத்தில் எகேட், கபிடாட் வீடமைப்புத்திட்டங்கள் மூலம் 140 குடியிருப்புக்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. அநேகமான வீடுகள் மீண்டும் மறுமுறை சுனாமி வந்தால் தப்புவதற்காக மாடிவீடுகளாகவே அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆலயத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்று ஐந்து மாதங்களே கழிந்த நிலையில் ஆலயத்தின் மூலஸ்தானத்திற்கோ அர்த்தமண்டபத்திற்கோ விமானத்திற்கோ எந்த வித சேதங்களும் ஏற்படவில்லை. ஓட்டினால் வேயப்பட்டிருந்த மகாமண்டபம் (முன்மண்டபம்) காளிகோயில், நாகதம்பிரான் பந்தல், பரிவாரத் தெய்வங்களின் சிலபந்தல்கள், என்பன சேதமுற்றன. அன்னையின் முகப்புச் சிலையும் சேதத்திற்குள்ளானது. தீராத மனவேதனை காரணமாகப் பலர் ஆயலத்திற்குச் செல்வது குறைந்தது. தொழில் காரணமாகவும் பழக்கப்பட்ட அந்த இடத்தையே விரும்பிய சிலர் ஊரில் சென்று வாழத் தொடங்கினர். திடீரென நாவலடி ஊரைச் சேர்ந்த பலர் நோய்வாய்ப்பட்டனர். எந்த மருந்துகளுக்கும் நோய் தீரவில்லை, இறுதியில் அன்னையைத் தஞ்சமடைந்ததும் நோய் மாயமாக மறைந்தது. 1ம் ஆண்டு நிறைவு தின நாளன்று எஞ்சியிருந்த


எல்லோரும் ஒன்று கூடினர். நினைவுத் தூபிகளில் இறந்தவர்களின் பெயர் பொறிக்கப்பட்டன தூபிகளில் உருவப்படங்கள் வைத்து ஆத்மசாந்திக் கிரியைகளும், அன்னதானமும் செய்யப்பட்டன. சிலர் தனிப்பட்ட முறையிலும் கிரியைகளைச் செய்தனர். பிதிர்கடன்களை அமிர்தகழி மாமாங்க ஆலயத்திலும் செய்தனர்.


மக்கள் மெதுமெதுவாக ஆலயத்திற்குச் செல்லத் தொடங்கினர். ஆறாத மனவேதனையுடனும் கண்ணீரும் கம்பலையுமாக அன்னையிடம் முறையிட்டனர். சில வருடங்கள் சென்ற நிலையில் மக்கள் பல சமூகமாற்றங்களுக்கு உள்வாங்கப்பட்டனர். மட்டக்களப்பு நகரப்பகுதி இடம் பெயர்வுகள், வேறு கிராம இடம் பெயர்வுகள் கல்வி, தொழில் என்பவற்றில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன.

2007 ல் மீண்டும் உயிர் பெற்று எழுந்தது கடலாச்சியம்மன் ஆலயம். கும்பாபிஷேகமும் சடங்குகளும் செய்யப்பட்டன.

2008, 2009 உற்சவங்கள் சிறப்பாக செய்யப்பட்டன, முகப்புச் சிலை திரு.ந.கணபதிப்பிள்ளை குடும்பத்தினரால் சீரமைத்துக் கொடுக்கப்பட்டது. உற்சவ காலத்தில் வெளிநாட்டில், வெளியூரிலிருந்த நாவலடி மக்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து ஆலயத்தில் கூடினர். மனிதவாழக்கையில் இன்பமோ, துன்பமோ நிரந்தரமானதல்ல என்பதை உற்சவ நாளில் உணரக் கூடியதாக இருந்தது. ஆலய புனருத்தான வேலைகள் தொடர்ந்து நடந்தபடி உள்ளன. இவ்வளவு காலமும் வரலாற்றில் காணாதவாறு மிகவும் உறுதியாகவும் பெரிதாகவும் ஆலயத்தை அமைக்க மகாசபையினரும் நிருவாக சபையினரும் முடிவெடுத்து கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. படிப்படியாக மீண்டும் களை கட்டத் தொடங்குகின்றது அன்னையின் அருள்மிகு ஸ்ரீ கடலாச்சியம்மன் ஆலயம்.

ஸ்ரீ கடலாச்சியம்மன் ஆலயத்தின் தற்போதைய தோற்றம்





# அற்புதங்கள்

01. திரு.க. தம்பிப்பிள்ளை (**ஜர்மர்**) என அழைக்கப்படுபவர் கம்பகாமாட்சி சந்நதம் கொண்டு ஆடுபவராகும். இவர் சூலத்தில் வயிற்றை வைத்து சுற்றிவரும் காட்சியைக் காண்பதற்காகப் பல ஊர்களிலிருந்தும் பெருந்திரளான மக்கள் சடங்குகாலத்தில் (உற்சவகாலம்) வருகை தருவது வழக்கமாகும். இவர் மக்களுக்குக் கூறும் தெய்வவாக்குப் பலிப்பதால் அவரிடம் வாக்குக் கேட்பதை வரப்பிரசாதமாக நினைத்து வாக்குக் கேட்க வரும் நாளில் ஒரு நாள் பள்ளையச் சடங்கிற்கு முதல் நாள் மதியப் பூசையின் போது இன்று **"சந்திர உதயத்தில் கடலில் ஓர் அற்புதம் நிகழும்"** என வாக்குக் கூறியதைத் தொடர்ந்து அன்று மாலைப் பொழுது சந்திர உதய நேரத்தில் மக்களெல்லோரும் ஆலய முன்றலில் கூடி என்ன நடக்கப் போகிறதோ? என்ற ஆவலில் அன்று பூசைக்கு வந்தவர்கள் மட்டுமின்றி வராமல் இருந்தோருக்கும் செய்தி விரைவாக பரவி அங்கு அற்புதத்தை காண வந்து நின்றனராம். கிழக்கே சந்திரன் உதயமாகிக் கொண்டிருக்கும் போது காமாட்சியமாக சன்னதம் கொண்டு கடலினை நோக்கி ஓடிச் சென்று கடலில் பாய்ந்து மூன்று முறை அவரின் சத்தம் கேட்டதாகவும் ஒன்றன்பின் ஒன்றாக மூன்று ஜோதிப் பிளம்புகள் தோன்றி அதிசயிக்க வைத்ததாகவும் அந்நேரத்தில் தெய்வவாக்காக "மாரியே கடலாச்சியாய் முகம்மாறி சடங்கு நேரத்தில் வருகிறார்" எனக் கூறியுள்ளார். (இக்கதை அபிராமிபட்டரை நினைக்க வைக்கிறது) (தகவல். திரு.ந. கணபதிப்பிள்ளை லிங்கேஸ்வரன்)

02. கம்பமரமாக நாமம் போடப்பட்டு இருந்த சூலத்தை மாற்றி மிகவும் கூர்மையாக செய்து பொருத்தப்பட்டதாகவும் இரவு நேரம் கம்பத்தில் ஏறி சுற்றிவரும் போது மக்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே சூலம் ஆழமாக வயிற்றில் ஏறி கம்பமரத்தில் மேல் இருந்து இரத்தம் பெருகி கம்பத்தினால் வழிந்து ஓடி வந்ததை கண்டமக்கள் பயந்து பெரும் ஆரவாரத்துடன் அம்மனை அழைத்து குற்றம் பொறுத்தருள் தாயே என வேண்டினர். இளைஞர் கூட்டத்தில் வேடிக்கை பார்த்துப் கொண்டிருந்த ஒருவர் வெளியூரைச் சேர்ந்தவர் **"சரி இன்றுடன் கம்பகாமாட்சியின் கதை முடியப் போகிறது"** என்று கூறியிருக்கிறார். மக்களும் அதைக் கேட்டனராம். எல்லாம் ஆடி முடிந்தபின் இறங்கி வந்தவர் சாதாரணமாக நடந்துபோய் இளைஞர் கூட்டத்தில் நின்ற அந்த இளைஞரை பிடித்து **"காமாட்சியை அவ்வளவு லேசுப்பட்டவளாக நினைத்து விடாதே மகனே"** என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார். அதைப்பார்த்து கேட்டுக் கொண்டிருந்த இளைஞர் கூட்டத்திற்கு அதிசயமாகவும் பயமாகவும் இருந்தாகவும், மறுநாள் அதே கம்பத்தில் ஏறியாடியதாகவும், கேலி பேசுவோர் அதன் பின் அவரிடம் ஒரு தெய்வீக சக்தி இருப்பதாக நம்பியதாகவும் கூறப்படுகின்றது.

(தகவல் திரு. ச. தங்கவேல்)



03. திரு.சீ.வேலுப்பிள்ளை பூசாரி. (தெய்வம் சில குறித்த மனிதர்கள் மூலம் வெளிப்பட்டு வரம் அருள்கின்றது) சித்தரக் கட்டாடியாரின் சீடர்களுள் இவரும் ஒருவர். பூசைமுறைகளை நன்கு கற்றவராவார். சில காலம் பூசை செய்து வந்திருக்கிறார். பின் அவரின் சகோதரரே பூசையைத் தொடர்ந்து நடத்தியுள்ளார். தெய்வவாலாயம் ஏற்பட்டு அவர் கூறுவது பலித்ததால் ஆலயத்தில் கட்டுச் சொல்லித் தொடங்கியதைக் கேள்வியுற்ற மக்கள் பல பகுதிகளிலிமிருந்து வந்து கட்டு கேட்டுச் சென்றனர். வெள்ளை வேட்டி தோளில் கோணிப்பை (சிவப்பு, பச்சை, நீல நிறங்களில் காணப்படும்) குளித்து முழுகி திருநீறு பூசிய கனிவான மலர்ந்த வதனம் நல்லவரான அவரை பார்த்து பேசினாலே துன்பம் பறந்து போகும். **"பூசாரி அப்பாச்சி"** என்றுதான் எல்லோரும் அன்புடன் அழைப்பார்கள் (உறவினர் தவிர்ந்தவர்கள்) மிகவும் அன்பாக மகனே! மகளே! என்றுதான் மற்றவர்களை அழைத்துக் கதைப்பார். ஆலயத்தில் வெள்ளிக்கிழமைகளில் மக்கள் கூட்டம் நிறைந்திருப்பதற்கு அவரும் ஒரு காரணமாவார். வெள்ளிக்கிழமை அதிகாலையே மக்கள் வந்து வரிசையாக அமர்ந்திருப்பார்கள். விலை பேரம் பேசி சொல்லிகட்டு சொல்லும் பழக்கம் அவரிடம் இல்லை. விரும்பி கொடுப்பதை அந்தப் பையினுள் போடச் சொல்வார். கொடுக்காவிட்டாலும் அதைப்பற்றி கேட்கமாட்டார். சந்தனக்குச்சி வாசத்துடன் பக்தர்களை

ஒவ்வொருவராக அழைத்துக் கட்டு சொல்வதற்கு முன் தலையைக் குனிந்து நிலத்தைப் பார்த்த வண்ணம் ஆலயத்துள் முன்னும் பின்னும் நடந்து கொண்டிப்பார். அப்போது அவரின் மனம் அம்மனுடன் சங்கமித்து இருக்கும். அதற்கு அடையாளமாக ம்.... ஆ.... சொல்லு..... என்று அன்னையுடன் பேசிவிட்டு மக்கள் தங்கள் குறையை கூறுவதற்கு முன்னே பாட்டுப்பாடிக் கொண்டே அவர்கள் கேட்க வந்ததை கூறிக் கொண்டு சென்று உனது பிரச்சினை இதுதானே மகனே! மகளே! என்று கேட்பார்.

அவர்கள் வந்த பிரச்சினை பற்றியும் அதை எப்படித் தீர்க்கலாம் என்றும் கூறுவார். பலர் அழுது கொண்டே கேட்பார்கள். அவர்களுக்கு வந்த துன்பம் என்ன செய்தால் போகும் என்றும் எப்போது தீரும் என்றும் கூறுவார். அவர்களும் அவர் கூறியவாறே நடந்ததாக கூறுவார்கள்.

### 03. காது கேட்க வைத்த அதிசயம்

பாடசாலைக்கப் போய்க்கொண்டிருந்த ஒரு சிறுவன் ஒரு நாள் அம்மா இனி எனக்கு பாடசாலைக்குப் போக முடியாது என அடம்பிடித்தான் சிறுவனிடம் காரணம் கேட்டபோது, ஆசிரியர்கள் படிப்பிப்பது எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை எனக் கவலையுடன் கூறியதை கேட்டு பெற்றோர் வைத்திய சாலைக்கு அழைத்துச் சென்று காட்டியும் எந்த விதப் பலனும் இல்லாததால் கடலாச்சியம்மன் ஆலயத்திற்குச் சென்று கட்டுக் கேட்டுப் பாருங்கள் ஒரு வழி கூறுவார் என்று மக்கள் கூறியதைக் கேட்டு ஆலயத்திற்கு அழைத்துச் சென்றார்களாம். சிறுவனை உற்று நோக்கி விட்டு பின்னும் முன்னும் நடந்துவிட்டு படிப்பதற்கு விருப்பம் உள்ள பையன்தான் இவன், காது கேட்டால் தானாக பாடசாலை போவான் பிள்ளை, கவலைப்பட வேண்டாம் என்று கூறி ஆலய தீர்த்த நீருடன் வேப்பிலை, பழம் மருந்தாகக் கொடுத்தாராம். சில நாட்களின் பின்னே காது நன்றாக கேட்டதால் மிகவும் மகிழ்ச்சியுடன் தனது தம்பி பாடசாலை சென்றதாக அச் சிறுவனின் அக்கா கூறினார். அச் சிறுவன் வளர்ந்து இப்போது

நன்றாகப் படித்து நல்ல வேலையிலும் இருப்பதாகக் கூறினார்.

**04. பிறக்கப்போகும் குழந்தை**

ஒரு தாய்க்கு முதல் பிறந்த இரண்டு பிள்ளைகளும் பெண் பிள்ளைகள் தனக்கு மகன் வேண்டுமென நினைத்து ஒரு குழந்தையை பெற்றெடுக்க விரும்பினார் அந்தத் தாய். குழந்தையும் உருவாகி 3 மாதங்கள் இருக்கும்போது ஒரு வெள்ளிக்கிழமை கோயிலுக்குச் சென்று அம்மனைக் கும்பிடுவதற்காகச் சென்றபோது பூசாரி அப்பாச்சி கட்டுச் சொல்லி முடித்து விட்டு வந்து கொண்டிருந்தார். அந்தத் தாயைப் பார்த்து தலையை ஆட்டிச் சிரித்து விட்டு உன்வயிற்றில் இருப்பது இதுவும் பெண் குழந்தைதான் மகளே! உனக்கு ஆண்குழந்தைப் பாக்கியம் இல்லையே. மனம் தளராதே எல்லாக் குழந்தைகளும் இறைவியின் குழந்தைகள்தான் என்று கூறி அனுப்பினார் அப்போது ஸ்கான் செய்யும் நடைமுறை இல்லாத காரணத்தினால் முதல் இரண்டு குழந்தைகளையும் விட வித்தியாசமான செயற்பாடுகளைத் தாய் உணர்ந்ததால் தன் வயிற்றுள் இருப்பது ஆண்குழந்தைதான் என நம்பியிருந்தார். பார்ப்பவர்களும் நிச்சயமாக ஆண்குழந்தையே பிறக்கும் என்று கூறினராம். ஆனால் கடைசியில் பிறந்தது பெண் குழந்தைதான் என்றார். அதுமட்டுமின்றி இவர் கூறிய யாவும் தன் வாழ்க்கையில் நடந்ததாக கூறினார்.

**05. வேலை கிடைக்கும் போ**

ஒரு நாள் ஒரு பெண் கட்டுக்கேட்க வந்தவேளை நீ நினைத்தது சித்தியாகும் போ என்றாராம். நன்றாகப் படித்திருந்தும் 35 வயதாகி விட்டது இன்னும் வேலை கிடைக்காததால் தனக்கு வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கை போய்விட்ட நிலையில்தான் அந்தப் பெண் ஆலயத்திற்கு வந்தாராம். என்ன அம்மா? இந்தக் குழந்தைக்கு என்ன பதில் கூறுகின்றாய் என்று கேட்டாராம். ' கவலைப்படாதே அவ உனக்கு 3மாதத்திற்குள் வேலையை தருவாவாம். எத்தனையாம் திகதி அம்மா கொடுப்பா அதையும் சொல்லிவிடு நிம்மதியாக

வீட்டிற்குப் போகட்டுமே என்றாராம். ஒரு குறிப்பிட்ட திகதியை கூறியதும் (15ந் திகதி) உனக்கு வேலை கிடைத்ததும் அம்மனை வந்துபார் அவவுக்கு பாணக்கம் செய்து சந்தோசப்படுத்து என்று கூறி வாசல்வரை கொண்டு வந்து விட்டாராம். அவர் கூறியதைக் கேட்டதும் நம்பமுடியாமல்தான் இருந்தது. 15 வருடங்களாக கிடைக்காத வேலை இப்பொழுது கிடைத்து விடுமா? என்று நம்பிக்கையில்லாமல் வீடு சென்றாராம். பூசாரி அப்பாச்சி கூறியபடி மூன்றுமாதம் சென்று குறிப்பிட்ட திகதியில் வேலை கிடைத்ததாகவும் கூறினார். இந்த தகவலை கூறியவர் தற்போது ஓய்வு பெற்றுவிட்டார்.

இவ்வாறு அம்மனுடன் கதைத்துக் கட்டுக் கூறுவதும் துன்பத்திற்கான நிவர்த்தியைக் கூறுவதும் சகஜம் இவை மக்கள் கூறும் கதைகள். பல வருடங்களாக பிள்ளைப்பாக்கியம் இல்லை என்று வருந்திய ஒரு பெண் வந்துள்ளார். அடுத்த வருடம் உற்சவத்திற்கு உன் பிள்ளையை விற்றுவாங்கு என்றாராம். அப் பெண் அவரின் காலைத் தொட்டு வணங்கி மிகவும் அழுதார். என்னுடைய உறவினர்களினாலே கேட்ககூடாத சொல் எல்லாம் கேட்டு மிகவும் மனம் நொந்து போயிருக்கிறேன் ஐயா! எனக்கு உண்மையில் பிள்ளை பிறக்குமா? என ஏக்கத்துடன் கேட்டார். கவலைப்படாதே மகள், நீகேட்ட வரம் அம்மா உனக்கு தந்துவிட்டார் என்று கூறியதை கேட்ட பெண்ணிற்கு மகிழ்ச்சி ஒருபுறம் அப்படி நடக்குமா? என்ற சந்தேகம் மறு புறம் ஒன்பது வெள்ளிக்கிமைகள் ஆலயத்திற்கு வந்துபோ என்றார். அப்படியே செய்த அந்தப் பெண் மறுவருடம் உற்சவத்தின்போது குழந்தையை விற்று வாங்கியதாகக் கூறினார்.

சிலருக்கு பிள்ளைப்பாக்கியம் இல்லையம்மா நீ தத்தெடுத்து வளர்த்துக் கொள் அந்தக் குழந்தையால் உன் துன்பங்கள் யாவும் மறைந்து மகிழ்ச்சியுடன் வாழ்வாய் என்று வாக்கு கூறியது போல் நடந்தது. வெளிநாட்டுப்பயணம் செல்லுவாய் என்று கூறியவர்கள் அவர் கூறியபடி சென்று நன்றாக வாழ்கின்றனர். வெளிநாட்டுப் பயணம் உனக்கு சரிவராது

உழைத்து இங்கேயே வாழ் என்று கூறியவர்கள் காசைக் கட்டி ஏமாந்து இறுதியில் ஊரிலே தொழில் செய்து வாழ்ந்த கதைகளும் உண்டு. இவ்வாறு நடக்கவிருப்பதை முன்கூட்டியே கூறுவதனால் வெள்ளிக்கிழமைகளில் மக்கள் கூட்டம் நாளுக்குநாள் கூடிக்கொண்டு சென்றது எல்லோரும் அறிந்த உண்மையாகும். இவரது மரணவீட்டிற்கு பல ஊர்களிலிருந்து வந்த இந்து மக்களுடன் பிற சகோதர மதத்தவர்களும் வந்து அஞ்சலி செலுத்திச் சென்றனர்.

# ஆலயத் தொண்டன்

இருதயநாதன் என்பவர் இருதயம் அண்ணாச்சி என்று அழைக்கப்படுவார். சிலருக்கு (ஆயக்காசி) என்று கூறினால்தான் விளங்கும். மட்டக்களப்பில் அதிகமானோர் அறிந்திருப்பர். அவரது மெலிந்த தோற்றத்துடன், எண்ணெய்ப் பசையற்ற வாரிவிடப்படாத கேசம், சாறனை மடித்துக் கட்டி அரைக்கை சேட், ஒரு துவாய் தோளில், கையில் காசு வைப்பதற்கானபை, சேட் பக்கற்றுக்குள் எந்நேரமும் அடுக்கி வைக்கப்பட்ட நூறு, ஆயிரம் ரூபா நோட்டுக்கள். (காயில் கிணற்றில் விரும்பும்போது குளித்து முழுகுதல் அல்லது யாராவது புது உடை வாங்கிக் கொடுத்து தாங்களே முழுகவார்த்து அனுப்புவார்கள். ஆளைப் பார்க்கும் போது அழுக்கானவர் போல் தோன்றினாலும் கள்ளம், கபடமற்ற வெள்ளையுள்ளம் வியர்வைவாடை வீசாத தேகம், ஊர்கள் தோறும் சென்று ஐந்து, பத்து, இருபது சிலர் ஐம்பது, நூறு ரூபாயும் கொடுப்பதும் உண்டு. ஓரிரு நாட்களில் ஆயிரக்கணக்கில் பணம் சேர்த்துவிடும் திறமை. எப்போதும் குறையாமல் ஆயிரக்கணக்கில் பணம் இருக்கும். கடலாச்சியம்மன் கோயிலுக்குப் பானை, ஆலய கட்டிட நிதிக்கான பணம், வெங்கலச் சிலை, கடலாச்சியம்மன் ஆலயத்திற்கு மட்டுமின்றி பல கோயில்களுக்கும் தேவையறிந்து பொருட்களாகவும், நிதியுதவியாகவும் கொடுத்து உதவியுள்ளார். அநேகமாக அம்மன் கோயிலில் இவரைக் காணலாம். கடலாச்சியம்மன் கோயிலில் கதவருகில் அமர்ந்து அம்மனுடன் கதைப்பதையும் ஆட்களின் அரவம் கேட்டால் கதைப்பதை நிறுத்திவிடுவார். மாலை நேரங்களில் ஆலயத்தில் விளக்கேற்றி வைப்பது. குழந்தைகளிடம் மிகவும் அன்பு உடையவர் ஆனால் பல குழந்தைகள் இவரின் தோற்றத்தைக் கண்டு பயந்து ஓடுவார்கள். ஆண், பெண் என்ற

வேறுபாடின்றி தனக்கு விருப்பமானவர்களின் உச்சம் தலையில் முத்தமிடுவது வழக்கம். வாய்திறந்து கதைப்பது ஏதோ ஒரு ஆலயத்தைப் பற்றியே இருக்கும். அல்லது யாராவது இறந்துவிட்டால் எல்லோரிடமும் கூறுவார்.

கடலாச்சியம்மனைப் பற்றி அடிக்கடி கதைப்பது வழக்கம். பல நாட்களில் அம்மன் கோயிலில் தங்கிவிடுவதும் உண்டு. இருதயமற்ற சிலர் இருதயத்தின் அம்மனுக்காக சேர்த்து வைத்துள்ள பணத்தைப் பறிப்பது, கள்வாடுவதும் உண்டு. அப்படியான வேளைகளில் தான் காணும் எல்லோரிடமும் முறையிடுவார்.

வீடுகளுக்கு சென்றால் தேனீர் மட்டும் நன்றாக ஆறவைத்துதா என்றுவாங்கி குடிப்பார். சாப்பிடுவது அபூர்வம். பசியிருந்தால் மட்டும் சாப்பாட்டைப் பொதியாக வாங்கிக் கட்டி வாங்கிக் கொண்டு போவார். யாரைக் கண்டாலும் இந்தா சாப்பிடு என்று கொடுப்பார். அவருக்குப் பலர் சாப்பாடு கட்டிக் கொடுத்தால் அதைப் பசியுடன் இருப்பவர்களுக்கு தானம் கொடுத்து விடுவார். பைநிறைய பணம் கட்டுக்கட்டாக குறைவின்றி இருக்கும். அதில் எடுத்து சாப்பிடுவதோ உடைவாங்குவதோ கிடையாது. வருடப்பிறப்பு காலங்களில் பலர் உடை எடுத்துக் கொடுத்து சிலவேளை கட்டாயப் படுத்தினால் அணிவதும், பிறருக்குத் தானம் கொடுப்பதும் உண்டு. அம்மாளுக்குத் தொண்டு செய்வதற்கு முன் உன்னைப்பார் என்று கூறினால் எனக்கு ஒன்றும் தேவையில்லை என்று கூறுவது வழக்கம். ஒரு விசித்திரமான மனிதராகவே காணப்படுவார். பல வீடுகளுக்கு செல்லும்போது நாய்கடிக்கும், மாடு குத்தும், வீதி விபத்துக்களில் மாட்டியதும் உண்டு. எல்லாவற்றிற்கும் மருந்து கடலாச்சியம்மன் கோயில் விபூதிதான் ஒரு சில நாட்களில் உற்சாகமாக திரிவதையும் காணலாம். தன் ஆயுட் காலம் உள்ளவரை ஆலயங்களுக்குப் பணத்தை வாரிக் கொடுத்துள்ளார். அவரின் மரணம் பலரை வேதனைக்கு உள்ளாக்கியது. ஒரு வீட்டிற்கு போனால் அவ்வீட்டிலுள்ள அனைவரின் சுகத்தையும் ஒவ்வொருவராக விசாரிப்பார். வாழ் நாளில் அம்மனின் நாமமும், அம்மனை பற்றிய சிந்தனையுடனுமே உலாவரும் அந்த அன்பே உருவானவரை அற்புதமான மனிதராகவும், ஆலயத் தொண்டனாகவும் நினைக்கத் தோன்றுகிறது.

# மூக்குத்தி ஒளி

என் சொந்த வாழ்வில் நடந்த உண்மையான சம்பவத்தை இங்கே குறிப்பிடுகின்றேன். பாடசாலைக்குப் பக்கத்தில் ஆலயம் அமைந்திருந்ததால் நேரம் கிடைக்கும் போதெல்லாம் காலையில் ஆலயத்திற்குச் சென்று கூட்டி பூவைத்து வணங்கி விட்டு பாடசாலை வேலைகளை ஆரம்பிப்பேன். இவ்வாறாகக் காலம் சென்று கொண்டிருக்கும் நாளில் என் கணவர் திருகோணமலைக்கு இடமாற்றம் கிடைத்து சென்று விட்டார் (மக்கள் வங்கிக்கு) அவரை திடீரெனப் பிரிந்து சென்றதால் எனக்கும் பிள்ளைகளுக்கும் மிகுந்த வேதனையாக இருந்தது. சின்ன மகளுக்கு 3 வயது அம்மை நோய் (மணல்வாரி) உடல் முழுதும் வியர்க் குருமாதிரி போட்டு கடும் காச்சல் காய்ந்து கொண்டிருந்தது. இரவு பகலாக எந்நேரமும் அப்பாவைக் கேட்டு அழுது கொண்டிருந்தாள். எவ்வளவோ சமாதானம் கூறியும் கேட்கவில்லை தந்தைக்கும் உடனே வரமுடியாத நிலை மூன்று நாட்களுக்கு முன்னேதான் மேலதிகமாக ஒரு நாள் (சனி, ஞாயிறு) லீவெடுத்து வீட்டிற்கு வந்து போய் இருந்தார். அன்று பாடசாலைக்கு அவசியமாகச் சென்று வரவேண்டியிருந்ததால் வீட்டிற்கு என் மாமியும் மாமாவும் அப்பாவும் வந்திருந்ததால் மகளை அவர்களுடன் விட்டு பாடசாலைக்கு வந்து வழமைபோல் ஆலயத்திற்கு சென்று வணங்கும்போது "இன்றைய நாள் நலமான நாளாக அமைய அருள்செய் தாயே நல்வழிகாட்டு" என்றும் என்னைச் சார்ந்தவர்கள் நலமாய் வாழவேண்டும் என்றே எப்போதும் வணங்குவேன். அன்றோ என்கணவர் விரைவில் இடமாற்றலாகி வந்து விடவேண்டும், குழந்தை அழுகின்றாள் என அம்மனைப் பார்த்து வேண்டிக் கொண்டிருக்கும்போது ஆலயத்தின்

முகப்பில் இருந்த அம்மன் சிலையில் மூக்குத்தி ஒளிவீசுவதைக் கண்டேன். பின் அந்த ஒளி நான் நிற்கும் இடம்வரை வருவதைக் கண்டு திகைத்து உற்றுப்பார்த்த வண்ணமே நின்றேன். அந்த ஒளியிலிருந்து **"சைவமும் தமிழும்"** என்ற சத்தம் கேட்டது. நான் உயர்தரம் படித்ததோ விஞ்ஞான பிரிவில் தமிழ்சைவம் பற்றிய பெரிய அறிவு ஏதுமற்ற நிலையில் என்னம்மா செய்யச் சொல்லுகிறாய்? அந்த நேரம் எனக்கு கோபம் கூட வந்தது. அப்போது மீண்டும் அந்த ஒளி உக்கிரமாக வந்து மோதியது போல் உணர்ந்தேன். பயத்துடன் என்னையறியாமல் செய்கிறேன் என்று என்வாய் முணுமுணுப்பதைப் பார்த்தேன் "சரி செய்கிறேன்" ஆனால் நான் கேட்டது என்னவோ இங்கே நடந்தது என்னவோவாக இருக்கிறது. எனக்கு அதற்கான சக்தியை தா என வேண்டினேன். மனமோ விபரிக்க முடியாத அமைதியான நிலையில் இருப்பதை உணர்ந்தேன். எனது அம்மா அன்று பாடசாலைக்குச் செல்லாததால் நான் லீவுக்கடிதத்தை எழுதி அலுவலகத்திற்குக் கொடுத்து விட்டு அம்மாவை பார்க்கச் சென்றேன். என்னைக் கண்டதும் மகள் உன்னைப்பார்க்கவே பாவமாக உள்ளது மெலிந்து கண் எல்லாம் உள்ளே போய்விட்டாய். உன்னுடன் உதவிக்கு இருக்கும் ஆச்சியை அனுப்பிவிட்டு எங்களுடன் வந்து இருங்க என்றார். மற்ற இரு பிள்ளைகளின் படிப்பு பாதிக்கப்படும். வின்சன்ற், விபுலானந்தாவிற்கு ஒவ்வொருநாளும் சென்றுவருவது சிரமம் என்பதால் இல்லை அம்மா பிரச்சினையில்லை சமாளித்துக் கொள்கிறேன் என்றேன். புத்தக அலுமாரியில் இருந்து ஒரு கட்டு புத்தகங்களை கொண்டு தந்து "வாசித்துப்பாருங்க" என்றார். திடீரென ஏன் மகள் கலைத்துறைப் பாடங்களைப் படியுங்களன் என்றார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஏனெனின் 3 பாடங்கள் விஞ்ஞானப் பிரிவில் சித்தி இருந்தது. தாதிவேலை வந்தும் அம்மா விரும்பாததால் செல்ல வில்லை அம்மாவின் விருப்பத்தால்தான் பாலர் பாடசாலை ஆசிரியர் வேலையை ஏற்றேன். எப்போதும் கூறுவார் "குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்றானவர்கள்" என்று அதை அனுபவித்தேன். "வேறுவேலை செய்வதற்கா சொல்லுகிறீர்கள்" என்று கேட்டேன் கலைப்பிரிவு, இலக்கியங்கள் மனதிற்கு இதமானவை. என்றார் சிரித்துக் கொண்டே. சரி என்ன பாடங்கள் அம்மா எடுக்க என்றேன் தமிழும், இந்து நாகரீகமும்,

நாடக அரங்கியல், அளவையியல் எடுங்க தமிழும், சமயமும் நான் உதவுகிறேன், மற்றைய இரண்டு பாடங்களையும் படிக்கவேண்டும் என்றார். ஒருநாளும் அப்படிச் சொல்லாதவர் அன்று அப்படிக் கூறியது மனதிற்கு ஒரு நெருடலாக இருந்தது, அம்மன் கோயிலில் நடந்ததைக் கூற வாயெடுத்தேன். யாரோ வந்து அம்மாவை அழைத்ததால் கூற முடியவில்லை. ஏனெனில் வேறுயாராவது அப்படிக் கூறியிருந்தால் நான்கூட நம்பியிருக்க மாட்டேன். மாபெரும் தெய்வசக்தி ஒன்று உள்ளது என நம்பினேன், ஆனால் பௌதீக அதீத கருத்துக்களில் நம்பிக்கை இருந்ததில்லை. யாரிடமும் கூறுவதில்லை, கூறலாமோ என்ற பயமும் இருந்தது.

வீட்டிற்கு வந்ததும் மகளுக்கு காய்ச்சல் விட்டு சிறிய பருக்கள் மறைந்து போய் இருந்தது. மகள் விளையாடிக் கொண்டிருந்தாள் எனது ஒன்று விட்ட அக்காவின் மகள் வீட்டிற்கு வந்திருந்தார். அன்ரி A/L விண்ணப்பத்தை நிரப்பித் தாருங்கள் என்றார் நிரப்பிக் கொடுத்,தபின் மேலதிகமாக இருக்கிறதா என்று கேட்டேன் உடனே எடுத்துத்தந்தார். எப்போது முடிவுத் திகதி என்று கேட்டதற்கு நாளை என்று கூறியதை தொலைபேசியில்கேட்டபின் கணவரிடம் பரீட்சைக்கும் போட அனுமதி கேட்டேன். நானும் நேற்று நினைத்தேன் நானும் இல்லைதானே வீட்டில் பெரிதாக வேலைகளும் இருக்காது பிள்ளைகளின் வேலைகளை முடித்து பாடசாலைக்கு சென்றுவந்தால் சிறிது ஓய்வெடுத்தபின் நிறைய நேரமுள்ளதால் படிங்க, வெளியே சென்றுபடிப்பதுகஷ்டம் வீட்டிலே படிப்பதற்கு ஒழுங்கு செய்யுங்கள் பணம் கொடுப்போம் என்றார். வேலை செய்வதே விருப்பமில்லாதவர் படிக்கச் சொன்னதை கேட்டு ஆச்சரியமாக இருந்தது. A/L விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து அனுப்பிவிட்டேன். சியாம்ளா என்னும் நண்பி அப்போது வந்தார். பரீட்சை எடுப்பதை பற்றி கூறினேன். அளவையியல் ஆசிரியராக இருந்ததால் 6 மாதத்திற்குள் பாடத்திட்டத்தை முடிப்பதாகக் கூறினார். தனக்குத் தெரிந்த திரு. திலகநாதன் ஆசிரியர் நாடக அரங்கியலுக்கு சிறப்பானவர் அவரை ஒழுங்கு செய்கிறேன் என்று கூறிக் கொண்டிருந்தபோது அந்த ஆசிரியர்


அவ்வழியே வந்தார் அவருடன் திரு. அன்பழகன் என்னும் ஆசிரியரும் வந்தார். இந்துசமயம் படிப்பிப்பவர் அன்றே எல்லாப் பாடத்திற்குமான ஆசிரியர்கள் ஒழுங்கு செய்யப்பட்டு விட்டனர். பிறகு படித்தேன் சித்திரா, றூபா என்னும் சகோதரிகள் உதவினர். பரீட்சை எழுதினேன் மிகவும் சிறப்பாகச் சித்தி பெற்றபின் கணவர், பெற்றோர், வெளிவாரியாகப் படிக்கச் சொல்லி பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பதிவு செய்து படித்தேன் 1ம் வருடம் சித்தியடைந்து இறுதி ஆண்டில் பரீட்சைக்கு முதல்நாள் எனக்கு சோதனைக்குப் போக இயலாது என்று கூறினேன். "ஏன் இவ்வளவு காலம் படித்துவிட்டு ஏன்போக முடியாது?" என்றார் கணவர். எனக்கு நித்திரை வருவதாக இல்லை கேள்விகள் வந்து கொண்டேயிருக்கிறது பயமாகவும் இருக்கிறது. தயவு செய்து நாளை சோதனைக்குச் செல்லக் கட்டாயப்படுத்தாதீர்கள் என்றேன். ஒரு நித்திரை மாத்திரை தந்து நித்திரை கொள்ளச் செய்தார். மறுநாள் கேள்விவிடை நின்றுவிட்டது மனம் மூளை நன்றாக இருந்தது. சென்று எழுதினேன், எனக்குத் தொடர்ச்சியாக வந்த கேள்விகளே அங்கே இருந்தது. கையை உதறி உதறி எழுதினேன். பரீட்சையில் சித்தியடைந்து பட்டமும் கிடைத்தது. பின் டிப்ளோமா இந்து தர்மாச்சாரியர் தேர்வில் சித்தியடைந்து வந்தாறுமூலை பல்கலைக்கழகத்தில் Diploma முடித்து தற்போது M.A. செய்து கொண்டிருக்கிறேன். அதற்கிடையில் கவிதை தானாகவே எழுத்தத் தொடங்கினேன். அம்மா உதவி புரிந்தார். சிறுவர் இலக்கியங்கள், அரச ஊழியர்களுக்கான ஆக்கத்திறன் போட்டி - 2 வருடங்கள் பரிசு கிடைத்தது, சிறுகதை, நாடகம், வில்லுப்பாட்டு, விவாதப் போட்டிகளில் பல பரிசில்கள் கிடைத்தது பட்டதாரி ஆசிரியர் நியமனம் கிடைத்தது. காத்தான்குடி, மீரா பாலிகா வித்தியாலயத்திற்கு ஆனால் அம்மனிடமிருந்து அனுமதி கிடைக்கவில்லை அது பெரியகதை காரணமும் தெரியவில்லை ஒரு நாள் (2009) கனவில் விஸ்வருபமாக அம்மனைக் கண்டேன் என்னைப்பற்றி எப்போது கூறப்போகிறாய் என்று கேட்டார் கண் விழித்து மலங்க மலங்க விழித்தேன். சுனாமியில் காப்பாற்றி இருக்கிறார், அறிவை தமிழ் சைவ அறிவை பெற்றுக்கொள்ள உதவியுள்ள தாய்க்கு நான் என் கடமையைச் செய்யவில்லையே என்று மனம் வருந்தினேன். சுனாமியால் பாதிக்கப்பட்ட

ஆலயமும், கிராமமும் நிழற்படமாகத் தோன்றின. பாடசாலைக்குச் சென்றுவிட்டேன். பி.ப. 4 மணிபோல் திரு. குணசீலன் வந்திருந்தார். என்ன மகன் வந்தீர்கள் என்று கேட்டதற்கு, அன்ரி நாளைக்கு அம்மன் முகப்பு சிலையை தூக்கி வைக்கப் போகிறார்கள், நாகதம்பிரான் கோயிலுக்கும் கல்லு வைக்கப் போகிறார்கள் கட்டயாம் வாருங்கள் என்று கூறிச்செல்லவே வந்தேன் என்றார். மீண்டும் அம்மன் சிலை அந்த இடத்திற்கு சிறிது மேலே முகப்புசிலை அமர்த்தப்பட்டது. மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது அன்றிலிருந்து அம்மன் வரலாறு எழுதுவதற்கான தகவல் பலரிடம் தேடி அலைந்தேன். தகவல் அறிந்தவர்களது ஆவணங்கள் எல்லாம் சுனாமியில் அழிந்து போய்விட்டதால் மிகவும் சிரமப்பட்டே தகவல்களை பெறக் கூடியதாக இருந்தது. தகவல்களும் ஒன்றுக்கொன்று முரணாகக் கிடைத்தன. ஏனெனில் 32 - 50ம் ஆண்டு காலத்தில் நடந்த விபரங்கள் இருந்த பலருக்குத் தெரியாமல் இருந்ததே காரணமாகும். வயதில் மூத்த சிலரைக் கண்டு தகவல் அறிந்தேன் ஆலய பரிபாலன சபையினர் உதவி செய்தனர். பல நூல்களைத் தேடினேன். முடிவில் என்னால் இயன்ற அளவு அன்னையின் வரலாற்றை எழுதியுள்ளேன் தெரியாமல் ஏதும் தவறுகள் இருப்பின் குறை பொறுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.


சுனாமிக்கு முதல் நாள் ஒரு வயதுபோன பெண் நாளை எல்லோரும் அழியப்போகிறீர்கள், ஊர் அழியப்போகிறது என்று கூறி கத்தித் திரிந்ததாகவும் ஊரில் பலர் அதைக் கேட்டதாகவும் கூறுகின்றனர். தற்போது ஆலயத்தில் ஆஞ்சநேயருக்கு சந்நதம் கொண்டு ஆடும் திரு.பா.யோகச்சந்திரன் ஒரு வளவிற்குள் சென்றால் அங்கேயுள்ள குறைபாடுகளைக் கூறி நிவர்த்தி செய்யும் அருளை பெற்று பலரின் இன்னல்களை களைந்து வருகிறார்.








14 8:46 AM



# ஆலய வளர்ச்சிக்கு உதவியோர்

நாவலடி ஸ்ரீமாரி கடலாச்சியம்மன் ஆலயம் ஸ்தாபிக்கப்படவும் வளர்ச்சி பெறவும் தம் வாழ்வை அர்ப்பணித்த பலர் நினைவு கூரப்பட வேண்டியவர்களாக உள்ளனர். அந்த வகையில் ஊரவர்களின் ஒத்துழைப்புடன் இவ்வாலயத்தைக் கட்டுவித்த திரு.குஞ்சித்தம்பி தம்பியப்பா குடும்பத்தினர், ஊரவர்கள் பந்தல்கள் அமைத்தல், ஆலய கட்டட நிதி ஆலய வளர்ச்சிக்காக உடலாலும் உள்ளத்தாலும் உழைத்த மக்கள் நினைவு கூரப்பட வேண்டியவர்களாவார்கள். ஆரம்ப காலத்திலிருந்து இன்றுவரை இருந்து வந்த வண்ணக்குமார், பரிபாலனசபையினர், தலைமைப் பூசாரிமார், துணைப்பூசாரிமார், வெளியூர் பூசாரிமார் பல ஆண்டுகளாக பாடுபட்டுழைக்கும் கழகத்தினர் (நாவலர், கோல்ட்பீஸ் கழகம்) கிராம அபிவிருத்திச் சங்கம் (மாதர், ஆண்கள்) சடங்கை எடுத்து நடாத்தி உற்சவ காலத்தைச் சிறப்பிக்கும் சடங்கு உபயக்காரர்கள் சிலையை அமைத்து வடிவமைத்து கொடுத்துதவிய திரு. நல்லதம்பி கணபதிப்பிள்ளை குடும்பத்தினர், நாவலடி ஊர்மக்களுடன் வெளியூர் மக்களும், நலன் விரும்பிகளும், பக்தர்களும், ஆலயவளர்ச்சியில் பெரிதும் பங்கு கொண்டுள்ளனர். ஆலயம் பாதிப்புக்குள்ளான வேளைகளில் புனருத்தாரண நிதி ஒதுக்கீட்டை வழங்கிய இந்து கலாச்சார அமைச்சு, பெரும் நிதி ஒதுக்கீட்டை வழங்கிய சகவாழ்வு மன்றம், ஆலயத்துடன் ஒன்றியிருந்து மரணமானவர்கள் (திரு. வேலுப்பிள்ளை பூசாரி அவர்கள், திரு. சோமசுந்தரம் பூசாரி அவர்கள், திரு. சோமபால மற்றும் ஆலய ஆலோசகர்கள், போஷகர்கள்) தற்போதுள்ள மகாசபையினர், பரிபாலனசபை உறுப்பினர்கள், தற்போதுள்ள ஆயுட்கால போஷகர் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து 1ம் உபயச் சடங்கை எடுத்து நடத்தும் உபயக்காரர்களான கோட்டைக் கல்லாற்றைச் சேர்ந்த அமரர். இராமக்குட்டி கதிரமலை குடும்பத்தினர் வெளியூரில் இருந்துவந்து தொடர்ச்சியாக 1ம் சடங்கை செய்து செல்கின்றனர். அனைவருமே நினைவு கூரப்பட வேண்டியவர்களாவர்.

-திரு. நாகலிங்கம் ஆசிரியர்-

# நாவலடி கடலாச்சியம்மன் பேரில் பாடப்பெற்ற காவடிப்பாடல்கள்

அ. அழகு கயிலாயமதை விட்டு நீங்கி
அலைகடலின் ஓரமதிலமர வெண்ணி
கிழக்கினிலே வங்க சாகரத்தினோரம்
கீர்த்தியுடன் வந்தமர்ந்த தாயேநீரும்
பழகுதமிழ் நாவலடி அமர்ந்ததாலே
பார்தனிலே தொழுவோர்கள் அனந்தமுந்தன்
கடலினிய பொற்பாதம் தொழுதோமம்மா.....
கமல முகவதனி கடலாட்சித்தாயே.....

ஆ. ஆதவனும் அலைவாயில் விட்டுநீங்கி
அண்டமதில் சஞ்சாரஞ் செய்யுமுன்னே
நாதமறை ஓங்காரி உன்பாதத்தை
நாளெல்லாம் ஒளிக்கரத்தால் வணங்கிச் செல்வான்
பாதங்கள் இந்நிலத்தி லனந்தமம்மா
படர்சடைமேல் நிலவணிந்தோன் தேவியாரே
ஆதரிக்க எழுந்தோடி வந்துமேதான்....
அன்னைகடலாட்சியே அபயந்தாராய்.....

இ. இடையறாதுன் கோவில்நாடி வந்து
இந்நிலம் வாழ் மாந்தரெல்லாம் துயரம் கூறி
மடைபாக்கு பழங்கள்வைத்து மனதுநொந்து
மாதாவே உன்பாதத்தை வணங்கிப்போற்ற

கடைவிழியால் நோக்குவதும் நீதிதானோ
கருங்குவளை விழிதிறந்து கருணைஈந்து
அடைந்தெம்மை ஆட்கொண்ட துயரம்தீர....
அன்னைகடலாட்சியே அருள்தா தாயே.....

ஈ. ஈஸ்வரியே உமது திருப்பாதந் தன்னை
இணையில்லா அலைக்கரங்கள் வணங்கிப்போற்ற
பாசமுடன் குளிர் தென்றற் காற்று வந்து
பாதம்பணிந்துபாருலகி லெங்குஞ்செல்ல
பேசரிய புகழென்றுந் தரவே யெண்ணிப்
பெருமையுடன் நாவலடி அமர்ந்த தாயே
மாசகற்றி மாந்தருளப் பேதம்போக்க.....
மாதாவே கடலாட்சி அருள்தா தாயே....

உ. உற்றவளாம் உமை வணங்கிப் போற்றிசெய்தால்
உயர்ந்துவரும் ஊறுதுன்பம் அகலுமென்று
பற்றுடனே உமதில்லம் நாடிவந்து
பார்பதியே உமதுபாதம் வணங்கிப்போற்ற
பெற்றவளே மனமுருகா திருப்பதேனோ?
பெரும்பிழைகள் செய்தோமோ அறியோமம்மா
தற்காத்து எமக்கருள வென்றுமேதான்....
தரணி புகழ் கடலாட்சித்தாயே வாராய்.....

ஊ. ஊரிலுள்ளோர் உயரானித் திங்கள்வந்தால்
உற்றவளாம் உன்கோயில் நாடிவந்து
மாரியே உளமகிழ்ந்து மடைகளிட்டு
மன்றாடித் தொழுதேற்றும் காட்சிகண்டும்
தாரிட்ட கழுத்துடனே தாயே நீரும்
தயவின்றி இருப்பதுவும் நீதிதானோ?
நேரிட்ட துன்பமெல்லாம் அகலச்செய்வாய்.....
நெய்த நிலமுறையு கடலாட்சித்தாயே....

எ. எட்டாத தூரமெல்லாமிருந்து மக்கள்
எழிலார்ந்த உமது திருக்கோயில்நாடி
மட்டற்ற மனச்சுமையைத் தீர்க்கவந்து
மாதாவே உமைப்பணிந்து நிற்கும்போது
எட்டியொரு முறையேனும் பாராவண்ணம்
ஏந்திழையே இருப்பதுவும் நியாயந்தானோ?
திட்டமுடனுன் பாதந் துதித்தோமம்மா....
திருந்திழையே கடலாட்சித் தாயேபோற்றி....

ஏ. ஏகாந்த மானதொரு சூழல்தன்னில்
எங்களையே காக்கவென்று அமர்ந்தாயே
நோகாமல் வாழ்ந்துவந்த குலங்களுள்ளே
நோயெனவே பகைபடர்ந்து கொண்டதம்மா
ஏகாத இடமெல்லா மேகிச்சென்று
எந்தமிழர் படும்மல்லல் அதிகந் தாயே
வேகாவெயில் கடந்து வந்தளம்மின்....
வேதனையைத் தீரு கடலாட்சித்தாயே....

ஐ. ஐயிரண்டு சிரமுடைய தசமுகன்தான்
அசைத்திட்ட உயர்மலையிலுறையுமந்த
பையரவம் பூண்டிட்ட தேவனான
பரமசிவன் பாகமதை விட்டு நீங்கி
உய்யவே எமைக்காத்து வரங்களீந்து
உயர்வுடனே வாழவைத்த தாயேநீரும்
மெய்சோர்ந்து போகுமுன்னே ஓடிவந்து.....
மெல்லி கடலாட்சியே வரந்தா தாயே.....

ஒ. ஒற்றுமையாய் வாழ்ந்திட்ட இனங்களுள்ளே
ஓதரிய பகைவந்து சூழ்ந்ததம்மா
பெற்றவள் நீ பேதத்தைத் தீர்ப்பாயென்று
பேதலித்துக் கையேந்திப் போற்றுகின்றோம்

உற்றவளே உமது அருள் தன்னாலிந்த
ஊர்தோறும் படுமல்லல் தனையேதீர்த்து
நற்பேறு பெற்றுநாம் நலமாய் வாழ......
நாயகியே கடலாட்சி அருள்தா தாயே....

ஓ. ஓதரிய உன்புகழைப் பாடும்போது
ஓசையதுதேனாகப் பாயுதம்மா
ஆதரிப்பாயென்றுந்தன் இல்லந்தேடி
ஆச்சியரே உமைநாடி வந்தோமம்மா
நாதமறை ஓங்காரியான தாயே
நாதருடன் இடபமதில் தானேயேறி
பாதகங்கள் எமைவந்து சூழுமுன்னே...
பட்சம்வைத்தெமைக்காரும் மாரித்தாயே....

ஔ. ஔவியம்போற் பலகொடுமை தம்மையேதான்
அன்னையரே இவ்வுலகில் அனந்தங்கண்டும்
கௌவிடு வெங்கொடுமைகளைக் களையாவண்ணம்
கருணையின்றி இருப்பதுவும் நீதிதானோ?
செவ்வையாய்வாழ்ந்திட்ட வாழ்வும்மாறி
செகமனைத்தும் கொடுமைகளே பெருகுதம்மா
கொவ்வையிளங் கனிவாயால் வரமுமீந்து....
கொடுந்துயரைத் தீரு கடலாட்சித்தாயே.....

ஃ. ஃ அக்கென்ற நுதல் விழியோன் துணைவியாகி
அழகுநிறை கயிலாயம் விட்டுநீங்கி
மக்கள் படுந்துயமதைக் களையவெண்ணி
மாதாவே நாவலடி வந்தமர்ந்தாய்
திக்கனைத்துங் கொடுமைகளே பெருகுதம்மா
தீர்த்தெமது மனதிலுறை துயரம்போக்க
பக்கமதில் எழுந்தோடி வாருமம்மா....
பார்போற்றும் கடலாட்சித் தேவியாரே.....

# கடலாட்சி அம்மன் பாடல்கள்

திரு.த.நல்லலிங்கம் ஆசிரியர்

கடலாட்சி அம்மன் புகழ் பாடுகின்றேனே - இதைக்
கருணையுடன் கேட்டு நிதம் களித்திடுவீரே (கடலாட்சி)

1. கயிலைமலை உறையுமீசர் பாதம் நீங்கியே - எம்மைக்
காத்திடவே உமையவளும் கருணைகொண்டுமே
பாதிமதி அணிந்தவன் தன்பாதம் வணங்கியே - எங்கள்
பார்வதியாள் பூமிதனை நோக்கி நடந்தனள் - (கட)

2. வங்கக் கடலைக்கடந்துவந்து உமையவள்தானும்- எங்கள்
வளங்கொழிக்கும் இலங்கை நகர்க் கிழக்கில் தோன்றியே
வெண்மணலின் பரப்பில் முத்துப்பாதம் பதித்துமே - நல்ல
வீரநடை நடந்து உலாதானும் வந்தனள் - (கட)

3. கலைமலிந்த நாவலடிக் கடலின் கரையிலே - என்றும்
கருணைமழை பொழிய அம்மன் மனதுகொண்டுமே
மலைமகளும் மாகடலின் கரையின் ஓரமே - தங்கி
மகிழ்வுடனே கோயில் கொண்டு அருளுஞ் சொரிகிறாள் (கட)

4. அலைகடலில் எழுந்துவரும் ஆதவன்தானும் - எங்கள்
அன்னை கடலாட்சி பாதம் பணிந்து செல்கிறான்
தென்றலதுதவழ்ந்துவந்து எங்கள் தாயவள் - பட்டுத்
தேகம்மீதுபடர்ந்து குளிர்ச்சி ஊட்டிச் செல்கிறான் - (கட)

5. காவடியை எடுத்துப்பால் ஆடிவருவதும் - பெண்கள்
கருப்பூரச்சட்டி ஏந்திக் கண்ணீர்வடிப்பதும்
சேவடியைப் புகழ்ந்து அம்மன் தன்னை அழைப்பதும் - எங்கள்
செந்திருவாள் கடலாட்சி இல்லிலதிகமே - (கட)

6. அம்மை கடலாட்சி பூசை தொடங்கும் நேரமே - அந்த
அருமைமிகு அருளைக்காண கண்ணீ சிந்துமே
செம்மையான குறிகள்சொல்லித் துயரம் தீர்த்திடும் - காட்சி
செய்திடுவாள் கடலாட்சி இல்லிலனந்தமே - (கட)

7. ஆனிமாதம் பௌர்ணமி நன்னழகு நாளிலே - எங்கள்
அம்மை கடலாட்சியவள் அழகுகாணவே
தேனியது வந்துகூடும் வண்ணம் போலவே - எங்கள்
தேவிகடலாச்சி இல்லில் மக்கள் கூட்டமே - (கட)

8. தூரத்தூரில் இருந்து வரும்மக்கள் கூட்டமே - எங்கள்
துரந்தரியாள் கடலாட்சி முன்றில் நிறையுமே
காரணியாள் கடலாட்சி பூசைநேரமே - மக்கள்
கதறியழுங் காட்சி காணக் கண்கள் போதுமோ - (கட)

9. பௌர்ணமியுங் கூடுகின்ற நேரந்தன்னிலே - எங்கள்
பாவைகடலாட்சியம்மன் குளிர்த்திபாடியே
ஆதவனும் எழுந்து வரும் நேரத்தன்னிலே - எங்கள்
அம்மன் கும்பம் சொரியுங்காட்சி செப்பல்கூடுமோ - (கட)

10. பால்பழங்கள் பள்ளையமும் படையல் செய்துமே - அன்புப்
பாவைகடலாட்சித் தாயின் வாழிபாடியே
வேல்விழியாள் கடலாட்சி அமிர்தமுண்டுமே - மக்கள்
வேதனையைத் தீர்க்குங் காட்சி அனந்தமனந்தமே - (கட)

**கடலாட்சி, கடலாட்சி, கடலாட்சியம்மா. கடலாட்சி**
**கடலாட்சி, கடலாட்சி, கடலாட்சியம்மா, கடலாட்சி**

1. கடலாட்சி அம்மா உன்னைக் கைதொழுது போற்றுகிறோம்
கருணை புரிந்தெங்களையும் காத்தருள வாதாயே
நேர்த்தியான பாடல்செய்து நெகிழ்ந்துருகிப் பாடுகிறோம் - 2
நேரிழையே கடலாட்சி நேசமுடன் கார்தாயே -
நேசமுடன் கார்தாயே (கட)

2. காலமெல்லாம் உன்னினைவே கடலாட்சித் தாயாரே
காவல் தெய்வமாகி எமை காத்தருளுந் தாயாரே
ஞாலமெலாம் துன்பமெனுந்துயர்மேகம் சூழ்ந்ததம்மா - 2
ஞானத்தின் நாயகியே நாடிவந்து கார்தாயே -
நாடிவந்து கார்தாயே (கட)

3. வேகாத வெய்யிலிலே வேதனையைக் கூறவந்தோம்
வேதத்தின் நாயகியே வேதனையைத் தீர்தாயே
பாகாக உருகிமனம் பனிக்குதம்மா கண்ணீரும் - 2
பார்பதியே கடலாட்சி பட்சமுடன் கார்தாயே -
பட்சமுடன் கார்தாயே (கட)

4. பலவூரின் மாந்தரெலாம் பாவை உமை நாடிவந்து
பட்டதுன்பம் சொல்லியழ பாராது இருப்பதுமேன்
குலமெல்லா மழியுதம்மா குவலயத்தின் நாயகியே - 2
குறைகளைந்துஎங்கள் மனக் குறைதீருந் தாயாரே -
குறைதீருந் தாயாரே - (கட)

**குயிலுங்கூவுது கொம்பமர்ந்து குயிலுங் கூவுது**
**கோதை கடலாடசியம்மன் கோயிலாலை மரத்திலமர்ந்து**
**(குயிலும்)**

1. ஆதி கயிலாயமுறை அன்னை மகமாரியவள்
அத்தனார் இடப்பாகம் தன்னையே விட்டேகி
மேதினியில் புகழராம் மேன்மைமிகு நாவலடி - 2
மேன்மையுற வந்தமர்ந்த மெல்லிடையைப் புகழ்ந்து, புகழ்ந்து
(குயிலும்)

2. வங்கக் கடலோரமதாய் வந்தமர்ந்த தாயவளை
வாயாரப் போற்றிநிதம் வணங்கிடும் மாந்தர்களை
ஏங்காமல் அருளளிக்கும் ஏந்திழையாள் கடலாட்சி - 2
எப்போதும் அருளளிக்கும் எழிலதனைப் புகழ்ந்து, புகழ்ந்து
(குயிலும்)

3. வெண்மணற் பரப்பிலமர்வேல் விழியாள் கடலாட்சி
வேப்பிலை கையேந்தி வேதனை போக்கிடவே
பூணணிப் பாவையர்கள் பூவை கடலாட்சியினை - 2
புகழ்ந்துமே பாடுவதைப் பூங்குயிலும் புகழ்ந்து, புகழ்ந்து
(குயிலும்)

4. ஆழ்கடலெழுந்து வரும் ஆதவனும் அன்புடனே
அம்மை கடலாட்சிபதம் அனுதினம் போற்றுவதை
நாள்பல கண்டுவந்த நற்றமிழ்க் கோகிலமும் - 2
நாயகியாள் கடலாட்சி நற்புகழைப் புகழ்ந்து புகழ்ந்து
(குயிலும்)

5. நற்கலைமலித்தமிழ் நாவலடி ஊரதனில்
நலங்களை நல்குமெங்கள் நாயகி கடலாட்சி

பற்பலவாக வரும் படரிடர் துன்பமெல்லாம்
பார்த்தருள் புரிந்தகற்றும் பாவையினைப் புகழ்ந்து, புகழ்ந்து
(குயிலும்

6. கற்பூரச் சட்டியேந்திக் காரிகையர் கதறியழ
கடலாட்சித் தாயவளும் கருணைகள் பொழிவதையும்
பொற்பதத்தால் நடந்து பூவையரின் வதனமதை - 2
பூங்கரத்தால் துடைக்கும் புதுமையினைப் புகழ்ந்து, புகழ்ந்து
(குயிலும்)

1. கடலை ஆட்சி செய்பவளே கடலாட்சி - அதன்
கரையிலுள்ளோர் தமைக் காக்கும் கடலாட்சி
திடமுடனே உமைப்பணிந்தோம் கடலாட்சி - வரும்
தீவினையைக் களைந்திடுவாய் கடலாட்சி (கட)

2. விடமுண்ட நீலகண்டர் கடலாட்சி - தமை
விட்டகன்று இங்க வந்தீர் கடலாட்சி
மடைபாக்கு பழங்களுடன் கடலாட்சி - உமை
மன்றாட ஓடிவந்தோம் கடலாட்சி (கட)

3. நடைமெலிந்து ஓடிவரும் மாந்தருக்கு - நீயும்
நற்கருணை நல்குமம்மா கடலாட்சி
விடையேறி நாதருடன் கடலாட்சி - நீரும்
வீதியுலா வாதாயே கடலாட்சி (கட)

4. பரவைக் கடலொலிக்குதம்மா கடலாடசி - உந்தன்
பாவைமுகம் பார்த்து நிதம் கடலாட்சி
அரவணிந்தோன் தன்னுடனே கடலாடசி - நீயும்
ஆடலையோ திருநடனம் கடலாட்சி (கட)

5. கற்பூரச் சட்டி ஏந்திக் கடலாட்சி - இங்கு
காரிகையர் சிந்துங் கண்ணீர் கடலாட்சி
பொற்பதத்தால் நீ நடந்து கடலாட்சி - உந்தன்
பூங்கரத்தால் துடைத்திடம்மா கடலாட்சி (கட)

6. ஆனிமாதப் பௌர்ணமியில் கடலாட்சி - உந்தன்
அழகுமுகங் காணவந்தோம் கடலாட்சி
மேனிமெலிந் தோடிவந்தோம் கடலாடசி - உந்தன்
மேன்மைமிகு அருளைத்தாருங் கடலாட்சி (கட)

7. கண்காணாத் தூரம் நீங்கிக் கடலாட்சி - உன்னைக்
காணவந்த மக்களுக்கே கடலாட்சி
புண்ணாகி அவர்கள் மனஞ்சோரும் முன்னே - உந்தன்
பூமுகத்தைக் காட்டிடம்மா கடலாட்சி - (கடலாட்சி)

**அலைகடலின் கடற்கரையில் - அன்புடனே தானமர்ந்த**
**அன்னை கடலாடசியதம் அனுதினமும் தாள்போற்றி**

1. கடலாட்சி உமைக் காணவே வந்தோம்
கருணைமழையைப் பொழிதாயே
விடமுண்ட கண்டரின் நாயகியே எங்கள்
வினைகள் அகல அருள்தாயே
திடமுடனே உமைத் தோத்தரித்தோ மெங்கள்
தீராக் கவலையைத் தீர்தாயே
படமெடுத்தாடிடும் பாம்பணி கண்டரின்
பாவையரே எமைப் பார்தாயே - (கடலாட்சி)

2. அள்ளிமலர் தனைத்தான் சொரிந்தெங்களின்
அன்னை உன்பதந் தான் பணிந்தோம்
துள்ளி எழுகடற் கரையினிலமர்ந்த

தோகையரே கடலாட்சியம்மா
வெள்ளை மணலிலும் வீசிடும் காற்றிலும்
விருப்பமுங் கொண்ட அந்நாளில்
கொள்ளை இன்பங் காணவேவநத
கோதையரே கடலாட்சியம்மா - (கடலாட்சி)

3. அன்னை உன்பதந் தானினைந்தென்றும்
அல்லையல் ஊரார் தானிங்கே
மன்றாடி மனவேதனை போக்கிட
மகிழ்ந்தே வருவார் தாயாரே
பொன் மனத்தாளே பூவையரே எங்கள்
புகழொழியே கடலாட்சியம்மா
உன்னிரு கண்ணால் நோக்கியே என்றும்
உயர்வரந் தாருந் தாயாரே - (கடலாட்சி)

4. ஆனிமாதம் வரும் பௌர்ணமி தனிலே
அன்னை உன்பாதங் காணவந்தோம்
மேனிமெலிந்து வெய்யிலில் வாடி
மெல்லிஉனையே நாடிவந்தோமத்
தேனியது வந்து கூடுதல் போல
தேவி உனையே தேடிவந்தோம்
ஏனிதென்றெண்ணா எங்களையேற்று
ஏந்திழையே துணை தா தாயே

# குளித்தீப் பாடல்

## சில வரிகள்

தேடுபுகழ் மட்டுநகர் சென்றாய் குளிர்ந்த தருள்வாய்
சென்றந்தக் கன்னியர்கள் திரைகடலிலேரயமிர்தம்
வந்துண்ட சப்தகன்னி மாதே குளிர்ந்தருள்வாய்
மலையரசன் தனக்கு மகளாயவதரித்து
அரியதிரையில் வந்த அம்மே குளிர்ந்தருள்வாய்

**நல்லையா சாஸ்திரி அவர்களால் எழுதப்பட்ட**
**கடலாச்சியம்மன் காவியத்தின் சில வரிகள்**

ஓடியே ராமேஸ்வரக்கரையை ஓதரிய
யாழ்ப்பாண நகர்களில் நிண்டு தேடியே
தென்கோணயீசர் மலைகண்டு
சீக்கிரமாகவே வேலைதனில் வந்து
மாடமதுசேர் மட்டுமாநகரில் வந்து

கரைமீதிலே மகிழ்வினுடனே மதில்மேவு
நாவலடி தன்னில் மூலைகடலில் நண்ணியதே
கன்னியதே பூசைமடை பொங்கலும் உகந்து திறல்
மருவு எருவில்நகர் போரதீவும் என்னமுயற
கரவாகு தன்பகுதி தன்னிலும்... அக்கரைப்பற்று தன்னிலும்

# கடலாச்சியம்மன் கும்மி

**சுந்தரமதி - வேதநாயகம். (ஆசிரியை)**

**தந்தன தானன தன்னானே தன**
**தான தந்தன தானானே**

**கும்மியடி பெண்ணே கும்மியடி - இந்த**
**கோதை கடலாச்சி அருளாலே**
**அமுதத்தமிழில் மகிழ்ந்து பாட**
**அன்னையே வரம் தாருமம்மா**

கும்மியடி பெண்ணே கும்மியடி - இந்த
கோதை கடலாச்சி கோயிலிலே
கொட்டுங்கடி கை கொட்டுங்கடி - இந்த
கோமகள் கடலாச்சி கோயிலிலே

(கும்மியடி பெண்ணே)

கும்பத்துமாரியாய் வந்தாளடி - எங்கள்
கோவிந்தன் தங்கையும் ஆனாளடி
கயிலை மலையில் உறைந்த - உமையை
குழுமி கைகொட்டி கும்மியடி

(கும்மியடி பெண்ணே)

கன்னியர் சூழ்ந்திட வந்தாளடி - எங்கள்
கடலில் நீராடி மகிழ்ந்தாளடி
களிப்புடன் பூசையும் கண்டாளடி - எங்கள்
காவல் தெய்வமாயும் நின்றாளடி
(கும்மியடி பெண்ணே)

கதிரொளி திக்கெட்டும் பரந்திடவே - அன்னை
கடலினில் திருமஞ்சம் நீராடுவாள்
காளியாய் மாரியாய் கடலாச்சியாய் - வந்த
கோமதியைக் கும்மி கொட்டுங்கடி
(கும்மியடி பெண்ணே)

நல்லவளாம் புகழ் கொண்டவளாம்- மக்கள்
நல்லோரை வாழ்விக்கும் வல்லவளாம்
நேசம் நிறைந்த நெஞ்சத்தினால் - மக்கள்
நோய்க்கு மருந்து ஆனவளாம்.
(கும்மியடி பெண்ணே)

குங்குமம் தன்னைக்காப்பவளாம் - நல்ல
கன்னியர் உள்ளத்தில் வாழ்பவளாம்
கோபம் தணிக்க குளிர்த்தி பாடிட
குளிர்ந்து நல்லருள் கொடுப்பவளாம்.
(கும்மியடி பெண்ணே)

உடுக்கை ஒலிகேட்டு மகிழ்வாளடி - அவள்
ஊழித் தாண்டவம் புரிவாளடி
ஊரைவாழ வைப்பவள் அவளே
உத்தமி புகழைப் பாடுங்கடி
(கும்மியடி பெண்ணே)

ஆடிப் பௌர்ணமி நன்நாளில் - தாயார்
அன்பருக்குக் காட்சி அளிப்பவளாம்
அன்புடன் சடங்கு கண்டு களிக்கும்
அன்னையைப் போற்றியே ஆடுங்கடி
(கும்மியடி பெண்ணே)

வங்கக்கடல் தேடி வந்தாளடி
வாழ்ந்திடக் கோயிலும் கொண்டாளடி
வாழ்த்தி வரவேற்று வழிபடுவோம் - அன்னை
வாழிய வாழிய வாழியவே!
(கும்மியடி பெண்ணே)



# கடலாட்சியம்மன் காவியம்

1. திரு மருவுங் கைலயங்கிரி மீதிலேயன்று
தேவர் மலையரசனிடம் தேவி யெனவந்த
வருண குல வல்லி மகளாக வருகின்ற
திரைசேர் மடந்தையெனும் வருலோக மாதாவின் மீது
அருள் பெருகவேயாசி மதுரதமிழ் காவியம்
அறியாத சிறியோன் அடியேன் உரைக்க
கருணையுடன் சரஸ்பதியும் மால் மருகோனும்
கணபதியும் முன் நின்று காத்தருள வேணும்

2. காத்தருளியே இலங்காபுரியில் அன்று
கண்கண்ட தெய்வமிது என நம்பினோர்க்கு
நோய் தீர்த் தருளியே உலகமாதா எனத்தான்
தேவி தன் கலையில் வரும் தெய்வம் நீயன்றோ
பார்த்திருந்தால் பிள்ளை பசி தீருமோ அன்னை
பால் தருவதென்று பசி ஆற்றுவோம் என்று
காத்திருந்தால் வயிறு நிறையுமோ அம்மா
கடலாட்சி மாரெனுங் கமல பூரணியே

3. கமல பூரண கௌரி உமையவளும் நீயே
கணிதமுடன் பூசை புரிவமென ஓதச்
சமயமிது என்று பரனுமை தனக்குச்
சாமதிலே குடிலை ஓதிடும் அந்நேரம்

குமரவேலுங் குடிலை யாமறிவோமென்று
கோலமுடனே சொருபமாறி வழி சென்று
குமு குமு மென மனமுலவு
மலரமுக பதியினிற் குமரவேலும்
வந்து குடியிருந்தனரே.

4. இருந்தளவிலே குடிலை வேலவறிந்து
ஏகியே தெய்வ லோகந்தனில் இருந்து
அருந்தவர்கள் முனிவர் தேவாதிகள் தமக்கு
அறிவித்த செய்திதனை அரனார் அறிந்து
வரும் பிடியெனச் சாபமதியரசனுக்கு
மகளாக வாருமென வரமது கொடுத்து
விரும்பியே மீனாகும் என்னும்வேளையிலே
வேலவரும் மகரமாய் ஆழிவீழ்ந்தனரே

5. மகரமீனாகியே ஆழியில் வீழ்ந்த பின்
அதியரசனுக்கு வரும் கப்பல்கள் எல்லாம்
தகரப் பெருங்கடலிற் பொருதே - உடைத்து
தங்கியே கந்தர் விளையாடி வருநாளில்
நிகரற்ற செய்தி கண்டு இசைய மணிகட்டி
நேரினை என் மகளினதும் வதுவையில் - வென்றிந்த
மகரமீன் தன்னை இழுப்பவர் தனக்கென்
மகளையே மணமுடிப்பதென உரைத்தான்

6. மன்னவன் உரைத்த மொழி அரனாரறிந்து
மகரமதை இழுக்கவே மனதினில் நினைந்த
என்னவோ தெரியாது அதியரசன் மகளார் தனை
வதுவை புரிவமென எண்ணி மிகனைந்து
வண்ணமிக வாகியே வடிவது குலைந்து
மறுவடிவு கொண்டு வேதிய சொருபமாகி

முன்னமே நந்தியம் பெருமானையப்போ
மோகமுடனே அழைத்தே வழி நடந்தார்.

7. வழி நடந்தே சப்த சாகரக் கரைதனில்
வந்துநின்றே பாச வலை முடியுமென்று
தெளிவான தேவ வோதி முதலாகத்
திறமையொடு வலைதனை விரைவினில் முடித்தார்
நீருமே தோணிவிட வாருமேன்றேறி
நேசமுடன் மகரத்தை வலைக்குள் வளைந்து
ஊரிலுள்ள பேரெல்லாம் வந்தே இழுத்து
ஓ வேலா என மகரம் ஓடி வந்ததுவே

8. ஓடியே மகரமீன் கரைதனில் வந்தபின்
ஓலமெவே இசையாமணியடித்திடத்
தேடியே செய்தியது அரசனு மறிந்து
தேவியொடு மகள் வதுவை செய்ய வேனும்
என்று கூடியே கல்யாணப் பந்தல் அமைத்துக்
குலமான வேதியரை வரவேயழைக்க
வாடியே கண்டு மிகவே தாயும் மகளும்
மானமில்லை என்றிருவர் தானுயிருமிழந்தார்.

9. தானுயிரிழந்த கதை வேதியனறிந்து
சவமாகிலும் இன்று தரவேனு மென்ன
மானுமென நந்தீசர் நீறது கொடுக்க
மாமனார் தாமறிவோமென உரைத்தார்
ஓம் நமசிவாயமென நீறதையெடுத்து
ஓதியெறியத்தேவி தாயுடனெழுந்தாள்
சேனையுடனே சென்று திருமணமுடித்து
சிவனுமையும் தெய்வ லோகத்தமைந்தார்.

10. ஐயனா மீசுரன் தன்னையும் வாழ்த்தி
அரிவை உமை மனமகிழ வாசிகள் புகன்று
ஒய்யாரமாகவே போமென உரைக்க
உத்தரவு பெற்றவர்கள் விட்டவ்விடம் சென்று
தெய்வலோகந் தனக் கேகிடும் அந்நேரம்
தேவியாம் வருணகுல வல்லி மகிழ்வாக
வய்ய முழுதும் பெற்ற மாதாவெனதான்
வயங்கு கையலங்கிரியில் வந்து நின்றனளே

11. கைலயங்கிரிமீது கண்ணியர்கள் சூழவே
கருத்தொருமித்து விளையாடிவரு நாளில்
ஓலமுடனே ரெத்ன மணிக்கப்பலேறி
ஓம் தக்காரா கந்தனோடி வரு நாளில்
சீலமுடனே கப்பல் ஓடாதது கண்டு
செய்தி செயலறியாது திகைத்து நிற்பளவில்
வாலைபுவனேஸ்வரி திரைசேர் மடந்தை
மாது தனையே கண்டு மலரடி பணிந்தார்.

12. மலரடி பணிந்தெனதுமாதாவே நீரிங்கு
வந்த வாறேது வகையுரையு மென்ன
அதியரசனுக்கு மகளாகி நானிங்கு
வந்தேனிலங்கைக்கு வரவேணு மென்று
கணிதமுடனே பூசை அர்ச்சனை புரிந்து
கன்னிமாரோடு கூடிக் கப்பலேறி
அனி மட்டக்களப்பாழிசேர் கரையருகில்
அழகான நீழலி அணைந்து நின்றதுவே

13. வந்தணையவே தாரைதவில் கொம்புதாளம்
மத்தளமுடன் பெரிய எக்காளம் ஊதச்
சந்தனமுடன் பூகமலர் தாழை கதலி


சாந்துசவ்வாதுடன் பன்னீர் கரும்பு
முந்தவே பாவாடை மேற்தட்டியோடு
முன்னீடுபின்னீடு வெற்றிலை பரப்பிச்
சிந்தையுடனே காவியங் குரவை போடத்
திரை சேர் மடந்தை சிவ பூசை கொண்டனளே

14. பூசைதனிலே வந்து வல்லிமார் கன்னிமார்
பொங்கலொடு பாலமிர்தம்
உண்டு உள மகிழ்ந்து - நேசமுடன்
உள் மனத்துயர் தணிந்து - நித்தமும்
அடியவர்கள் தனக்கருள் கொடுத்து
பாசவலை கொண்டு யமதூதர் வந்திடினும்
பயமிலாது உனது பேர் பகரவகலாதோ
தேசமுழுதுங் காவல் கொண்டு விளையாடும்
திரைசேர் மடந்தையே தெய்வமாதாவே

15. சீர்வாழி புவிவாழி வேதமுறை வாழி
திருநீறு வாழி சிவ சமய நெறி வாழி
பார்வாழி கண்டிமா ராசாதி ராசன்
பாத்திபன் வாழி செங்கோல் முறமைவாழி

தார்வாழி வேல்வாழி மயில்வாழி எங்கள்
சண்முகவர் வாழி சரசோதி மிக வாழி
கார்வாழி மட்டக்களப்பு நகர் வாழி
கடலாச்சிமார் நீடு நீடுவாழ வாழியதே.


# ஆலயம் சம்பந்தப்பட்ட படங்கள்







21:02
24. 6. 2004



2004


17:26
7. 2004





48



7 53







8:03
2 7 2004



7. 2004





# சுனாமிக்குப் பின்னரான ஆலயத்தின் தோற்றம்









## உசாத்துணை நூல்கள்


1. மட்டக்களப்பு சைவக்கோயில்கள் 5 கோயில்கள் (கட்டுரை) மகாவித்துவான் வீ.சி. கந்தையா

2. வாய்மொழி மரபுகள் வரலாற்று மூலங்களாக (கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை கலைபண்பாட்டு பீடம்.)

3. மட்டக்களப்பு தமிழகத்தில் இந்துப்பண்பாடு (மந்திர பூர்வபத்ததி முறைவழிபாடு.)

4. மகாமாரித்தேவி திவ்வியகரணி - திரு.செ. உருத்திரகுமார் தந்துதவிய ஏட்டுப்பிரதி. சி.கணபதிப்பிள்ளை - அட்டப்பள்ளம் - தொகுப்பாசிரியர்.

5. இலங்கைத் திருநாட்டின் இந்துக் கோயில்கள்

6. மட்டக்களப்பு வாழ்வும் வழிபாடும் - தமிழ் சாகித்திய விழா சிறப்பு மலர்

7. தெய்வகானம் - திரு.த. நல்லலிங்கம் ஆசிரியர்

8. பராசக்தி பாமாலை மு. கணபதிப்பிள்ளை.

9. மட்டக்களப்பில் இந்து சமய கலாசாரம் - எஸ். தில்லைநாதன் (சைவப்புலவர்)

10. கல்லாற்று கடல்நாச்சியம்மன் துதிமலர் பாடல் திரட்டுபண்டிதர் சீ.தம்பிராசா



## நூலாசிரியை திருமதி. சுந்தரமதி வேதநாயகம் பற்றி

இந்த சகோதரி மட்/மாவட்ட தமிழ் எழுத்தாளர் பேரவையில் இணைந்து கொண்ட காலமிருந்து அறிமுகமானவர். சோமசுந்தரம் பூரணமதி தம்பதிகளின் புதல்வியாவார்.

**சுயவிபரம்**

மாநகரசபை பாலர் பாடசாலை தலைமை ஆசிரியராக கடமை புரிந்துவருகின்றார். பட்டதாரி ஆசிரியை நியமனம் காத்தான்குடி மீராபாலிகா வித்தியாலயத்தில் கிடைத்தும், தவிர்க்க முடியாத காரணங்களினால் கடமையைப் பொறுப்பேற்க வில்லை.

கலைமாணிப்பட்டப் படிப்பை பேராதனை பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாகவும், ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்திக்கும், முன்பள்ளி கல்விக்குமான டிப்ளோமா பட்டப்படிப்பை வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழகத்திலும், முதுகலைமானிப் பட்டப்படிப்பை (M.A.) சமூகவியலை விஷேட பாடமாக எடுத்து காமராஜர் பல்கலைக்கழகத்திலும் இறுதி ஆண்டு செய்து கொண்டிருக்கின்றார்.

அறநெறி இந்து தர்மாச்சாரியர் தேர்வில் சித்தி பெற்றுள்ளார்.

**புனைப் பெயர் : நிலா**

பல ஆக்கங்கள் சுந்தரமதி வேதநாயகம் என்ற பெயரில் வெளிவந்துள்ளன கலை, இலக்கியத் துறை, கவிதை, சிறுகதை, நாடகம், நடனம், ஓவியம், விவாத அரங்கு, கவியரங்கு, வில்லுப்பாட்டு போன்றவற்றில் ஈடுபாடுடையவர்.

**எழுத்துலகில் இதுவரை ஆற்றிய பணிகள்**

கவிதை, சிறுகதை, சிறுவர் இலக்கியங்கள்.

இதுவரை பல பரிசில்கள், கௌரவங்கள், வெற்றிகள் பெற்றுள்ளார்.

**இலக்கிய மன்றங்களின் பங்களிப்பு வகித்த பதவிகள்.**

பாடசாலை இலக்கிய மன்றம் தலைவி, செயலாளர்.

விழுது - ஆற்றல் மேம்பாட்டு மன்றம் - நிருவாக உறுப்பினர் இலக்கியத்துறை பங்களிப்பு.

மட்/திருமறைக்கலாமன்றம் : நிருவாக உறுப்பினர் இலக்கிய துறைப் பங்களிப்பு.

வட-கிழக்கு முன்பள்ளி ஆசிரியர் ஒன்றியம் - தலைவி மகளிர்,

சிறுவர் இலக்கிய கலைப்படைப்புக்கள் (நாடகம், வில்லுப்பாட்டு, நடனம், கவிதை)

மட்/தமிழ் எழுத்தாளர் பேரவை - செயலாளர் கலை, இலக்கிய ஊக்குவிப்பு, கௌரவிப்பு.

மட்/மண்முனை வடக்கு கலாசாரப் பேரவை நிருவாகக்குழு உறுப்பினர்.

நாவலடி - மகளிர் சங்கத்தலைவி, மாதர் கிராம அபிவிருத்தி சங்க செயலாளராய் இருந்துள்ளார்.

கல்லடி நூலக வாசகர் வட்ட நிருவாக உறுப்பினருமாவார்.

லயன். கலாநிதி.வை. வீரசிங்கம் J.P.
முன்னாள் தமிழ் எழுத்தாளர்,
பேரவைத் தலைவர்.

ஆதவன் அச்சகம், அரசடி, மட்டக்களப்பு. தொ.பே. 065-2222076